# ஊதா நிறத் தீவு

## 1

பிரசன்ன வெங்கடேசன். சுகாதார அமைச்சர். தமிழ்நாடு என்ற எழுத்துக்களைத் தாங்கியிருந்த மார்பிள் பலகைக்குக் கீழே காத்திருந்தார் செல்வபாண்டியன்.

காலை ஏழு மணிக்கே வந்துவிட்ட செல்வபாண்டியனுக்கு இப்போது மணி எட்டாகியும் இன்னமும் மந்திரியின் அறைக்குள் செல்ல அனுமதி கிடைக்கவில்லை.

செல்வபாண்டியனுக்கு தமிழ்நாடு எய்ட்ஸ் நோய் கட்டுப்பாட்டுத் துறையில் ஐ.ஏ.எஸ். கேடரில் பவர்ஃபுல் உத்தியோகம். இந்த நிமிடம் தமிழ்நாட்டில் எத்தனை எய்ட்ஸ் நோயாளிகள் இருக்கிறார்கள். அவர்களில் ஆண்கள் எத்தனை பேர். பெண்கள் எத்தனை பேர். இரண்டாயிரத்துப் பதினொன்றாவது ஆண்டு முடிவதற்குள் இன்னும் எத்தனை பேர் சிக்குவார்கள் என்பது போன்ற தகவல்கள் எல்லாம் உதட்டு நுனியில் வைத்திருப்பவர். ரிடையர்மெண்ட்டுக்கு இன்னும் ஐந்து வருடங்களைப் பாக்கி வைத்திருக்கும் செல்வபாண்டியனுக்கு மனைவியில்லை. ஒரே மகன் மட்டும். அவனும் எம்.எஸ். படித்துவிட்டு ஒரு பிரைவேட் நர்ஸிங்ஹோமில் சீஃப் டாக்டராக உத்தியோகம் பார்க்க - செல்வபாண்டியனுக்கு பிரச்னையில்லாத வாழ்க்கை.

மேலும் ஒரு பதினைந்து நிமிடம் காத்திருந்தபோது மந்திரியின் செயலாளர் எட்டிப்

**- ராஜேஷ்குமார்**

பார்த்தார்.

"வாங்க செல்வபாண்டியன்.."

எழுந்து உள்ளே போனார்.

"இன்னிக்கு ரொம்ப நேரம் உட்கார வெச்சிட்டீங்க.."

"என்ன செய்யறது..? காலையிலிருந்தே கட்சிக்காரங்க கூட்டம். உட்கட்சிப் பூசல். ஒவ்வொருத்தனையும் சமாதானம் பண்ணி அனுப்பறதுக்குள்ளே அய்யாவுக்கு போதும் போதும்னு ஆயிடுச்சு.. காலையிலிருந்து பாதி ஹார்லிக்ஸ் பாட்டில் காலி."

"எல்லாரும் போய்ட்டாங்களா..?"

"ம்.. போய்ட்டாங்க. இனிமே நீங்களும், அய்யாவும் நிம்மதியா உட்கார்ந்து பேசலாம்."

செயலாளர் உள்பக்கம் இருந்த அறையைக் கைகாட்டி விட்டு வேறு பக்கம் போய்விட, செல்வபாண்டியன் பூஜையறைக்குள் நுழைவது போன்ற பவ்யத்தோடு நுழைந்தார்.

சுகாதார அமைச்சர் ப்ரசன்ன வெங்கடேசன் பளீரென்ற வெள்ளை வேஷ்டியிலும், பனியனிலும் காஷுவலா உட்கார்ந்து கையில் அன்றைய காலை பேப்பரை பிரித்து வைத்திருந்தார்.

"வணக்கம் சார்.."

"வாய்யா செல்வபாண்டி நல்லாருக்கியா?"

"நீங்க அமைச்சரா இருக்கறபோது என்னோட சௌக்கியத்துக்கு என்ன சார் குறைச்சல்..?"

"உட்காருய்யா.."

செல்வபாண்டியன் உட்கார, அமைச்சர் பார்த்துக் கொண்டிருந்த பேப்பரை சிரத்தையாய் மடித்து டீபாயின் மேல் வைத்தார்.

"உன்னை எதுக்காகக் கூப்பிட்டேன் தெரியுமா?"

"சொல்லுங்க..?"

"இந்தா.. இந்த லெட்டரைப் படி.." சொன்னவர் டீபாயின் கீழ்த்தட்டில் வைத்திருந்த ஒரு கவரை



எடுத்து நீட்டினார்.

செல்வபாண்டியன் அந்தக் கவரை வாங்கி உள்ளே இருந்த கடிதத்தை உருவி எடுத்துப் படித்தார்.

சாய்வான தமிழ் எழுத்துகளில் அந்தக் கடிதம் எழுதப்பட்டிருந்தது.

*மதிப்புக்குரிய சுகாதாரத்துறை அமைச்சருக்கு..*

*நந்தா எழுதிக் கொண்டது. வணக்கம்.*

*இதுவரைக்கும் உங்களுக்கு ஏழு கடிதங்கள் எழுதி விட்டேன். இது எட்டாவது கடிதம். என் கடிதங்களுக்கு உங்களிடமிருந்து பதில் வராததால் நேரிலேயே சந்திக்க இரண்டு தடவைகள் முயற்சி செய்தேன். உங்களிடம் முன்னமேயே அப்பாயின்மென்ட் வாங்காமல் சந்திக்க முடியாது என்று உங்கள் பி.ஏ. சொல்லிவிட்டார். எனவே இந்த எட்டாவது கடிதத்தை உங்களுக்கு எழுதிக் கொண்டிருக்கிறேன். நான் என் முந்தைய ஏழு கடிதங்களில் எந்த விஷயங்களைச் சொன்னேனோ அதையே இப்போதும் சொல்கிறேன். எய்ட்ஸ் நோய்க்கு மருந்து இல்லையென்று டி.வி.யிலும், பத்திரிகையிலும் அரசாங்கம் விளம்பரம் செய்து வருகிறது. இது ஒரு தவறான விளம்பரம். எய்ட்ஸ் நோய்க்கு மருந்து இருக்கிறது. அது என்ன மருந்து என்பது எனக்குத் தெரியும். அதைப் பற்றி நான் உங்களிடம் ஒரு மணி நேரம் பேச விரும்புகிறேன். எனக்கு நேரம் ஒதுக்கிக் கொடுங்கள். என் மற்ற கடிதங்களைப் போல் இதையும் அலட்சியம் செய்து விடாதீர்கள். தயவு செய்து பெரிய மனது வைத்து என்னுடன் பேச ஒரு மணி நேரத்தை ஒதுக்கிக் கொடுங்கள். உங்கள் பதில் கடிதத்துக்காக வழிமேல் விழி வைத்துக் காத்திருக்க ஆரம்பித்து விட்டேன்.*

*இப்படிக்கு*

*நந்தா*

செல்வபாண்டியன் கடிதத்தைப் படித்து விட்டு கவரைத் திருப்பி ஃப்ரம் அட்ரஸைப் பார்த்தார்.

எழுதிப் போட்டுடு.."

"எஸ் சார்.."

செல்வபாண்டியன் கும்பிட்டுக் கொண்டே எழுந்தார்.

"காபி சாப்பிடறியா..?"

"வேண்டாம் சார். நான் கிளம்பறேன். மதுராந்தகத்துக்குப் பக்கத்துல நேவக்கரை கிராமத்துல ஒரு ஃபேமிலியில் இருக்கற ஏழு பேருக்கு எய்ட்ஸ் நோய் இருக்கறதா ஒரு ரிப்போர்ட் வந்திருக்கு.. போய்ப் பார்க்கணும்.."

"சரி கிளம்பு. அந்த நந்தா விவகாரத்தைப் பேசி முடிச்சதும் எனக்குப் போன் பண்ணு.."

செல்வபாண்டியன் பவ்யமாய் தலையாட்டி விட்டு அறையினின்றும் வெளிப்பட்டார். பார்வைக்குக் கிடைத்த செக்ரட்ரியிடம் பார்வையாலேயே விடைபெற்றுக் கொண்டு சிவப்பு பெயிண்ட் பூசப்பட்ட இலாகா ஜீப்புக்கு வந்து ஏறி உட்கார்ந்தார்.

ட்ரைவர் கேட்டார்.

"எங்கே சார்..?"

"மொதல்ல ஆபீசுக்குப் போ. அங்கே ஒரு பத்து நிமிஷ வேலையைப் பார்த்துட்டு நேரா மதுராந்தகம் போயிடலாம்."

ட்ரைவர் ஜீப்பைக் கிளப்பினார்.

காலை ஒன்பது மணிக்கே உறைக்க ஆரம்பித்து விட்டது சென்னையின் வெயில். தெருக்களில் ஓடிய ஜீப் பதினைந்து நிமிஷப் பயணத்துக்குப் பிறகு சிந்தாதிரிப்பேட்டையில் இருந்த எய்ட்ஸ் நோய் ஒழிப்புத் துறைக்குச் சொந்தமான அந்த கட்டடத்துக்கு முன்பாய்ப் போய் நின்றது.

செல்வபாண்டியன் இறங்கி உள்ளே போக, பணியில் இருந்த அலுவலர்கள் பவ்யமாய் விஷ் பண்ணி ஒதுங்கினார்கள். ப்யூனிடம் கேட்டார்.

"ஸ்டெனோ வந்தாச்சா..?"



"வந்தாச்சு சார்.."

"என்னோட ரூமுக்கு அனுப்பு.."

ஏ.ஸி. உறுமிக் கொண்டிருந்த தன்னுடைய அறைக்குள் நுழைந்து எக்ஸ்க்யூட்டிவ் நாற்காலியில் சாய்ந்தார்.

அடுத்த இரண்டு நிமிடங்களில் ஸ்டெனோ மஞ்சுளா லிப்ஸ்டிக் சிரிப்போடு வந்து "குட்மார்னிங்" சொன்னபடி உள்ளே வந்தாள்.

"மிஸ். மஞ்சுளா.."

"சார்.."

"இன்னிக்கு உடனடியா ஒரு லெட்டர் டெஸ்பாட்ச் ஆகணும். வெரி அர்ஜெண்ட்..."

"சொல்லுங்க சார்.."

"பேரையும், அட்ரஸையும் நோட் பண்ணிக்க.. நந்தா, ஏ-89, சிறுவாணி ரோடு, பூண்டி (போஸ்ட்), கோவை - 12, இந்த ஆளுக்கு ஒரு லெட்டர் எழுதி உடனடியா என்னை வந்து பார்க்கச் சொல்லு.."

மஞ்சுளா அவர் சொன்ன அட்ரஸைக் குறித்துக் கொள்ளாமல் வியப்பாய் அவரையே பார்க்க.. அவர் எரிச்சலானார்.

"என்ன அப்படிப் பார்க்கறே..?"

"சார், நீங்க சொன்ன இந்த நந்தா ஆண் கிடையாது. பெண்.."

"பெண்ணா..?"

"ஆமா சார்.."

"உனக்கெப்படித் தெரியும்..?"

"இந்த நந்தா உங்களைப் பார்க்கறதுக்கு ஒரு மணி நேரமா வரவேற்பறையில் உட்கார்ந்திருக்கா.. இதோ பாருங்க சார்.. அவ குடுத்த விசிட்டிங் கார்டு.. நீங்க சொன்ன அதே அட்ரஸ்தான்."

வாங்கிப் பார்த்தார் செல்வபாண்டியன்.

அதே அட்ரஸ்தான்.

"மஞ்சுளா.."

"சார்.."

"அந்த நந்தாவை உள்ளே அனுப்பு. அவகூட வேற யாராவது வந்திருக்காங்களா..?"

"இல்ல சார்.. அவ மட்டும்தான்.."

"சரி. போய் அனுப்பு.."

மஞ்சுளா வெளியே போக, செல்வபாண்டியன் நந்தாவுக்காகக் காத்திருக்க ஆரம்பித்தார்.

## 2

சரியாய் ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு -

கதவு மெலிதாய்த் தட்டப்படும் சத்தம் கேட்டது. செல்வபாண்டியன் குரல் கொடுத்தார்.

"எஸ்.. கம்-இன்.."

கதவு உள்வாங்கிக் கொள்ள -

அந்த இளம் பெண் உள்ளே வந்தாள்.

இருபத்தைந்து வயதிருக்கலாம். சராசரி உயரத்தில் மாநிறம். கறுப்புப் பின்னணியில் மஞ்சள் பூக்கள் சிரித்த சல்வார் கமீஸ். காதுகளில் துளித்துளியாய் தங்கத் துணுக்குகள், இடது பக்கத் தோளில் வானிடி பேக். பளிச்சென்ற பல்வரிசையைக் காட்டி "குட் மார்னிங் சார்.." என்று சொன்னவள் "ஐயம் நந்தா.." என்றாள்.

"உட்காரம்மா.."

உட்கார்ந்தாள்.

"இப்பதான் கொஞ்ச நேரத்துக்கு முந்தி அமைச்சரும், நானும் உன்னைப் பத்திப் பேசிக்கிட்டிருந்தோம். நீ எழுதின லெட்டரை என்கிட்டக் குடுத்து உனக்குப் பதில் போடச் சொன்னார். அதுக்குள்ள நீயே வந்துட்ட.."

நந்தா ஒரு பெரிய மலர்ச்சிக்குப் போனாள்.

"எனக்கு இப்படியொரு ரெஸ்பான்ஸ் கிடைக்கும்னு நான் எதிர்பார்க்கவேயில்லை சார். அமைச்சர்க்கு நான் போட்ட லெட்டர்ஸ்க்கு பதில்



வராததினால உங்களையாவது பார்த்துப் பேசிட்டுப் போகலாம்னு வந்தேன்.."

செல்வபாண்டியன் கேட்டார்.

"உனக்குச் சொந்த ஊரே கோவைதானா..?"

"ஆமா சார்.."

"உங்க வீட்ல என்ன பண்றாங்க..?"

"சாரி சார். எனக்கு உறவுன்னு சொல்லிக்க யாரும் கிடையாது."

"நீ என்னம்மா சொல்றே..? உனக்கு அப்பா, அம்மா..." அவர் குரலை இழுக்க, நந்தா வெறுமையான புன்னகையோடு சொன்னாள்.

"ரெண்டு வருஷத்துக்கு முந்தி வரை உயிரோடு இருந்தாங்க. இப்ப இல்லை.."

"என்னாச்சு..?"

"சார். எங்கப்பா ஒரு பாட்னி புரபெஸர். ஒரு காலேஜ்ல வேலை பார்த்துட்டிருக்கும்போது தாவரங்களைப் பத்தி ஆராய்ச்சி செய்துட்டு வந்தார். அந்த ஆராய்ச்சியின் பயனாக மனித உடம்புக்கு வரக்கூடிய எல்லா வியாதிகளையும் குணப்படுத்தக் கூடிய சக்தி சில வகையான தாவரங்களுக்கு இருக்கிறது என்கிற உண்மையைக் கண்டுபிடிச்சார். அதைப் பத்தி நிறைய புத்தகங்களும் எழுதினார். அந்த புத்தகங்களை எழுதறதுக்காக பழைய சித்தர் காலத்து ஓலைச்சுவடிகளைச் சேகரம் பண்ணினார். இந்த ஆராய்ச்சியில் அம்மாவுக்கு ஆர்வம் ஏற்பட்டுப் போச்சு. அதனால ரெண்டு பேருமே சனி, ஞாயிறுகள்ல காட்டுப் பகுதிக்குப் போய் மருந்து குணம் உள்ள தாவரங்களைப் பறிச்சிட்டு வந்து லேப்ல டெஸ்ட் பண்ணிப் பார்த்தாங்க. ரெண்டு வருஷத்துக்கு முந்தி ஒரு ஞாயிற்றுக்கிழமை சிறுவாணி பாரஸ்ட்டுக்குப் புறப்பட்டுப் போனாங்க.. ஒரு குறிப்பிட்ட தாவர வகைக்காக காட்டுக்குள்ள ரொம்ப தூரம் போனவங்க மதம் பிடிச்ச யானைகிட்ட மாட்டி உயிரை விட்டுட்டாங்க. எனக்குக் கூடப் பிறந்தவங்க யாரும் கிடையாது. அதே மாதிரி அம்மா

"சார்.."

"அந்த நந்தாவை உள்ளே அனுப்பு. அவகூட வேற யாராவது வந்திருக்காங்களா..?"

"இல்ல சார்.. அவ மட்டும்தான்.."

"சரி, போய் அனுப்பு.."

மஞ்சுளா வெளியே போக, செல்வபாண்டியன் நந்தாவுக்காகக் காத்திருக்க ஆரம்பித்தார்.

## 2

சரியாய் ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு -

கதவு மெலிதாய்த் தட்டப்படும் சத்தம் கேட்டது.

செல்வபாண்டியன் குரல் கொடுத்தார்.

"எஸ்.. கம்-இன்.."

கதவு உள்வாங்கிக் கொள்ள -

அந்த இளம் பெண் உள்ளே வந்தாள்.

இருபத்தைந்து வயதிருக்கலாம். சராசரி உயரத்தில் மாநிறம். கறுப்புப் பின்னணியில் மஞ்சள் பூக்கள் சிரித்த சல்வார் கமீஷ். காதுகளில் துளித்துளியாய் தங்கத் துணுக்குகள். இடது பக்கத் தோளில் வானிடி பேக். பளிச்சென்ற பல்வரிசையைக் காட்டி "குட் மார்னிங் சார்.." என்று சொன்னவள் "ஐயம் நந்தா.." என்றாள்.

"உட்காரம்மா.."

உட்கார்ந்தாள்.

"இப்பதான் கொஞ்ச நேரத்துக்கு முந்தி அமைச்சரும், நானும் உன்னைப் பத்திப் பேசிக்கிட்டிருந்தோம். நீ எழுதின லெட்டரை என்கிட்டக் குடுத்து உனக்குப் பதில் போடச் சொன்னார். அதுக்குள்ள நீயே வந்துட்ட..."

நந்தா ஒரு பெரிய மலர்ச்சிக்குப் போனாள்.

"எனக்கு இப்படியொரு ரெஸ்பான்ஸ் கிடைக்கும்னு நான் எதிர்பார்க்கவேயில்லை சார். அமைச்சர்க்கு நான் போட்ட லெட்டர்ஸ்க்கு பதில்



வராததினால உங்களையாவது பார்த்துப் பேசிட்டுப் போகலாம்னு வந்தேன்.."

செல்வபாண்டியன் கேட்டார்.

"உனக்குச் சொந்த ஊரே கோவைதானா..?"

"ஆமா சார்.."

"உங்க வீட்ல என்ன பண்றாங்க..?"

"சாரி சார். எனக்கு உறவுன்னு சொல்லிக்க யாரும் கிடையாது."

"நீ என்னம்மா சொல்றே..? உனக்கு அப்பா, அம்மா..." அவர் குரலை இழுக்க, நந்தா வெறுமையான புன்னகையோடு சொன்னாள்.

"ரெண்டு வருஷத்துக்கு முந்தி வரை உயிரோடு இருந்தாங்க. இப்ப இல்லை.."

"என்னாச்சு..?"

"சார். எங்கப்பா ஒரு பாட்னி புரபெஸர். ஒரு காலேஜ்ல வேலை பார்த்துட்டிருக்கும்போது தாவரங்களைப் பத்தி ஆராய்ச்சி செய்துட்டு வந்தார். அந்த ஆராய்ச்சியின் பயனாக மனித உடம்புக்கு வரக்கூடிய எல்லா வியாதிகளையும் குணப்படுத்தக் கூடிய சக்தி சில வகையான தாவரங்களுக்கு இருக்கிறது என்கிற உண்மையைக் கண்டுபிடிச்சார். அதைப் பத்தி நிறைய புத்தகங்களும் எழுதினார். அந்த புத்தகங்களை எழுதறதுக்காக பழைய சித்தர் காலத்து ஓலைச்சுவடிகளைச் சேகரம் பண்ணினார். இந்த ஆராய்ச்சியில் அம்மாவுக்கு ஆர்வம் ஏற்பட்டுப் போச்சு. அதனால ரெண்டு பேருமே சனி, ஞாயிறுகள்ல காட்டுப் பகுதிக்குப் போய் மருந்து குணம் உள்ள தாவரங்களைப் பறிச்சிட்டு வந்து லேப்ல டெஸ்ட் பண்ணிப் பார்த்தாங்க. ரெண்டு வருஷத்துக்கு முந்தி ஒரு ஞாயிற்றுக்கிழமை சிறுவாணி பாரஸ்ட்டுக்குப் புறப்பட்டுப் போனாங்க.. ஒரு குறிப்பிட்ட தாவர வகைக்காக காட்டுக்குள்ள ரொம்ப தூரம் போனவங்க மதம் பிடிச்ச யானைகிட்ட மாட்டி உயிரை விட்டுட்டாங்க. எனக்குக் கூடப் பிறந்தவங்க யாரும் கிடையாது. அதே மாதிரி அம்மா

வகையிலும், அப்பா வகையிலும் யாரும் சொந்தம் கிடையாது. நான் இப்போது ஒண்டிக் கட்டை. வீட்ல துணைக்கு ஒரு சமையல்காரப் பாட்டி இருக்கா.."

"நீ என்ன படிச்சிருக்கே..?"

"நானும் எம்.எஸ்.ஸி. பாட்னிதான். படிப்பை முடிச்சிட்டு இப்போ பொட்டானிக்கல் ரிசர்ச் சென்டரில் ஸ்பெசிமன் ஃபைண்டரா வேலை பார்த்துட்டிருக்கேன்."

செல்வபாண்டியன் சில விநாடிகள் அவளையை பார்த்து விட்டுக் கேட்டார்.

"சரி. எய்ட்ஸ் நோயைக் குணப்படுத்த முடியும். அதுக்கு மருந்து இருக்குன்னு தீர்மானமா லெட்டர்ல எழுதியிருக்கியே.. அது உண்மையா?"

"உண்மைதான்.."

"அது என்ன மருந்து..?"

"சாரி.. ஏதோ தலைவலி மாத்திரை மாதிரி உடனே அதைச் சொல்ல முடியாது. அது ஒரு பாதுகாக்கப்பட்ட ரகசியம்.."

"சரி. மருநதைக் கொண்டு வந்திருக்கியா?"

"ம். கொண்டு வந்திருக்கேன்.."

"காட்டு பார்க்கலாம்.."

நந்தா தன் கையோடு கொண்டு வந்திருந்த சிறிய ப்ரிப்கேஸைப் பிரித்து ஒரு பாலிதீன் பைக்குள் பத்திரப்படுத்தி வைத்திருந்த சிறிய பாட்டிலை எடுத்தாள்.

பாட்டிலுக்குள் இருந்த மருந்து ஏதோ உருக்கிய வெள்ளி போல் மினுமினுத்தது.

"இது எப்படி எய்ட்ஸைக் குணப்படுத்தும்..?"

"சார். இந்த மருந்து ஒரு வகை சீரம். என்னோட அப்பா கண்டுபிடிச்ச மருந்து. இதுல இருந்து ரெண்டே ரெண்டு ட்ராப்ஸ் மட்டும் எடுத்து டிஸ்டில்ட் வாட்டர்ல கலந்து எய்ட்ஸ் நோயாளியோட உடம்புக்குள்ள இஞ்செக்ட் பண்ணனும். தினசரி ஒரு ஊசி வீதம் ஏழு



நாளைக்குப் போட்டாப் போதும். ஹெச்.ஐ.வி. கிருமிகள் பரவாமல் அழிய ஆரம்பிக்கும்.."

செல்வபாண்டியன் குறுக்கிட்டுக் கேட்டார். "இதை எந்த நோயாளிக்காவது குடுத்து டெஸ்ட் பண்ணிப் பார்த்திருக்கியா..?"

"நான் பண்ணிப் பார்க்கலை.."

"பின்னே..?"

"அப்பா பண்ணிப் பார்த்திருக்கார்."

"உனக்கெப்படித் தெரியும்..?"

"அப்பாவோட டைரியைப் பார்த்தது மூலமா அந்த விஷயம் தெரிஞ்சது.. இதோ அந்த டயரி.."

மறுபடியும் ப்ரீப்கேஸைப் பிரித்து நந்தா உள்ளே இருந்த அந்த டயரியை எடுத்து அவரிடம் நீட்டினாள். வாங்கிப் பார்த்தார்.

இரண்டு வருஷங்களுக்கு முந்தின டயரி அது. டயரியின் முகப்பில் ஹரிச்சந்தர் என்கிற பெயர் சாய்வான ஆங்கிலத்தில் எழுதப் பட்டிருந்தது.

"உன்னோட அப்பா பேர் ஹரிச்சந்தரா..?"

"ஆமா சார்.."

பக்கங்களை மெல்லப் புரட்டினார் செல்வ பாண்டியன். எல்லாப் பக்கங்களிலும் ஏதாவது இரண்டு வார்த்தைகள் கிறுக்கியிருந்தார். 'மால்வேசிய.. ரூட்டேசியா.. ஹைபிஸ்கல்.. ஸ்பெர்மடோஜோவா..' புரியாத வார்த்தைகள்.

நந்தா சொன்னாள்.

"சார். அந்த டயரியில் மே-14 தேதியிட்ட பக்கத்தை மட்டும் எடுத்துப் படிச்சுப் பாருங்க.."

செல்வபாண்டியன் அதில் பக்கங்களை மளமளவென்று புரட்டி மே மாதம் 14-ம் தேதிக்கு வந்தார். அந்தப் பக்கம் முழுவதும் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது. தமிழாக்கம் மனதில் ஓடியது.

'உண்மையிலேயே இப்படியொரு அற்புதம் நடக்கும் என்று கனவில்கூட நான் நினைத்துப் பார்த்தது இல்லை. உலகத்தில் உள்ள தலைசிறந்த

மருத்துவ விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்க முடியாத எய்ட்ஸ் நோயைக் குணப்படுத்தும் மருந்து இப்போது என் கைகளில். எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட என்னுடைய நண்பர் மகேந்திரனுக்கு இப்போது அந்த நோயிலிருந்து விடுதலை. போன மாதம் அவருடைய இரத்தத்தில் காணப்பட்ட எச்.ஐ.வி. கிருமிகள் இப்போது இல்லை. ஏழு ஊசியில் அந்த நோய் காணாமல் போய்விட்டது.'

அடுத்த பக்கத்துக்கு வரிகள் தாவியது. செல்வபாண்டியன் பார்வையை கொண்டு போனார்.

'இந்தச் சாதனையை என் மனைவியிடம் சொன்னபோது அவள் என்னுடைய அளவுக்கு சந்தோஷம் கொள்ளவில்லை. சில சந்தேகங்களை எழுப்பினாள். உங்கள் நண்பர் மகேந்திரனுக்கு உண்மையிலேயே எய்ட்ஸ் இருந்ததா? அவருடைய இரத்தத்தில் இருந்தது எச்.ஐ.வி. கிருமிகள்தானா? நன்றாக சோதனை செய்து பார்த்தீர்களா? இது போன்ற கேள்விகளை எழுப்பினாள். அதனால் எனக்கு சந்தேகம் உண்டாயிற்று. இதெல்லாம் உண்மையிலேயே எய்ட்ஸ் நோய்க்கான மருந்துதானா என்பதைக் கண்டுபிடிக்கவும், அதை ஊர்ஜிதம் செய்யவும் இன்னொரு எய்ட்ஸ் நோயாளியை வீட்டுக்குக் கூட்டி வந்து ட்ரீட்மெண்ட் கொடுத்துப் பார்த்து விட வேண்டியது தான். அதற்கான முயற்சிகளை இன்றிலிருந்தே ஆரம்பித்து விட்டேன்.'

வாசகங்கள் முடிந்து போயிருக்க.. டயரியின் பக்கத்தை திருப்பினார் செல்வபாண்டியன்.

காலியாக இருந்தது.

அந்தப் பக்கம் மட்டுமில்லை. அதற்கடுத்த அனைத்துப் பக்கங்களுமே காலியாக இருந்தன.

செல்வபாண்டியன் நந்தாவிடம் நிமிர்ந்தார்.

"என்னம்மா பதினேழாம் தேதிக்குப் பிறகு எல்லா பக்கங்களும் காலியாகவே இருக்கு.."

நந்தா சட்டென்று கண்களில் நிறைந்து விட்ட



நீரோடு தலையைக் குனிந்தபடி சொன்னாள்.

"என்னோட அப்பாவும், அம்மாவும் சிறுவாணி பாரஸ்ட்டுக்குள்ள போய் யானைக்குப் பலியானது மே பதினேழாம் தேதிதான் சார்.."

"ஓ.. சாரி..." சில விநாடிகள் மௌனம் சாதித்த செல்வபாண்டியன் பிறகு தன் தொண்டையைக் கனைத்துக் கொண்டு கேட்டார்.

"வேற ஒரு எய்ட்ஸ் நோயாளியை வெச்சு ட்ரீட்மெண்ட் கொடுத்துப் பார்க்கறதுக்கு முந்தியே உன்னோட ஃபேரண்ட்ஸ் பலியாயிட்டாங்க இல்லையா?"

"ஆமா சார்.."

"சரி.. உன்னோட அப்பா ப்ரெண்ட் மகேந்திரன் இப்போ எங்கேயிருக்கார்..?"

"ஈரோட்ல..."

"அவரைப் போய்ப் பார்த்து இந்த டயரி விவகாரம் எல்லாம் உண்மையான்னு கேட்டியா?"

"கேட்டேன்.."

"அவர் என்ன சொன்னார்..?"

"உண்மைதான்னு சொன்னார்.."

"அவர்க்கு எய்ட்ஸ் இருந்தது உண்மைதானா?"

"உண்மைதான். அதை அவரே மனசார ஒப்புகிட்டார். என்னோட அப்பாகிட்ட ஒரு வாரம் ட்ரீட்மெண்ட் எடுத்துக்கிட்டதுல நோய் குணமானதையும் ஒத்துகிட்டார்."

"சரி. மொதல்ல மகேந்திரனுக்கு எய்ட்ஸ் நோய் இருப்பதைக் கண்டுபிடிச்சது யாரு...?"

"டாக்டர் ஜோதிவேல். அவர்தான் மகேந்திரனின் குடும்ப டாக்டர். ஆனா அவர் இப்போது உயிரோடு இல்லை. ஆறு மாசத்துக்கு முன்னாடிதான் ஹார்ட் அட்டாக்ல இறந்து போனார்.."

"மகேந்திரனுக்கு எய்ட்ஸ் நோய் இருந்ததுன்னு டாக்டர் ஜோதிவேல் கன்பார்ம் பண்ணிக் கொடுத்த ரிப்போர்ட்ஸ் ஏதாவது இருக்கா..?"

"இல்லை.."

செல்வபாண்டியன் புன்னகைத்தார்.

"இப்படி எந்த ரிப்போர்ட்டும் இல்லாம எப்படி மகேந்திரனுக்கு எய்ட்ஸ் இருந்ததை நம்பறது..?"

"அப்பா தன்னோட டயரியில எழுதி வெச்சிருக்காரே.."

"டயரியில இருக்கறது உண்மையா?"

"அப்படீன்னா.. இதுவரைக்கும் நான் சொன்னது எல்லாமே பொய்னு நினைக்கறீங்களா?"

"இதோ பாரம்மா நந்தா. நீ பொய் சொல்றேன்னு நான் சொல்ல வரலை. எய்ட்ஸ் நோயைக் குணப்படுத்தறது சாதாரண விஷயம் இல்லை. எல்லாத்துக்கும் சரியான ஆதாரங்கள் இருக்கணும். உன்னோட அப்பாதானே இதைக் கண்டுபிடிச்சார்?"

"ஆமா சார்.."

"அவரும் இப்போது உயிரோட இல்லை. மகேந்திரனுக்கு எய்ட்ஸ் இருந்ததாய்ச் சொன்ன டாக்டர் ஜோதிவேலும் இப்போது உயிரோடு இல்லை. இப்போ உயிரோடு இருக்கறது மகேந்திரன் மட்டும்தான். வேணும்னா அந்த மகேந்திரனை வரவழைச்சு அவரோட ப்ளட்டை டெஸ்ட் பண்ணிப் பார்க்கலாம்."

"அதுக்கு அவர் ஒத்துக்க மாட்டார் சார்.."

"ஏன்..?"

"தனக்கு எய்ட்ஸ் நோய் இருந்ததுங்கற உண்மை இப்போதைக்கு வெளியே தெரிஞ்சா அவரோட மகளுக்கு கல்யாணம் நடக்கறதுல ஒரு முட்டுக்கட்டை விழலாம்.."

"என்ன பொண்ணும்மா நீ.. இப்படி எல்லா ஜன்னலையும் சாத்தி வெச்சிட்டா உண்மைங்கற வெளிச்சம் எப்படி வெளிய வரும்..?"

"சார். எய்ட்ஸ் நோயைக் குணமாக்கற மருந்து இருக்கு. இதை ஒரு எய்ட்ஸ் நோயாளிக்குக் கொடுத்து டெஸ்ட் பண்ணிப் பார்க்கலாமே..?"



"அது முடியாதும்மா.."

"ஏன் சார்..?"

"புதுசா கண்டுபிடிக்கப்பட்ட ஒரு மருந்தை தன்னிச்சையா எந்த நோயாளிக்கும் கொடுக்கக் கூடாதுங்கறது மருத்துவக் கவுன்சிலோட விதி. இந்த மருந்தை முறைப்படி டெல்லியில இருக்கற மருத்துவ விஞ்ஞானக் கழகத்துக்கு அனுப்பி கன்ஸ்யூம் பண்ணத் தடையில்லை என்கிற சர்டிபிகேட்டை வாங்கணும். அந்த சர்டிபிகேட் கைக்கு வந்த பின்னாடிதான் இந்த மருந்தை ஒரு எய்ட்ஸ் நோயாளிக்குக் கொடுக்க முடியும்.."

"அதுக்கு எவ்வளவு நாளாகும் சார்..?"

"மூணு மாசத்திலிருந்து ஆறு மாசம் ஆகலாம்.."

"எதுக்காக இவ்வளவு நாள்..?"

"புது மருந்தோட பின்விளைவுகளைக் கண்டு பிடிக்க வேண்டாமா?"

"சரி சார்.. இந்த மருந்தை உங்ககிட்ட இப்பக் கொடுத்துட்டுப் போறேன். நீங்க இதைச் சோதனைக்காக டெல்லிக்கு அனுப்பி உபயோகப் படுத்தத் தடையில்லை என்கிற சர்டிபிகேட்டை வாங்கிட்டு எனக்கு தகவல் கொடுங்க. மத்த விபரங்களை அப்புறமாப் பேசிக்குவோம்."

அவள் கொடுத்த பாட்டிலை வாங்கி பத்திரப் படுத்திய செல்வபாண்டியன் கேட்டார்.

"சென்னையில நீ தங்கியிருக்கறது எங்கே..?"

"ஹோட்டல் பிரசிடெண்ட்.."

"நீ எப்போ ஊருக்குப் போகப்போறே..?"

"நான் இன்னிக்கு நைட் ப்ளூ மவுண்ட்டன்ல கோயமுத்தூர் போறேன்."

சொல்லிவிட்டு நந்தா எழுந்தாள்.

"ஒரு நிமிஷம்மா.."

"என்ன சார்..?"

"இந்த மருந்தை டெல்லிக்கு அனுப்பறபோது இது பத்தின எல்லா டீடெய்ல்களும் வேணும்.."

"என்ன டீடெய்ல்கள் சார்..?"

"இந்த மருந்தோட தற்காலிக பெயர். இது எந்த ப்ராடக்ட்லிருந்து தயாரிக்கப்பட்டதுங்கற விபரம். அல்லோபதியா, ஹோமியோபதியா, சித்தாவா, இதுல எந்த பேஸ்? இதுமாதிரியான விபரங்களை டைப் பண்ணி அனுப்பணும்.."

"சாரி சார்.. இப்போதைக்கு நான் எதுவும் சொல்ல மாட்டேன். இதுக்கு மொதல்ல டில்லியிலிருந்து சர்டிபிகேட் வரட்டும். அதுக்கப்புறம் டாக்டர்ஸ் அடங்கிய குழுவில் அவங்களுக்கு முன்னிலையில் தான் நான் எதையும் சொல்றதா இருக்கேன்."

செல்வபாண்டியன் புன்னகைத்தார்,

"இட்ஸ் ஓ.கே. இந்த மருந்தை இன்னும் ரெண்டு நாள்ல டெல்லிக்கு அனுப்பி வெச்சிடறேன். அங்கேயிருந்து ரிப்போர்ட் வந்ததும் உன்னை உடனே காண்டாக்ட் பண்ணிக்கறேன்."

"தேங்க் யூ சார்.." நந்தா கைகளைக் குவித்து விட்டு வெளியேற, செல்வ பாண்டியன் தன் கையில் வைத்து இருந்த பாட்டில் மருந்தையே இமைக்காமல் பார்த்தார்.

'இது உண்மையிலேயே எய்ட்ஸ் நோயைக் குணப்படுத்தும் மருந்துதானா?'

## 3

இரவு எட்டு மணி.

ஹோட்டல் முன் ஆட்டோ பிடிப்பதற்காக கையில் சூட்கேஸோடு காத்திருந்தாள் நந்தா.

இரண்டு நிமிஷக் காத்திருப்புக்குப் பின் ஆட்டோ கிடைத்தது.

"எங்கேம்மா போகணும்..?"

"சென்ட்ரல்.."

"மீட்டர் போட மாட்டேன். நூறு ரூபா கொடுத்துடணும்.."



"என்னப்பா இது.. அக்கிரமமாயிருக்கு.."

"ஆட்டோ ட்ரைவர் அஞ்சு ரூபா அதிகம் கேட்டா, பகல் கொள்ளை, அக்கிரமம்னு கூப்பாடு போடுவீங்க. பதவியில இருக்கறவங்க இலட்சம் கோடின்னு அடிச்சாலும் வாழ்க.. வாழ்கன்னு சொல்லி ஓட்டுப் போடுவீங்க.."

"இதோ பார். இந்த வெட்டிப் பேச்செல்லாம் வேண்டாம்.. எண்பது ரூபா தர்றேன்.."

"சரிசரி. உட்காரம்மா.."

நந்தா சூட்கேஸோடு ஏறி உட்கார்ந்தாள்.

ஆட்டோ புறப்பட்டது.

ராத்திரி நேர சென்னை போக்குவரத்தில் விழி பிதுங்கியது. காற்று கெட்டுப்போய் பெட்ரோல் வாசனையே அடித்தது.

ஆட்டோ மவுண்ட்ரோடின் டிராபிக்கைக் கடந்து போய்க் கொண்டு இருக்கையில் ட்ரைவர் திரும்பிப் பார்த்துக் கேட்டான்.

"அம்மா.."

"என்னப்பா.."

"நீங்க எந்த ரயிலுக்குப் போகணும்..?"

"ப்ளு மவுண்ட்டன்.."

"போற வழியில எனக்காக ஒரு அஞ்சு நிமிஷம் காத்திருக்க முடியுமா?"

"எதுக்கு..?"

"சிந்தாதிரிப்பேட்டையில ஒரு டாக்டர் இருக்கார். அவர்கிட்ட தினமும் ராத்திரி எட்டு மணிக்கு நான் ஊசி போட்டாகணும். எனக்கு வந்திருக்கற நோய்க்கு ஒருநாள்கூட தவறாம ஊசி போட்டுக்கணும்.. உங்களை சென்ட்ரல்ல விட்டுத் திரும்பறதுக்குள்ள கிளினிக் பூட்டிடுவாங்க.. அதனால போற வழியிலயே நீங்க ஒரு அஞ்சு நிமிஷம் ஆட்டோவுல வெயிட் பண்ணினா நான் ஊசியைப் போட்டதும் வந்திடுவேன்.."

"லேட் ஆயிடாதே.."

"இல்லீங்கம்மா.. என்னைப் பத்தி இந்த டாக்டருக்குத் தெரியும். சவாரி வெயிட்டிங்லதான் இருக்கும்னு நினைச்சு சீக்கிரமா அனுப்பிடுவாரு.."

"எட்டரை மணிக்கு செண்ட்ரல்ல இருக்கணும்.."

"தாராளமா இருக்கலாம்மா.."

"சரி. கிளினிக் எங்கே..?"

"சிந்தாதிரிப்பேட்டைக்கு முன்னாடியே.." என்று சொன்னவன் முணுமுணுத்துக் கொண்டான்.

"என்னோட போதாத காலம். இப்படியொரு வியாதி வந்திடுச்சு.. ம். யார் யார்க்கு எந்தெந்த நேரத்துல எது வருமோ? எது வந்தாலும் அனுபவிச்சுத்தானே ஆகணும்.."

நந்தா கேட்டாள்.

"உன்னோட உடம்புக்கு என்ன..?"

"அதையெல்லாம் கேட்காதீங்கம்மா.. இந்த வயசுல வரக்கூடாத வியாதி. சேரக்கூடாத சேர்க்கையால வந்தது. எனக்கு ஒரு கெட்ட பழக்கமும் கிடையாது. அற்ப சந்தோஷத்துக்கு ஆசைப்பட்டு இப்போ காலம் பூராவும் கஷ்டப்படும்படியா ஆயிடுச்சு.."

"அது என்னன்னு சொல்லக்கூடாதா..?"

"வேண்டாங்கம்மா.. நீங்க எனக்கு செய்யற ஒரே உதவி நான் ஊசி போட்டுட்டு வர்ற வரைக்கும் ஆட்டோல வெயிட் பண்றது தான்..."

நந்தா மேற்கொண்டு பேசாமல் ஆட்டோ சீட்டுக்கு சாய்ந்து உட்கார்ந்து கொள்ள பத்து நிமிஷ பயணத்துக்குப் பின் ஆட்டோ சிந்தாதிரிப்பேட்டைக்குள் நுழைந்து ஒரு சிறிய கிளினிக் முன்பாய் நின்றது.

ட்ரைவர் இறங்கினான்.

"அஞ்சே நிமிஷம். போனதும் கபால்னு வந்திடுவேன்.."

நந்தா குனிந்து அந்த கிளினிக்கைப் பார்த்தாள். இரண்டு அறைகளோடு கூடிய கிளினிக் அது.



ட்யூப்லைட் வெளிச்சத்தில் டாக்டர் பெயர் தாங்கிய போர்டு தெரிந்தது.

எஸ்.மணிக்குமார் எம்.எஸ்.

நந்தாவுக்கு ட்ரைவரைப் பத்தின கவலை மனசுக்குள் மோதியது.

'வரக்கூடாத வியாதி என்று சொன்னாரே ட்ரைவர். ஒருவேளை எய்ட்ஸாய் இருக்குமோ? உள்ளே போய் டாக்டரிடம் கேட்டுப் பார்க்கலாமா? ஊருக்குக் கிளம்பிக் கொண்டிருக்கும் நேரத்தில் இதெல்லாம் வேண்டாத வேலை..'

நந்தா யோசித்துக் கொண்டிருக்கும்போதே - அந்தக் குரல் கேட்டது.

"எக்ஸ்க்யூஸ் மீ.."

நிமிர்ந்தாள். ஆட்டோவுக்குப் பக்கத்தில் அந்த இளைஞன் நின்றிருந்தான். சபாரி அணிந்து உயரமாய்த் தெரிந்தான்.

"நான் டாக்டர் மணிக்குமார். ஜன்னல் வழியாப் பார்த்துட்டு வர்றேன். நீங்க நந்தாதானே..?"

"ஆமா.." நந்தா திகைப்பாய்த் தலையாட்டினாள்.

"பாடனிஸ்ட் ஹரிச்சந்தரோட பொண்ணுதானே நீங்க..?"

"ஆமா.."

மணிக்குமார் புன்னகைத்தான்.

"என்னை உங்களுக்குத் தெரியுதா?"

"தெரியலையே.."

"மறந்துட்டீங்க போலிருக்கு.. பூண்டியில இருக்கற உங்க வீட்டுக்கு மூணு வருஷத்துக்கு முன்னாடி வந்திருக்கேன்.."

"அப்படியா..?"

"எஸ். நான் உங்க அப்பாகிட்ட உட்கார்ந்து பேசிட்டிருக்கும்போது நீங்க காலேஜிலிருந்து வந்தீங்க. என்னை உங்களுக்கு அறிமுகப்படுத்தி வெச்சார் உங்க அப்பா."

"சாரி. எனக்கு சுத்தமா ஞாபகம் இல்லை.."

"இருக்க வாய்ப்பில்லை. ஏன்னா நீங்க அப்போ கொஞ்சம் அப்செட்டான மூட்ல இருந்தீங்க. அன்னிக்கே அதை நான் நோட் பண்ணினேன். பை த பை.. நீங்க எப்படி இருக்கீங்க..?"

"நல்லா இருக்கேன்.."

"ஊருக்குக் கிளம்பிட்டீங்க போலிருக்கு..?"

"ஆமா. ஒரு வேலையை முடிச்சிட்டேன். அதனால ஊருக்குப் போகிறேன்."

"க்ளினிக்குக்கு வாங்களேன்.."

"லேட் ஆகுது. இன்னொரு நாள் வர்றேன்.."

"எந்த ட்ரெயின்?"

"ப்ளு மவுண்ட்டன்.."

"அட... அதுக்கு இன்னும் முக்கால் மணி நேரம் இருக்கு. ஒரு ரெண்டு நிமிஷம் வந்துட்டுப் போங்களேன்.."

"இன்னொரு நாளைக்கு வர்றேனே.."

"அது என்னிக்கோ.. இப்போ க்ளினிக் வாசல்ல நிக்கறீங்க.. ப்ளீஸ் வாங்க."

நந்தா சூட்கேஸை எடுத்துக் கொண்டு கீழே இறங்கினாள்.

"வாங்க.."

மணிக்குமார் முன்னால் கூட்டிப் போனான்.

"அந்த ஆட்டோ ட்ரைவர்க்கு என்ன உடம்புக்கு..?"

"அது.. வந்து.. வந்து.."

"ம். சொல்லுங்க.."

"எய்ட்ஸ்.."

"மை குட்னஸ்.."

"எப்படியோ போய் மாட்டிக்கிட்டான். நான்தான் ட்ரீட்மெண்ட் கொடுத்துட்டு இருக்கேன்.."

"என்ன ட்ரீட்மெண்ட்..?"

"எய்ட்ஸ்க்கு எந்த ட்ரீட்மெண்ட்டும் இல்லைனு



உங்களுக்கும் தெரியும். ஆனா நோயாளியோட மரணத்தைத் தள்ளிப் போடறதுக்காக நம்பிக்கை யூட்டுற மாதிரி ஒரு பாவ்லா ட்ரீட்மெண்ட் கொடுப்போம். அந்த ட்ரீட்மெண்ட்டைத்தான் அந்த ஆட்டோ ட்ரைவர்க்கு கொடுத்துட்டிருக்கேன். இது ஒரு சாதாரண வைட்டமின் இன்ஜெக்ஷன்தான்.."

க்ளினிக்கிற்குள் நுழைந்தார்கள்.

காற்றில் ஒடிகோலின் வாசம்.

கிளினிக் சுத்தமாய் இருந்தது.

"உட்காருங்க.."

நந்தா உட்கார்ந்தாள். அவளுக்கு எதிரே இருந்த நாற்காலியில் மணிக்குமார் உட்கார்ந்தான்.

"ஏதாவது சாப்டறீங்களா..?"

"நோ.. எதுவும் வேண்டாம். ஐயாம் இன் அர்ரி.. ஆமா எங்கே ட்ரைவரைக் காணோம்..?"

"அதோ.."

ஜன்னலுக்கு வெளியே கை காட்டினான் மணிக்குமார். நந்தா பார்வையைக் கொண்டு போகக் கண்கள் வியப்பால் விரிந்தன.

ஆட்டோ ட்ரைவர் ஆட்டோவை நோக்கி வேகவேகமாய் போய்க் கொண்டிருந்தான்.

"என்ன ட்ரைவர் போய்ட்டிருக்கார்..?"

"ஆமா. அவர் வந்த வேலை முடிஞ்சது. உன்னை இங்கே கூட்டிட்டு வந்தார். விட்டார். போயிட்டார்.."

"நீ.. நீங்க என்ன சொல்றீங்க..?"

"நந்தா. அந்த ஆட்டோ ட்ரைவர் எனக்கு வேண்டப்பட்ட ஆள். உன்னை இங்க கொண்டு வர்றதுக்காகத்தான் பேஷண்ட் வேஷம் போட்டார்.."

நந்தா பெரிதாகத் திகைத்து விட்டுக் கேட்டாள். "என்னை எதுக்காக இங்கே..?"

"கொண்டு வரணும்னு கேட்கறியா..? எனக்கு உன்கிட்டே கொஞ்சம் வேலையிருக்கு.."

"வேலையா..? என்ன வேலை?"

"மொதல்ல நான் யார்ங்கறதைத் தெரிஞ்சுக்க.."

"யாரு..?"

"நீ இன்னிக்குக் காலைல எய்ட்ஸ் நோய்க் கட்டுப்பாட்டு ஆபீஸ்ல யாரைப் போய்ப் பார்த்துப் பேசினே..?"

"செல்வபாண்டியனை.."

மணிக்குமார் புன்னகைத்தான். "செல்வ பாண்டியன் என்னோட அப்பாதான்."

நந்தா முகம் நிறைய ஆச்சர்யம் காட்டினாள். "இருக்கட்டும். உனக்கு இப்ப என்ன வேணும்..?"

"உண்மை.."

"என்ன உண்மை.."

"நீ காலைல என்னோட அப்பாகிட்டக் கொடுத்தது உண்மையான எய்ட்ஸ் மருந்தா?"

"அதிலென்ன சந்தேகம்..?"

"அந்த மருந்து தயாரிக்க உன்னோட அப்பா எந்த பொருளைப் பயன்படுத்தினார்னு தெரியுமா?"

"தெ..தெரியாது.."

"பொய் சொல்லாதே.. அது உனக்குத் தெரியும்.."

"சரி. தெரியும்னே வெச்சுக்க. அந்த உண்மையை நான் உன்கிட்டச் சொல்ல முடியாது. என்னை உன்னால என்ன பண்ண முடியும்..?"

"இதோ பார் நந்தா.. நான் டாக்டருக்குப் படிக்கற காலேஜ் டேஸ்லயே பெரிய ரவுடின்னு பேர் வாங்கினவன். என் அப்பாவோட செல்வாக்கால் எம்.பி.பி.எஸ். சீட்டும், எம்.எஸ். சீட்டும் கிடைச்சது. படிச்சேன். இன்னிக்கு ஒரு டாக்டராயிட்டேன். நான் டாக்டராயிட்ட காரணத்தினாலேயே உத்தமனா ஆயிடலை. எல்லா கெட்ட பழக்கங்களும் இருக்கு. நியாயம், நேர்மை, தர்மம்னு வாழ்ந்துட்டிருந்தவர் என் அப்பா. அவர்க்கு நேர் மாறா செயல்படற ஆள் நான். இன்னிக்குக் காலைல என் அப்பாவைப் பார்க்கறதுக்காக ஆபீசுக்கு வந்தேன். அங்கே நீயும் என்னோட அப்பாவும் ஒரு கையில ஒரு பாட்டிலை



வெச்சிட்டு பேசிட்டிருந்ததை கேட்டேன். மறைவா நின்னு எல்லாத்தையும் நோட் பண்ணினேன். நீ சொன்னதை என் அப்பா நம்பலை. பட், நான் நம்பறேன். உங்கப்பா மாதிரியான ஒரு பாடனிஸ்ட் பொய் சொல்ல மாட்டார். உன்னோட பேச்சை நான் நம்பறேன். என்னோட அப்பாவுக்குத்தெரியாம நீயும் நானும் இந்த மருந்தை.."

நந்தா கோபமாய் எழுந்தாள்.

"ஸ்டாப் த நான்சென்ஸ். இது ஒரு தனிப்பட்ட நபரோட பிரச்னையில்லை. எல்லாத்துக்கும் மேல இது பிசினஸ் கிடையாது. முறைப்படி அரசாங்கத்துக்கு தெரியப்படுத்தி அவங்க மூலமாகத்தான் இந்த மருந்தைத் தயாரிக்கணும்.."

மணிக்குமார் சிரித்தான்.

"புரியாமப் பேசாத நந்தா. அரசாங்கத்துக்கு இதைப் பத்தியெல்லாம் கவலையே கிடையாது. நீ இப்போ சாம்பிள் கொடுத்துட்டுப் போயிருக்கியே.. இந்த மருந்தை என்னோட அப்பா டெல்லியில இருக்கற விஞ்ஞான மருத்துவக் கழகத்துக்கு அனுப்பி வைப்பார். அங்கே இருக்கற டாக்டர்கள் குழு அதை கிடப்பில போட்டுட்டு அவங்க வேலைகளைப் பார்த்துட்டிருப்பாங்க. நாலைஞ்சு தடவை ரிமைண்டர் லெட்டர் எழுதின பின்னாடி ஒரு நாள் சாவகாசமாக அதை ஓபன் பண்ணி ஏதோ பேருக்கு பரிசோதனை பண்ணிப் பார்த்துட்டு இந்த மருந்து உபயோகப்படுத்தத் தகுதியில்லாதது என்று ரிப்போர்ட் கொடுத்துருவாங்க.."

"மொதல்ல ரிப்போர்ட் வரட்டும். வந்ததும் பார்த்துக்கலாம். இந்த மருந்து அங்கீகரிக்கப் படும்ங்கற நம்பிக்கை எனக்கு இருக்கு.."

"சாரி நந்தா. இதை அரசாங்கத்தோட கைக்குப் போக நான் விட மாட்டேன்."

"இதைச் சொல்ல நீ யார்..?"

"உன்னோட பார்ட்னர்.."

"பார்ட்னரா?"

"எஸ். உன்னோட அப்பா கண்டுபிடிச்ச அந்த எய்ட்ஸ் மருந்தை நீயும் நானும் பார்ட்னர்களாய் இருந்து தயாரிக்கப் போறோம்."

"நெவர்.."

சூட்கேஸை எடுத்துக் கொண்டு கிளம்ப முயன்ற நந்தாவுக்கு முன்பாய் வந்து மறித்துக் கொண்டு நின்றான் மணிக்குமார்.

"நீ இங்கேயிருந்து போக முடியாது.."

"யூ.. ஸ்கவுண்ட்ரல்.."

"நீயே ஸ்கவுண்ட்ரல்னு சொல்லிட்டே.. ஸோ, அந்த வேலையைக் காட்டித்தானே ஆகணும்.."

சொன்ன மணிக்குமார் தன் வலது உள்ளங்கை மறைவில் வைத்திருந்த மயக்க மருந்து ஸ்ப்ரே செய்து வைத்திருந்த கர்ச்சீப்பை விருட்டென்று நந்தாவின் முகத்துக்கு கொண்டு போய் ர்ர்ரப்பென்று பொத்தி அழுத்தினான்.

நந்தா கத்த முயல, அவள் தொண்டையைப் பற்றினான் மணிக்குமார்.

ஒரு நிமிஷம் முழுவதும் திமிறிப் பார்த்த நந்தா இரண்டாவது நிமிஷத்தின் ஆரம்பத்தில் மயக்க மருந்தின் வீரியம் தாங்காமல் அறுந்த தோரணமாய் சரிந்து விழுந்தாள்.

## 4

**கா**ரைப் போர்டிகோவில் நிறுத்திவிட்டு - போர்டிகோ படிகள் ஏறிய மணிக்குமார் தன் அப்பா செல்வபாண்டியன் வராந்தாவிலேயே நாற்காலியில் உட்கார்ந்திருப்பதைப் பார்த்ததும் நின்றான்.

"அப்பா.."

"வாடா.. மணி. உனக்காகத்தான் வெயிட் பண்ணிட்டிருக்கேன். காலைலயே ஆபீசுக்கு வந்திருந்தியாமே...?"

"ஆமாப்பா. ஒரு எய்ட்ஸ் நோய் முகாம் நடத்தறதைப் பத்தி உங்ககிட்டப் பேசிட்டுப்



போகலாம்னு வந்தேன். நான் வந்த நேரத்துல ஒரு பொண்ணுகூட உட்கார்ந்து பேசிக்கிட்டு இருந்தீங்க. கொஞ்ச நேரம் வெயிட் பண்ணிப் பார்த்துட்டுத் திரும்பிட்டேன். மத்தியானம் ஒரு முக்கியமான ஆபரேஷன் இருந்தது.."

"சரி. இப்படி வந்து உட்கார்.."

போய் உட்கார்ந்தான்.

"என்னப்பா..?"

"காலைல நீ ஆபீசுக்கு வந்திருந்தப்ப என்கூட பேசிட்டிருந்த ஒரு பொண்ணைப் பார்த்தியா?"

"ஆமா."

"அவ பேர் நந்தா. கோயமுத்தூருக்குப் பக்கத்துல இருக்கற பூண்டியில இருந்து வந்திருக்கா. அவளோட அப்பா ஒரு பெரிய பாட்னிஸிட். தாவர ஆராய்ச்சியாளர். அவர் இப்ப உயிரோட இல்ல. ரெண்டு வருஷத்துக்கு முந்தி இறந்து போன அவர் எய்ட்ஸ் நோயைக் குணப்படுத்தற ஒரு மருந்தைக் கண்டுபிடிச்சு வெச்சிட்டுப் போயிருக்கார். அதை அந்த நந்தா பொண்ணு இப்போ கொண்டு வந்து கொடுத்து விஷயத்தைச் சொன்னா.."

மணிக்குமார் முகத்தில் வேண்டுமென்றே ஒரு ஆச்சர்யம் காட்டினான்.

"என்னப்பா சொல்றீங்க..? எய்ட்ஸைக் குணப்படுத்த மருந்தா..?"

"ஆமா. அந்த நந்தா அப்படித்தான் சொன்னா.."

"நீங்களும் அதை நம்பிட்டீங்களாக்கும்.."

"நம்பலை. எய்ட்ஸுக்கு இதுவரையிலும் மருந்தே கண்டுபிடிக்கலைங்கற உண்மை எனக்குத் தெரியாதா என்ன..? இருந்தாலும் அந்தப் பொண்ணு சொன்னதை நிராகரிக்க முடியலை. ஒருவேளை அந்த மருந்து எய்ட்ஸ் நோயைக் குணப்படுத்தக் கூடியதாக இருந்துட்டா..?"

"இருந்துட்டா.. இந்த மனித சமுதாயத்துக்கே பெரிய வரப்பிரசாதம்தான். இதுவரைக்கும்

எத்தனையோ பேர் எவ்வளவோ மருந்து சாம்பிள்களை எய்ட்ஸ் நோய்க் கட்டுப்பாட்டுப் பிரிவுக்கு அனுப்பி வெச்சுப் பார்த்திருக்காங்க. எல்லாமே பெய்லியர்தான்."

"இதுவும் அப்படியிருக்கும்னு எனக்குத் தோணலை."

"இப்ப என்ன பண்ணப் போறீங்க. டெல்லிக்கு டெஸ்ட்டுக்காக அனுப்பப் போறீங்களா..?"

"இல்லை.."

"பின்னே..?"

"நானே அந்த மருந்து சாம்பிளோடு டெல்லிக்குப் போய்ட்டு வரலாம்னிருக்கேன். போஸ்ட்ல அனுப்பினா டிலே ஆகும். மெடிக்கல் சயின்ஸ் சேம்பர்ல இருக்கறவங்களும் அவ்வளவு ஆர்வமா இதுல சிரத்தை காட்ட மாட்டாங்க. நான் நேர்ல போய் இருந்து பார்த்துட்டு வந்துடறேன்.."

"அந்த மருந்து இப்போ யார்கிட்டே இருக்கு..?"

"என்கிட்டேதான்.."

"நான் பார்க்கணுமே.."

"வா.."

செல்வபாண்டியன் எழுந்து உள்ளே போக - மணிக்குமார் தொடர்ந்தான். தொடர்ந்த படியே அப்பாவித்தனமான குரலில் கேட்டான். "அந்தப் பொண்ணோட பேர் என்னன்னு சொன்னீங்க..?"

"நந்தா.."

"அந்த மருந்தை அவ யாருக்காவது.. ஐ மீன் எந்த எய்ட்ஸ் நோயாளிக்காவது கொடுத்து டெஸ்ட் பண்ணிப் பார்த்திருக்காளா..?"

"அவ டெஸ்ட் பண்ணலை. பட். அவளோட அப்பா ரெண்டு வருஷத்துக்கு முன்னாடி எய்ட்ஸ் நோய் பாதித்திருந்த அவரோட ப்ரெண்ட் மகேந்திரனுக்கு கொடுத்து குணமாக்கியிருக்கிறாராம்."

"அந்த மகேந்திரனைப் பார்த்து விசாரித்தால் ஆயிற்று."



"நந்தா போய் விசாரிச்சிருக்கா.. அதை அவரும் ஒத்துக்கிட்டாராம்."

"அப்படீன்னா அந்த எய்ட்ஸ் மருந்து உண்மைதானா..?"

செல்வபாண்டியன் மகனைப் பார்த்து புன்னகைத்தார். "மணி. நந்தா சொல்ற எல்லா விஷயங்களும் பேச்சளவில்தான் இருக்கு. மகேந்திரன் உண்மையாகவே ஒரு எய்ட்ஸ் நோயாளியாக இருந்தார்ங்கறது மருத்துவ பூர்வமான ரிகார்ட்ஸ் இல்லையே.."

ஹாலைக்கடந்து தன்னுடைய பிரத்யேக அறைக்குள் நுழைந்து சுவரோடு பதிக்கப் பட்டிருந்த ஷெல்பைத் திறந்தார்.

வரிசையாய்த் தெரிந்த பாட்டில்களை நகர்த்தி அந்தச் சிறிய பாட்டிலை எடுத்தார்.

"இதுதான் அந்த நந்தா கொடுத்துட்டுப் போன பாட்டில்.."

மணிக்குமார் வாங்கிப் பார்த்தான். கண்களில் அதிசயம் தெரிந்தது.

"என்னப்பா இது..? ஏதோ வெள்ளியை உருக்கி ஊத்தின மாதிரி இருக்கு. இது கெமிக்கலா..? இல்லை நேச்சுரலா?"

"தெரியலை.."

"இது எதிலிருந்து தயார் பண்ணினது?"

"அவ சொல்லலை.."

"நீங்க கேட்கலை.."

"கேட்டேன்."

"என்ன சொன்னா..?"

"இப்போதைக்கு எதுவும் சொல்ல முடியாதுன்னு சொல்லிட்டா.."

"சரியான ராங்கிக்காரியா இருப்பா போலிருக்கே.."

"நோ.. நோ. ஷி ஈஸ் வெரி ஸாப்ட்: அவ பேசினது சரிதான். ப்ராடக்ட் அவளோடது.

ரகசியத்தை அவ்வளவு சுலபத்துல வெளியே விட்டுடுவாளா..? இது உண்மையிலேயே எய்ட்ஸை குணப்படுத்தற மருந்தா இருந்தா இந்தியாவோட மதிப்பு உலக நாடுகள் மத்தியில எவரெஸ்ட் உயரத்துக்குப்போய் நிற்கும். நந்தாங்கற பொண்ணோட பெயர் எல்லா நாட்டு மக்களின் உதடுகளிலும் மந்திரம் மாதிரி உச்சரிக்கப்படும்.."

மணிக்குமாரின் மனசுக்குள் ஏற்பட்ட எரிச்சலை அடக்கிக்கொண்டு "வாஸ்தவம்தாம்பா.." என்றான்.

"நாளைக்கு மத்தியான ப்ளைட்ல இந்த மருந்து சாம்பிளோடு நான் டெல்லிக்குக் கிளம்பறேன். திரும்பி மெட்ராஸ் வர்றதுக்கு பத்து நாளாகும்.."

"நீங்க டெல்லிக்குப் போய் காரியத்தை கச்சிதமா முடிச்சிட்டு வாங்கப்பா. இது மட்டும் சக்சஸ்ஸானால் அந்த நந்தாவுக்கு இந்த தமிழ்நாட்ல ஒரு பெரிய கோயிலே கட்டலாம்.."

## 5

முகத்தில் ஜில்லென்ற தண்ணீர் பட்ட உணர்வில் கண்களை மலர்த்தினாள் நந்தா.

மசமசப்பான பார்வைக்கு எதிரே நாற்காலியில் சாய்ந்திருந்த மணிக்குமார் கிடைத்தான். அறையின் பக்கவாட்டு ஜன்னல்களில் சூரிய வெளிச்சம் பளீரென்று ஒட்டியிருந்தது.

மெதுவாய் எழுந்து உட்கார்ந்து தன் பெரிய விழிகளை விரித்து மருட்சியோடு சுற்று முற்றும் பார்த்தாள் நந்தா. க்ளினிக் மாதிரி தெரியவில்லை.

மணிக்குமார் புகை கசியும் வாயோடு சிரித்தான்.

"என்ன நந்தா அப்படிப் பார்க்கறே..? இந்த இடம் உன்னை மாதிரி வி.ஐ.பி.க்களைக் கொண்டு வந்து அடைச்சு வெச்சு விசாரிக்கறதுக்காக பிரத்யேகமாகக் கட்டினது. எனக்கு டாக்டர் தொழில் மட்டும் கிடையாது. கையில் நிறைய தொழில்கள் இருக்கு. அதெல்லாம் இது மாதிரியான இடம் வேணுமே.."



நந்தா கலவரமாய் தன் உடைகளைப் பார்த்துக் கொள்ள, மணிக்குமார் புன்னகைத்தான்.

"நோ.. நோ.. உனக்கு அந்த சந்தேகமேவர வேண்டியது இல்லை. நீ இன்னமும் முழு கற்போடுதான் இருக்கிறாய். நேத்து ராத்திரி எட்டரை மணிக்கு மயக்கமான நீ இப்போதான் கண்விழிச்சுப் பார்க்கறே.. இது காலை நேரம். மணி ஒன்பது. ஏதாவது சாப்டறியா..?"

நந்தா பதட்டமாய் எழுந்தாள்.

"எ..எ..எனக்கு ஒண்ணும் வே..வேண்டாம். நான் ஊருக்குப் போகணும். என்னை விட்டுடு.."

"ஊருக்குப் போகணுமா.. சரியாப் போச்சு. இன்னும் உன்கிட்டப் பேச வேண்டியது நிறைய இருக்கு. கொஞ்ச நாளைக்கு நீ ஊரை மறந்துடு.."

"நோ..ஓ..ஓ..ஓ...."

"இப்படியெல்லாம் கத்தி ஆர்ப்பாட்டம் பண்ணக் கூடாது. எனக்குக் கோபம் வந்தால் அதை உன்னால தாங்கிக்க முடியாது. நான் உன்னைக் கஷ்டப்படுத்தக் கூடாதுன்னு நீ நினைச்சா எனக்கு நீ முழு ஒத்துழைப்புக் கொடுக்கணும். நான் ஒரு வேலையில இறங்கிட்டா அதை செய்து முடிக்காம விட்டதில்லை. இப்ப உனக்கு ஒரு ஆச்சர்யத்தைக் காட்டட்டுமா..?"

சொன்ன மணிக்குமார் தனக்குப் பக்கத்தில் வைத்திருந்த தோல் பையை எடுத்து ஜிப்பைத்திறந்து உள்ளேயிருந்த அந்த சிறிய பாட்டிலை எடுத்து நந்தாவின் முகத்துக்கு நேரே நீட்டினான்.

"இது என்னன்னு தெரியுதா நந்தா..?"

நந்தாவின் நெற்றி சுருங்கியது.

"இ..இது.. இது..?"

"பேசக் கஷ்டப்படாதே. நானே சொல்றேன். இது நேத்துக் காலைல என்னோட அப்பாகிட்டக் கொடுத்த எய்ட்ஸ் நோயைக் குணப்படுத்தக் கூடிய

மருந்து பாட்டில்.. சரியா..?"

"ஆ..ஆமா.."

"இது எப்படி என் கைக்கு வந்ததுங்கிறதையும் சொல்லிடறேன். என்னோட அப்பா இதை டெல்லிக்கு எடுத்துட்டுப் போறதுக்காக வீட்ல கொண்டு வந்து வெச்சிருந்தார். ராத்திரி பத்து மணிக்கு நான் வீட்டுக்குப் போனபோது எனக்கு எடுத்துக் காட்டினார். உன்னைப் பத்தியும் சொன்னார். எல்லாத்தையும் புதுசாக் கேட்கற மாதிரி கேட்டுட்டு அப்பா தூங்கினதும் இந்த பாட்டிலை எடுத்துட்டு வேற ஒரு டம்மி பாட்டிலை வெச்சிட்டேன்."

நந்தா கண்களில் கட்டிக் கொண்ட நீரோடு உஷ்ணமாய் மணிக்குமாரை முறைக்க - அவன் கையிலிருந்த சிகரெட்டை பூட்ஸ் காலுக்குக் கொடுத்து விட்டுப் புன்னகைத்தான்.

"நீ கொண்டுவந்த எய்ட்ஸ் மருந்து இப்போ என்னோட கையில். இந்த மருந்தைப் பத்தி உனக்கு என்ன உண்மைகள் தெரியுமோ? அதையெல்லாம் என்கிட்ட சொல்லிடறது உத்தமம்.."

"மாட்டேன். உயிரே போனாலும் உன்னைப் போல அயோக்கியன்கிட்டச் சொல்ல மாட்டேன்."

"ஒண்ணும் அவசரமில்லை நந்தா. இதே வீட்ல இன்னும் கொஞ்ச நாளைக்கு நீ இருக்கப் போறே. நிதானமா யோசனை பண்ணி ஒரு முடிவுக்கு வா. இப்ப உனக்குப் பசியாக இருக்கும். போய் பல்லை விளக்கி குளிச்சிட்டு வா. அதுதான் பாத்ரூம். எல்லாமே ரெடியா இருக்கு.."

"எனக்கு எதுவும் வேண்டாம். கெட் லாஸ்ட்.."

"ஒண்ணுமே வேண்டாமா..?"

"வேண்டாம்.."

"அப்படீன்னா நீ இப்ப போட்டுகிட்டு இருக்கற டிரஸ் கூட வேண்டாம்னு நான் நினைக்கறேன். கழட்டி அப்படி ஒரு ஓரமா வெச்சிடறியா..?"



"........."

"என்ன அப்படிப் பார்க்கறே..? நீ இப்போ இருக்கறது என்னோட கஸ்டடியில. உனக்கு எது வேணும் வேண்டாம்னு முடிவு பண்ண வேண்டியது நான்தான். என் பேச்சைக் கேட்கலைன்னா இப்படித்தான் ஏதாவது ஒரு முடிவை எடுக்க வேண்டியதிருக்கும். எதுவுமே வேண்டாம்னா ட்ரஸ்ஸையெல்லாம் கழட்டி அப்படி ஓரமா வெச்சிடு. உன் உடம்புல டிரஸ் இருக்கணும்னு நீ நினைச்சா நான் சொன்னபடி கேட்கணும். போய்க் குளிக்கறியா..? இல்லை. டிரஸ்ஸைக் கழட்டி வைக்கறியா..?"

"கு..கு..குளிக்கறேன்.."

மணிக்குமார் சிரித்தான். "இது புத்திசாலித்தனம். போய்க் குளிச்சிட்டு வா.. டிபன் ரெடியா இருக்கும்.."

"எ..என்னோட சூட்கேஸ்..?"

"அதோ சுவரோரமாய் இருக்கு. போய் மாத்து துணியை எடுத்துக்கோ.."

நந்தா சூட்கேஸை நோக்கிப் போக, மணிக்குமார் இன்னொரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டே சொன்னான்.

"இங்கேயிருந்து தப்பிச்சிடலாம்னு தப்புக் கணக்குப் போட்டுகிட்டு முட்டாள்தனமா எதுவும் பண்ணிக்காதே. உன்னால இந்த இடத்தை விட்டுப் போக முடியாது. இது வண்டலூர் ஏரியா காட்டுப்பகுதி. இங்கிருந்து மெயின் ரோட்டுக்கு ஆறு கிலோ மீட்டர் தூரம் போகணும். குளிச்சிட்டே யோசனை பண்ணு. என்கூட பார்ட்னராச் சேர்ந்துட்டியானா உனக்கு ஒரு நல்ல எதிர்காலம் இருக்கு. இல்லேன்னா.. வேண்டாம். உன்கிட்டேயிருந்து ஒரு நெகடிவ்வான ரிப்ளை வர்றதை நான் விரும்பலை."

நந்தா ஒன்றும் பேசாமல் சூட்கேஸிலிருந்து மாற்று உடையை எடுத்துக் கொண்டு குளியலறையை நோக்கிப் போனாள்.

மனம் தீவிரமாய் யோசித்தது.

'இங்கேயிருந்து தப்பிக்க என்ன வழி?' குளியலறைக்குள் சென்று தாழிட்டாள். சற்று பெரியதான குளியலறை அது. உயரத்தில் வெண்டிலேட்டர் தெரிந்தது.

பைப் குழாய் திட்டின் மேல் காலை வைத்து மேலே ஏறி வெண்டிலேட்டரின் கம்பிகளைப் பிடித்துக் கொண்டு வெளியே எட்டிப் பார்த்தாள்.

இருதயம் அதிர்ந்தது.

கண்ணுக்கெட்டிய தூரம் வரை புதர்கள் மண்டியிருந்த காட்டுப் பகுதி பார்வைக்குக் கிடைத்தது.

'இங்கேயிருந்து தப்பிக்க முடியுமா?'

சாத்தியமில்லை என்றது நந்தாவின் மூளை.

## 6

அந்த அதிகாலை வேளையில் கடற்கரை ரோட்டில் வியர்க்க வியர்க்க வாக்கிங் போய்க் கொண்டிருந்த சைக்யாரிஸ்ட் சியாமளாதேவி எதிரே ஜாக்கிங் சூட்டில் வந்த மணிக்குமாரைப் பார்த்ததும் நின்றாள். உதட்டில் மலர்ந்த ஒரு பெரிய புன்னகையோடு "குட்மார்னிங்" என்றாள்.

"குட்மார்னிங்.."

"இன்னிக்கு நீ பத்து நிமிஷம் லேட் மணிக்குமார்.."

"எஸ். கொஞ்சம் அசந்து தூங்கிட்டேன். காமேத் இன்னும் வரலியா..?"

"வர்ற நேரம்தான். நாம அப்படியே நடந்து போயிட்டிருப்போம்.."

இருள் பிரியாத அந்த நேரத்தில் பலரும் தொப்பைகளைத் தூக்கிக் கொண்டு நிழலுருவங்களாய் நடந்து கொண்டிருக்க, மணிக்குமாரும், சியாமளாவும் சாலையை ஒட்டிய



பேவ்மெண்ட்டில் நடைபோட ஆரம்பித்தார்கள். கிழக்கு திசையின் கரிய வானத்தில் லேசாய் சிவப்பு தீற்றல்கள் தெரிந்தன.

சியாமளாதேவி நடந்து கொண்டே கேட்டாள்.

"அந்த நந்தா வாயைத் திறந்து ஏதாவது சொன்னாளா?"

"தனக்கு அந்த எய்ட்ஸ் மருந்தைப் பத்தி எதுவுமே தெரியாதுன்னு சொல்றா.."

"பொய்.."

"பொய்ன்னு நல்லாத் தெரியுது. பட். அவகிட்ட இருந்து உண்மையை வாங்க முடியலை. ரொம்பவும் மிரட்டினா பயத்துல மயக்கமாயிடறா.."

"இது வேறயா..?"

"எனக்கு என்ன செய்யறதுன்னே தெரியலை.."

"உங்கப்பா டெல்லியிலிருந்து என்னிக்கு திரும்பறார்?"

"அநேகமாய் நாளைக்கு.."

"இங்கே வந்ததும் அவரோட ரியாக்ஷன் எப்படியிருக்கும்னு தெரியலை.."

மணிக்குமார் சிரித்தான். "அவர் டெல்லியில் இருந்து வரும்போதே கோபத்தோடுதான் வருவார். நந்தாவோட அட்ரஸுக்கு கோபமா காரசாரமா ஒரு லெட்டர் எழுதுவார். அந்த லெட்டர்ல நீ எய்ட்ஸ் மருந்துன்னு கொண்டு வந்தது வெள்ளி நைட்ரேட் கரைசல்னு பொரிஞ்சு தள்ளுவார். அதுக்கப்புறம் நந்தா விவகாரத்தை மறந்துட்டு வழக்கம்போல ஆபீசுக்குப் போயிட்டிருப்பார். நாம நம்ம கஸ்டடியில இருக்கற நந்தாகிட்ட இருந்து எய்ட்ஸ் மருந்துக்கான உண்மையான ஃபார்முலாவை வாங்கி உலக அளவுல பேர் வாங்கப் போறோம்."

"ஹலோ.. குட்மார்னிங் போத் ஆப் யூ.."

பின்பக்கம் குரல் கேட்டு இருவரும் திரும்பினார்கள்.

"காமேத்தா..? வா வா. இன்னிக்கு நீயும் லேட்."

அந்த காமோத் ஜாக்கிங் செய்துகொண்டே பக்கத்தில் வந்தான்.

"நேத்து ராத்திரி தூங்கும்போது மணி ரெண்டு. அஞ்சு மணிக்கு அலாரம் அடித்தது. ஆனா கண்ணைத் திறக்க முடியலை. எப்படியோ எழுந்திரிச்சு நீங்க ரெண்டு பேரும் வெயிட் பண்ணிட்டிருப்பீங்கன்னு ஓடோடி வர்றேன்.."

"ராத்திரி இரண்டு மணி வரைக்கும் என்ன பண்ணினே..?"

"டி.வி.யில ஒரு ஃபுட்பால் மேட்ச். இத்தாலி - அர்ஜென்டினா. லைவ் டெலிகாஸ்ட். சூப்பர் மேட்ச்."

"காமோத். நீ இப்படி ஜாலியா டயத்தை வேஸ்ட் பண்ணிட்டிருக்கே. நான் நந்தாவை என்னோட கஸ்டடியில வெச்சு கஷ்டப்பட்டுகிட்டிருக்கேன்."

"சாரி மணி.. எனக்கு மட்டும் அந்த உதைப்பு இல்லாமலா இருக்கும். சரி. கடந்த ரெண்டு நாளா சிறைவாசத்துல நந்தா வாயைத் திறந்தாளா?"

"சாப்பிடறதுக்கு மட்டும் வாயைத்திறக்கறா. மத்தபடி கப்சிப்தான். எதைக்கேட்டாலும் தெரியாது தெரியாதுன்னு அழுதுகிட்டே தலையை ஆட்றா. உண்மையை எப்படி அவகிட்டயிருந்து வாங்கறதுன்னே தெரியலை.."

"கொஞ்சம் ஃபோர்ஸ் பண்ண வேண்டியதுதானே..?"

"ஃபோர்ஸ் பண்ணினா மயக்கத்துக்குப் போயிடறாளே?"

சியாமளாதேவி அப்போது குறுக்கிட்டாள்.

"மணிக்குமார்.."

"ம்.."

"அவகிட்டயிருந்து உண்மையை வரவழைக்கறதுக்கு ஒரு வழி இருக்கு.."

"என்ன வழி..?"

"இன்னிக்குக் காலைல பத்து மணிக்கு நாம மூணு பேரும் நந்தாவைப் பார்க்கப் போறோம்."



"போயி..?"

"வாங்க. பேசிட்டே நடப்போம்."

# 7

அறைக்கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு சோர்வாய் கண்களை மலர்த்தினாள் நந்தா.

மணிக்குமார், சியாமளாதேவி, காமோத் மூன்று பேரும் வரிசையாய் உள்ளே நுழைந்தார்கள்.

நந்தா தடுமாற்றமாய் எழுந்து உட்கார்ந்தாள்.

சியாமளா அவளுக்குப் பக்கத்தில் போய் தோளைத் தொட்டாள்.

"எப்படியிருக்கே நந்தா..?"

"........."

"இங்கே வந்து ரெண்டு நாள் கூட ஆகலை. அதுக்குள்ளே கண்ணு ரெண்டும் உள்ளே போய் ஒரு நோயாளி மாதிரி ஆயிட்டே? இங்கே உனக்கு என்ன குறைச்சல்? வேளாவேளைக்கு சாப்பாடு. சந்தோஷமாய் இருக்க வேண்டாமா?"

நந்தா மருட்சியோடு பார்க்க, சியாமளாதேவி சிரிப்போடு சொன்னாள்.

"சொல்லு.. எய்ட்ஸ் நோயைக் குணப்படுத்தற அந்த மருந்தோட ப்ரிப்ரேஷன் ஹிஸ்டரி என்ன? அந்த மருந்தை தயாரிக்கத் தேவையான சங்கதிகள் என்னென்ன?"

"எ..எனக்குத் தெரியாது.."

"இதோ பார் நந்தா.. நீ கொண்டு வந்த மருந்தை ஒரு எய்ட்ஸ் நோயாளிக்கு ரெண்டு நாளாக் கொடுத்துட்டு வர்றோம். நோயாளியோட உடல் நிலையில லேசா முன்னேற்றம் தெரியுது. நாங்க மூணு பேரும் படிக்கற காலத்திலிருந்தே ப்ரெண்ட்ஸ். எதையாவது சாதிக்க வேணும்ங்கற வெறி எங்க மூணு பேர் உடம்பிலும் ஊறிப் போயிருக்கு. காமோத் சாதாரண ஆள் கிடையாது.

பெரிய மருந்துக் கம்பெனிக்கு சொந்தக்காரர். நீ அந்த எய்ட்ஸ் மருந்தோட ஃபார்முலாவை சொல்லிட்டா.. உன்னையும் பார்ட்னரா சேர்த்துகிட்டு மருந்தைத் தயார் பண்ணிடலாம். வர்ற லாபத்துல உனக்கு பிப்டி பர்செண்ட்."

"எ..எனக்கு.. எனக்கு.. அந்த மருந்தோட ஃபார்முலா தெரியாது."

இப்போது காமோத் குறுக்கிட்டான்.

"நந்தா. நீ என்னைப் பார்த்துப் பயப்பட வேண்டாம். மனித சமுதாயத்தைப் பீதியில் ஆழ்த்தியிருக்கற ஆட்கொல்லி நோயாய் உருவெடுத்திருக்கற இந்த எய்ட்ஸ் நோயை ஒழித்துக் கட்டக்கூடிய ஒரு மருந்து இப்போ உன் மூலமா வெளிப்பட்டிருக்கு. புத்திசாலித்தனமாப் அதை பயன்படுத்திக்க வேண்டாமா? உனக்கு அந்த மருந்தோட ஃபார்முலா நிச்சயமா தெரியாம இருக்காது. தெரியும். கண்டிப்பாத் தெரியும். வேணும்னா இப்படி ஒரு ஏற்பாட்டைப் பண்ணிக்கலாம். அந்த மருந்தோட ஃபூார்முலாவை நீ எங்ககிட்டச் சொல்ல வேண்டாம். ரகசியமாகவே வெச்சுக்க. மருந்தைத் தயாரிக்கற வேலையை நீயே பண்ணு. அதை மார்க்கெட்டிங் பண்ற வேலையை மட்டும் நாங்க பார்த்துக்கறோம்.."

"எ..எனக்கு எதுவுமே தெரியாது.." நந்தா கைகளைக் கூப்பிக் கொண்டு கெஞ்ச, மணிக்குமார் சியாமளாதேவியைப் பார்த்தான்.

"சியாமளா. இவ வழிக்கு வர மாட்டா. நீ சொன்ன வழியில போனாத்தான் விஷயம் கிடைக்கும்."

"சரி. அந்த வழியிலயே போயிடுவோம்.." சொன்ன சியாமளாதேவி தான் கையோடு கொண்டு வந்திருந்த சூட்கேஸைத் திறந்தாள்.

உள்ளே -

ஃபைபர், க்ரோமியம் உடம்புகளோடு சில கருவிகள் தெரிய அவைகளை ஒவ்வொன்றாய் எடுத்து வெளியே வைத்தாள். மின்சாரத்தை சப்ளை



செய்யும் ஒரு பாட்டரியும் வெளியே வந்தது.

மணிக்குமார் தன் பங்குக்கு ஒரு இன்ஜெக்ஷன் மருந்தை வெளியே எடுத்து சிரிஞ்சில் ஏற்றினான். மருந்து இளஞ்சிவப்பு நிறத்தோடு பளபளத்தது.

காமோத் நந்தாவின் வலது கை தோள் பட்டையை இறுக்கிப் பிடித்துக் கொள்ள மணிக்குமார் ஊசியோடு அவளை நெருங்கினான்.

நந்தா அலறுவதற்காக வாயைத் திறக்கும் முன்பே புஜத்தில் ஊசி பாய்ந்தது.

மருந்து ரத்தத்தில் கலந்து கொண்டிருக்கும் போதே நந்தாவின் கண்களுக்குள் இருட்டுப் பாய்ந்தது. உடம்பு தன்னிச்சையாய் சாய ஒரு பக்கமாய் சரிந்தாள்.

காமோத் அவளை மல்லாத்திப் படுக்க வைத்து தலைக்கு உயரமான தலையணையைக் கொடுத்தான்.

சியாமளாதேவி மணிக்குமாரை ஏறிட்டாள். "நந்தாவோட பல்ஸ் எப்படியிருக்கு..?"

"நார்மல்.."

"இன்ஸ்ட்ருமெண்ட் ஃபிக்ஸ் பண்ணிடலாமா?"

"ம்.."

சியாமளாதேவி பரபரவென்று செயல்பட்டாள். க்ரோமியம் உலோகத்தாலான ஒரு க்ரீடம் மாதிரியான அமைப்பை நந்தாவின் தலைக்குப் பொருத்தினாள். மணிக்கட்டுகளில் இரண்டு ஃபைபர் பட்டைகள். பின்னந்தலையில் இரண்டு காந்த வளையங்கள். எல்லாக் கருவிகளிலும் ரோம பருமனில் நீண்டிருந்த செப்புக் கம்பிகள் பாட்டரியோடு கவனமாய் இணைக்கப்பட்டது. பாட்டரிக்குரிய ஒரு சுவிட்ச் தட்டப்பட ம்ம்ம்ம்.. என்ற ஒரு ரீங்காராம் கிளம்பியது.

காமோத் சியாமளாவிடம் திரும்பினான்.

"உன்னோட சைக்கோதெரபி இவளோட சப்கான்ஷியஸ் மைண்ட்ல உள்ள எய்ட்ஸ் நோய்

மருந்து பற்றிய உண்மைகளை வெளியே கொண்டு வரும்னு நினைக்கறியா..?"

"கண்டிப்பா.." சியாமளாதேவி புன்னகைத்துக் கொண்டே போய் நந்தாவின் பக்கத்தில் உட்கார்ந்து அவளுடைய இரண்டு பக்க நெற்றிப் பொட்டுகளை கட்டை விரலால் அழுத்தி விட்டதும் நந்தா ஒரு நிச்சலனத்துக்கு உட்பட்டு அமைதிக்குப் போனாள்.

சியாமளாதேவி குனிந்து காதுக்குப் பக்கத்தில் குறைவான குரலில் கூப்பிட்டாள்.

"நந்தா.."

"......."

"நந்தா.."

"ம்..."

"நான் கூப்பிடறது கேட்குதா?"

"ம்.. கேட்குது.." அசைந்த உதடுகளிலிருந்து குரல் சன்னமாய் வெளிப்பட்டது.

"நான் உன்கிட்ட கொஞ்சம் பேசலாமா?"

"ம்.."

"உன்னோட முழுப்பெயரே நந்தாதானா?"

"இல்லை.."

"பின்னே..?"

"நந்தா ஜோதி.."

"உன்னோட அப்பா..?"

"ஹரிச்சந்தர்.."

"அம்மா பேரு..?"

"புனிதவல்லி.."

காமோத்தும், மணிக்குமாரும் பிரமிப்பாய் பார்த்துக் கொண்டிருக்க, சியாமளா தொடர்ந்தாள்.

"நந்தா."

"ம்.."

"நீ என்ன படிச்சிருக்கே..?"

"எம்.எஸ்.ஸி.."

"சப்ஜெக்ட்..?"



"பாட்னி.."

"உன்னோட அப்பா ஹரிச்சந்தர் மூலிகைச் செடிகளைப் பத்தின ஆராய்ச்சி பண்ணிட்டிருந்தார் இல்லையா..?"

"ஆமா.."

"எல்லா நோய்களுக்கும் மருந்துகளை கண்டுபிடிக்க முயற்சி பண்ணினார் இல்லையா..?"

"ஆமா.."

"எய்ட்ஸ் நோயைக் குணப்படுத்தக் கூடிய அளவுக்கு ஒரு மருந்தைக் கண்டுபிடிச்சாரா..?"

"ஆமா.."

"அது என்ன மருந்து..?"

நந்தாவிடம் இப்போது மவுனம்.

"ம். சொல்லு நந்தா.. அது என்ன மருந்து..? அதுக்கு ஏதாவது பேர் இருக்கா..?"

"இருக்கு.."

"என்ன..?"

"அது.. வந்து.. வந்து.."

"இதோ பார் நந்தா.. ஒட்டுமொத்த மனித சமுதாயத்துக்குப் பயன்படப்போற ஒரு மருந்தைப் பத்தி நீ இவ்வளவு ஒளிவு மறைவா வெச்சிட்டிருக்கறது கொஞ்சம்கூட சரியில்லை. ம் சொல்லு.. அந்த மருந்தோட பேர் என்ன..?"

"சொ..சொல்றேன்.."

"சொல்லு.."

"அந்த மருந்துக்கு பேர் இண்டிகோனா."

"இண்டிகோனாவா..?"

"ஆமா.."

"என்ன ஸ்பெல்லிங்..?"

"INDIGONA"

"இந்த மருந்தை உங்கப்பா எதிலிருந்து தயார் பண்ணுவார்னு தெரியுமா..?"

"தெரியும்.."

"சொல்லு.."

"இண்டிகாக்கஸ் என்கிற பூவிலிருந்து.."

"இண்டிகாக்கஸ்..? இப்படியொரு பேரா? அது என்ன பூ..? அது எப்படியிருக்கும்..?"

"இந்தப் பூ இந்தியாவில் இல்லை.."

"பின்னே..?"

"இந்தப் பூக்கள் இருக்கக் கூடிய ஒரே இடம் வயலெட் ஐலேண்ட்.."

"வயலெட் ஐலேண்ட்டா..?"

"ஆமா. தமிழ்ல அதுக்கு ஊதா நிறத் தீவுன்னு பேரு. இந்தத் தீவு முழுவதும் ஊதா நிறமுள்ள பூக்கள் வருஷம் பூராவும் பூக்கும். ஆகாயத்தில் விமானத்தில் இருந்து பார்க்கறபோது அந்தத் தீவு முழுவதும் ஊதா நிறமாகத் தெரியும். அதனாலதான் இந்தத் தீவுக்குப் பேர் ஊதா நிறத் தீவு."

"இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்...?"

"என்னோட அப்பா சொல்லித்தான்.."

"நீ அந்தத்தீவுக்குப் போயிருக்கியா..?"

"இல்லை.."

"அப்படீன்னா ரெண்டு வருஷத்துக்கு முன்னாடியே உன்னோட அப்பா எய்ட்ஸ் நோயைக் குணப்படுத்தற அந்த மருந்தை ப்ரிப்போர் பண்ண ஆரம்பிச்சிட்டார்.."

"ஆமா.."

"சரி. அந்த ஊதா நிறத் தீவு எங்கே இருக்கு..?"

"அந்தமான் தீவுக்குப் போகிற கடல் மார்க்கத்தில் வயலெட் ஐலேண்ட்ங்கற பேர்ல இருக்கு.."

"இண்டிக்காக்கஸ் என்கிற அந்தப் பூவிலிருந்து எய்ட்ஸ் நோய்க்கான மருந்தை எப்படித் தயாரிக்கறதுன்னு தெரியுமா?"

"தெரியும்.."

"சொல்லு.."

"அந்தப் பூவில் ஆண்,பெண் என ரெண்டு பூ



இருக்கு. அதுல பெண் பூக்கள் ரொம்பக் குறைச்சல். இதுல மருந்து தயாரிக்க உபயோகப்படறது பெண் பூக்கள்தான். இந்தப் பூக்களில் உள்ள சூல் முடிகளை சேகரம் பண்ணி மெர்க்குரி கரைசலோடு கலந்து உயர்ந்த கொதிநிலையில் காய்ச்சும் போது வெளிப்படற ஆவியை குளிர வைத்தால் இண்டிகோனா எய்ட்ஸ் மருந்து கிடைக்கும்.."

"இதை வாய் வழியாகச் சாப்பிடலாமா?"

"கூடாது. டிஸ்டில்ட் வாட்டரில் கலந்து ஊசி மூலம்தான் உடம்புக்குள்ள செலுத்தணும்.."

"இந்த எய்ட்ஸ் மருந்தைப் பற்றிய உண்மைகள் வேற யாருக்கெல்லாம் தெரியும்..?"

"என் அப்பாவோட நண்பர் மகேந்திரனுக்கு.."

"அவரைத் தவிர வேற யாருக்கும் தெரியாதே.."

"தெரியாது.."

சியாமளாதேவி கேள்வி கேட்பதை நிறுத்தி மணிக்குமாரையும், காமோத்தையும் ஏறிட்டாள்.

"எல்லா உண்மைகளும் நந்தாவோட சப்கான்ஷியஸ் மைண்டிலிருந்து வந்திடுச்சு. இனி ஏதாச்சும் கேட்கணுமா மணிக்குமார்..?"

"எல்லாத்தையும் க்ளியரா சொல்லிட்டாளே.. இப்போதைக்கு இது போதும்.."

"மொதல்ல அந்த வயலெட் ஐலேண்ட் வங்கக்கடல்ல எத்தனை மைல் தூரத்தில் இருக்குன்னு பார்க்கணும்.."

சியாமளாதேவி சொன்னாள். "டூரிஸம் சென்டருக்குப் போய் என்கொய்ரி பண்ணினா எல்லா விபரமும் கிடைச்சிடும்.."

## 8

டூரிஸம் இன்ஃபர்மேஷன் சென்டர் என்ற போர்டு சொன்ன அந்தக் கட்டிடம் சாயம்போன பூச்சுடன் மரங்களுக்கு மத்தியில் தெரிந்தது.

மணிக்குமார் ஒரு மரத்திற்குக் கீழே தன் காரை ஓய்வு எடுக்க விட்டுவிட்டு உள்ளே நுழைந்தான்.

I LOVE INDIA

YOU LOVE INDIA

WE LOVE INDIA என்ற வாசகங்கள் வண்ண மயமான ஒரு போஸ்டரில் தெரிய, பக்கத்துச் சுவர்களில் காஷ்மீர் ஏரியும், தாஜ்மகாலும், அமிர்தசரஸ் பொற்கோவிலும், மதுரை கோபுரமும், குதுப்மினாரும் பேக்லைட் நியான் வெளிச்சத்தில் கண்களுக்குள் குளுமையாய் பாய்ந்தது.

கெளண்டரில் இருந்த பெண் வெளிநாட்டுத் தம்பதிகள் இரண்டு ஜோடிக்கு மகாபலிபுரம் போவதைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருக்க, மணிக்குமார் காத்திருந்தான்.

சில நிமிஷங்களுக்குப் பிறகு அந்தத் தம்பதிகள் நகர்ந்து போனதும் மணிக்குமார் கெளண்டரில் இருந்த பெண்ணை நெருங்கினான்.

"எக்ஸ்க்யூஸ் மீ.."

"எஸ்.."

"ஒரு விபரம் வேண்டும்..?"

"கேளுங்கள்..?"

"சுற்றுலா ஸ்தல லிஸ்ட்டில் வயலெட் ஐலேண்ட்ஸ் இருக்கிறதா..?"

"வயலெட் ஐலேண்ட்ஸ்..?"

"யெஸ்.."

"ஒரு நிமிஷம்.." என்று சொன்னவள் பக்கத்தில் இருந்த கம்ப்யூட்டருக்கு ஆட்காட்டி விரலைக் கொண்டு போய் ஒரு பட்டனைத் தட்டினாள்.

கம்ப்யூட்டர் க்ரே வண்ணத்தில் ஒளிர்ந்து நீல நில எழுத்துக்களைப் பிரசவித்தது. வி என்கிற ஆங்கில எழுத்தில் ஆரம்பமாகும் ஊர்கள் பெயர்களை திரையில் எழுதி எழுதிக் காட்டிவிட்டு - வயலெட் ஐலேண்ட்ஸ் வந்ததும் நிலை கொண்டது.



அந்தப் பெண் மணிக்குமாரை ஏறிட்டாள்.

"சுற்றுலா ஸ்தல லிஸ்ட்டில் நீங்கள் குறிப்பிட்ட வயலெட் ஐலேண்ட்ஸ் இருக்கிறது.."

"தேங்க் யூ வெரிமச். அந்தத் தீவைப் பற்றி லிட்ரேச்சர் புத்தகம் ஏதாவது இருக்கா..?"

"இல்லை. ஆனால் உங்களுக்குத் தேவையான அந்த வயலெட் ஐலேண்ட்டைப் பற்றிய குறிப்புகளை கம்ப்யூட்டரே பிரிண்ட் அவுட் செய்து கொடுக்கும்.." என்றவள் பிரிண்ட் அவுட் பட்டனைத் தட்டினாள். அது நிமிஷ நேரம் கரகரவென்று சத்தம் கொடுத்துவிட்டு இளம் பச்சை நிற காகிதத்தை வெளியே தள்ளியது. அவள் அதை எடுத்து மணிக்குமாரிடம் நீட்டினாள்.

"ப்ளீஸ் கோ த்ரூ இட்.. இதில் உங்களுக்குத் தேவையான எல்லா விபரங்களும் இருக்கின்றன.."

அவளுக்கு மறுபடியும் நன்றி சொல்லிவிட்டு அந்த பிரிண்ட் அவுட் தாளோடு காருக்கு வந்தான் மணிக்குமார்.

ட்ரைவிங் சீட்டுக்குச் சாய்ந்து கொண்டு அந்த ப்ரிண்ட் அவுட் தாளைப் பார்வையிட்டான்.

## 9

காமோத் வீடு.

சியாமளாதேவியும், மணிக்குமாரும் அந்த முன்னிரவு நேரத்தில் காமோத்துக்கு முன்பாய் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள்.

"அப்படீன்னா நாம வயலெட் ஐலேண்ட்டுக்குப் போகணும்னா அந்தமானுக்குப் போய் அங்கிருந்து போட் எடுத்துகிட்டுப் போகணும் இல்லையா..?"

காமோத் கேட்க, மணிக்குமார் தலையசைத்தான்.

"ஆமா. லிட்டில் அந்தமானிலிருந்து ரெண்டு மணி நேர போட் பயணம். ரொம்பச் சின்னத் தீவு அது. ஏழு சதுர கிலோ மீட்டர் பரப்பளவுதான்.

தென்னை மரங்களும், இண்டிகாக்கஸ் பூக்களும் தான் அங்கே ஹைலைட்ஸ். டூரிஸ்ட் அட்ராக்ஷன் ரொம்பக் கம்மி. அந்த ஐலேண்ட்ல ரெண்டே ரெண்டு ஹோட்டல்தான். எப்பப் போனாலும் தங்க ரூம் கிடைக்கும். அந்தத் தீவுல ஐந்நூறுக்கும் மேற்பட்ட இந்திய வம்சாவளி பழங்குடியினர் இருக்காங்க. அவங்க பேசற பாஷைக்கு இன்னமும் பேர் கொடுக்கலை."

"எல்லாம் சரி மணி. அந்தத் தீவுக்கு நாம எப்பப் போறோம்? மூணு பேரும் போறோமா? இல்லை. இங்கே யாராவது ஒருத்தர் இருந்துட்டு ரெண்டு பேர் மட்டும் போறோமா..?"

"ரெண்டு பேர்தான் போகணும். ஏன்னா இங்கே இருக்கற நந்தாவுக்கு யாராவது ஒருத்தர் பாதுகாப்பாக இருக்க வேண்டியது அவசியம்."

"ஏதாவது ஒரு விஷ ஊசியைப் போட்டு நந்தாவோட கதையை முடிச்சிட்டா என்ன..?" காமோத் சொல்ல சியாமளாதேவி குறுக்கிட்டுத் தலையசைத்தாள்.

"நோ காமோத். நந்தா இன்னும் ஒரு மாச காலத்துக்காவது உயிரோடு இருக்கணும்."

"இனி எதுக்காக அவ உயிரோடு இருக்கணும்..? நமக்கு வேண்டிய விஷயங்கள்தான் அவகிட்டயிருந்து வந்தாச்சே.."

"புரியாமப் பேசாதே காமோத். நந்தாவை சப்கான்ஷியஸ்க்கு உட்படுத்தி விஷயங்களை வாங்கியிருக்கோம். வாஸ்தவம்தான். இது முதல் ஸ்டேஜ். வயலெட் ஐலேண்டுக்குப் போய் இண்டிகாக்கஸ் பூக்களைக் கொண்டு வந்து எய்ட்ஸ் நோய் மருந்தைத் தயாரிக்கும் முயற்சியில் நாம ஈடுபடும்போது சில சந்தேகங்கள் எழலாம். அந்த சந்தேகங்களுக்கு அவ ஒருத்தியாலதான் பதில் சொல்ல முடியும். அந்த சமயத்துல அவ வேணும்.."

காமோத் தலையைச் சொறிந்தான். "இந்தக் கோணத்தை நான் யோசிச்சே பார்க்கலை.."



"மணி சொன்ன மாதிரி நம்ம மூணு பேர்ல ஒருத்தர் நந்தாவைப் பார்த்துக்கணும். ரெண்டு பேர் மட்டும் வயலெட் ஐலேண்ட்டுக்குப் போகணும்.."

"யார் இங்கேயிருக்கறதுன்னு நீயே சொல்லிடு சியாமளா..?"

"சொல்லட்டுமா...?"

"சொல்லு.."

"மணி இங்கேயே இருந்து நந்தாவைப் பார்த்துக்கட்டும். நீயும் நானும் வயலெட் ஐலேண்ட்டுக்குப் போகலாம் காமோத்."

காமோத் புன்னகைத்தான்.

"நான் ரெடி.."

"மணி.. நீ என்ன சொல்றே..?"

"ஐ ஹேவ் நோ அப்ஜெக்ஷன். நந்தாவை வேளாவேளைக்கு சாப்பிட வெச்சு அவளை நல்ல கண்டிஷன்ல வெச்சிருக்க வேண்டியது என்னோட ட்யூட்டி போதுமா..?"

காமோத் சியாமளாதேவியை ஏறிட்டான்.

"சரி. நாம என்னிக்குப் புறப்படறோம்..?"

"ப்ளைட்ல டிக்கெட் கிடைச்சா நாளைக்கே புறப்பட்டுப் போயிடலாம்."

"ப்ளைட் டிக்கெட்டுக்கு நான் ஏற்பாடு பண்ணிடறேன். நாளைக்கு மத்தியானம் நாலு மணிக்கு அந்தமான் ஃபோர்ட்பிளேயருக்கு ஒரு ப்ளைட் இருக்கு. போயிடலாம். பயணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளை நீ பண்ணிக்க.."

மணிக்குமார் இரண்டு பேரையும் மாறி மாறி பார்த்தபடி சொன்னான்.

"சப்-கான்ஷியஸ் மைண்ட்ல நந்தா சொன்னது எல்லாம் ஞாபகம் இருக்கட்டும். இண்டிகாக்கஸ் பூக்கள்ல நமக்கு வேண்டியது ஆண் பூக்கள் இல்லை. பெண் பூக்கள்தான். அதை மட்டும் கொண்டு வந்தால் போதும். நீங்க பெண் பூக்களை சேகரம் பண்ணும்போது மத்தவங்க கவனம்

உங்கமேல இருக்கக் கூடாது.."

சியாமளாதேவி சிரித்தாள்.

"மணி.. நீ இதையெல்லாம் சொல்லணுமா? இந்த விஷயத்துல நாங்க எப்படி நடந்துக்கணும்னு எங்களுக்குத் தெரியாதா..?"

"சரி. நாளைக்குக் காலைல மறுபடியும் வாக்கிங் போகிற நேரத்தில் பேசிக்குவோம்.."

சியாமளாதேவி எழுந்தாள்.

## 10

மணிக்குமார் வீடு வந்து சேர்ந்தபோது இரவு பதினொரு மணி. காம்பவுண்ட் கேட்டைத் திறந்து விட்ட வேலைக்காரன் கார் போர்டிகோவுக்கு வந்ததும் குனிந்து சொன்னான்.

"பெரிய அய்யா டெல்லியிலிருந்து நாலைஞ்சு தடவை உங்களுக்குப் போன் பண்ணி உங்களைக் கேட்டாங்கய்யா.."

மணிக்குமார் காரினின்றும் வெளிப்பட்டுக் கொண்டே கேட்டான். "கடைசியாக எத்தனை மணிக்குப் பண்ணினார்..?"

"பத்தரை இருக்கும்ங்கய்யா.."

"டெலிபோன் நம்பர் ஏதாவது கொடுத்தாரா?"

"அவர் தங்கியிருக்கற ஹோட்டல் போன் நம்பரைக் கொடுத்திருக்காங்கய்யா.."

மணிக்குமார் உள்ளே போக, வேலைக்காரன் பின்னாலேயே வந்து ஒரு காகிதத் துண்டில் குறித்து வைத்த போன் நம்பரை நீட்ட அதை வாங்கிக் கொண்டவன் டெலிபோனுக்குப் பக்கத்தில் போய் ரிசீவரை எடுத்துக் காதுக்கு ஒட்ட வைத்துக் கொண்டு டயல் எண்களைத் தட்டினான்.

மறுமுனையில் உடனே ரிங் போய் ரிசீவர் எடுக்கப் பட்டது.

"ஹலோ." செல்வபாண்டியன் குரல் கேட்டது.



மணிக்குமார் பதிலுக்கு "அப்பா.." என்றான்.

"டேய் மணி.. எங்க போயிட்டே..?"

"ஒரு ஆக்சிடெண்ட் கேஸ். ஜி.எச். வரை போயிட்டு இப்பதான் வர்றேன். நீங்க நாலைஞ்சு தடவை போன் பண்ணிட்டதா துரைசாமி சொன்னான். என்ன விஷயம்பா..? நீங்க டெல்லியிலிருந்து எப்ப ரிட்டர்ன்..?"

"இன்னும் இரண்டு நாள் ஆகும்போல மணி. லேப் டெக்னீஷியன்ஸ் சைடில் ஏதோ ஸ்ட்ரைக். அது ரெண்டு நாள்ல முடிஞ்சுடும். ஸ்ட்ரைக் முடிஞ்சதும் கையோடு கொண்டு போயிருக்கற மருந்து சாம்பிளை டெஸ்ட் பண்ணிப் பார்த்துட்டு அடுத்த ப்ளைட்ல மெட்ராஸுக்கு வந்திடுவேன்.."

"அப்பா.. நீங்க ஏன் டெல்லியில அநாவசியமா ஸ்டே பண்ணணும்..? மருந்து சாம்பிளைக் கொடுத்துட்டு வந்திடுங்க. அவங்க டெஸ்ட் பண்ணிட்டு ரிப்போர்ட்டை அனுப்பட்டும்.."

"நோ.. நோ.. டெல்லிக்கு வந்தாச்சு.. இருந்து டெஸ்ட் பண்ணிப் பார்த்துட்டே வந்துடறேன். அந்தப் பொண்ணு நந்தா கோயமுத்தூர்ல என்னோட பதிலுக்காக ரொம்பவும் ஆர்வமாக் காத்துட்டிருப்பா.."

"அங்கே ஸ்ட்ரைக் முடிய லேட் ஆனா..?"

"லேட் ஆக சான்ஸ் இல்லை. இன்னிக்குப் பேச்சு வார்த்தை நடக்குது. நாளைக்கு அநேகமாக ஸ்ட்ரைக்கை வித்ட்ரா பண்ணிடுவாங்க. எப்படியும் நாளை கழிச்சு மறுநாள் ராத்திரிக்குள்ள மெட்ராஸ் வந்திடுவேன். டெல்லியிலிருந்து புறப்படறதுக்கு முந்தி உனக்குப் போன் பண்றேன்."

"சரிப்பா.."

மணிக்குமார் ரிசீவரை வைத்துவிட்டு பக்கத்தில் இருந்த சோபாவுக்கு சாய்ந்தான்.

'பாவம் அப்பா.. எய்ட்ஸ் நோய்க்கான மருந்துன்னு நினைச்சு வெள்ளி நைட்ரேட்

கரைசலை கையில வெச்சிட்டு டெல்லியில காத்துட்டிருக்கார். உண்மை தெரியும்போது அந்த நந்தாவை மனசுக்குள்ளேயே நார் நாராகக் கிழிப்பார்...!'

## 11

"நந்தா.."

கட்டிலில் கண்மூடி படுத்திருந்த நந்தா குரல் கேட்டு விழிகளை மலர்த்தினாள்.

மணிக்குமார் பக்கத்தில் உட்கார்ந்திருப்பதைப் பார்த்ததும் திடுக்கிட்டுப் போய் எழுந்து உட்கார்ந்தாள்.

அவன் புன்னகைத்தான்.

"நல்ல தூக்கம் போலிருக்கு.. எழுந்திரிச்சுப் பாத்ரூம் போய் உன்னோட வேலைகளை முடிச்சிட்டு வா. டிபன் ரெடி.. ப்ளாஸ்க்ல சூடான காபியும் ரெடி.."

".........."

"என்ன பார்க்கறே..?"

"நே..நே.. நேத்து ராத்திரி எனக்கு ஒரு ஊசி போட்டாங்களே. அது எதுக்காக..?"

"அதெல்லாம் உனக்குத் தேவையில்லாத விஷயம். பயப்படாதே. உன்னோட கற்புக்கு களங்கம் ஏற்படாது. இனியும் அதே ஸ்ட்ராங்கோடுதான் இருக்கும்.."

"பின்னே.. எதுக்காக அந்த ஊசி..?"

"உன்னைத் தூங்க வைக்கறதுக்காகத்தான்.."

"நான் நம்ப மாட்டேன். அந்த ஊசி மருந்து என் உடம்புல பாய்ஞ்சதும் எனக்குக் காத்துல மிதக்கற மாதிரியான உணர்வு இருந்தது. கொஞ்ச நேரத்துல யாரோ என்கிட்ட பேச்சுக் கொடுத்த மாதிரி இருந்தது. ஆனா என்ன பேசினேன்னு எனக்கே தெரியலை.."

மணிக்குமார் புன்னகைத்தான். "நந்தா.. நீ



எங்கிட்டேயிருந்து எதையெல்லாம் மறைக்க நினைச்சியோ.. அதையெல்லாம் உன்னோட சப்கான்ஷியஸ் மைண்ட்லேருந்து வெளியே வந்தாச்சு. உன்னோட அப்பா எய்ட்ஸ் மருந்து தயாரிச்சது எப்படிங்கற உண்மையை நீயே உன் வாயாலேயே சொல்லிட்டே.."

"பொய்.."

"பொய்யா..? எது பொய்..?"

"உண்மையை நான் சொல்லிட்டதா நீ சொல்றது பொய்.."

மணிக்குமார் சிரித்தான்.

"நந்தா.. இன்னிக்கு மத்தியானம் ரெண்டு மணி வாக்குல காமோத்தும், சியாமளாதேவியும் அந்தமான் புறப்பட்டுப் போறாங்க.."

நந்தாவின் முகம் நிறம் மாறியது. மணிக்குமார் தொடர்ந்தான்.

"பார்த்தியா.. உன்னோட முகம் மாறிடுச்சு.. உங்கப்பா கண்டுபிடிச்ச எய்ட்ஸ் மருந்துக்கு இண்டிகோனான்னு பேரு. சரியா..? அந்த மருந்தை இண்டிகாக்கஸ்ங்கற ஊதா நிறப் பெண் பூவுல இருக்கற சூல் முடியிலிருந்து தயாரிச்சிருக்கார் உன்னோட அப்பா. சரியா? அந்த ஊதா நிறப்பூக்கள் இண்டிகாக்கஸ் பூக்கற ஒரே இடம் வயலெட் ஐலேண்ட். அந்த வயலெட் ஐலேண்ட் லிட்டில் அந்தமான் தீவிலிருந்து ரெண்டு மணி நேர போட் பயணத்தூரத்துல இருக்குது.. சரியா..?"

நந்தா மணிக்குமாரை உறைந்த கண்களோடு பார்த்தாள். அவன் கேலியாய்ச் சிரித்தான்.

"என்ன நந்தா.. இப்பவாவது இதையெல்லாம் உண்மைன்னு நம்பறியா..? இல்லே.. இதையும் பொய்னு சொல்லப்போறியா..?"

நந்தா கண்களில் நீரோடு தலையைக் கவிழ்த்துக் கொள்ள.. மணிக்குமார் பக்கத்தில் வந்து அவளுடைய தோளைத் தொட்டான்.

"இனிமே நீ எங்ககிட்ட முரண்டு பிடிச்சு எந்தப் பிரயோஜனமும் இல்லை. உன் உடம்புக்குள்ள ஒரு ஊசியைப் போட்டுட்டாப் போதும். எங்களுக்கு வேண்டிய உண்மைகளை உன்னையும் அறியாம நீயே சொல்லிடுவே. காமோத்தும், சியாமளாதேவியும் அந்த வயலெட் ஐலேண்ட்டுக்குப் போய் இண்டிகாக்கஸ் பூக்களை சேகரம் பண்ணிட்டு வரப் போறாங்க. அவங்க பூக்களோடு வந்ததும் எய்ட்ஸ் மருந்தைத் தயாரிக்கும் எங்களுடைய முயற்சியில் நீயும் பங்கெடுத்துக்கணும். நீ எங்களுக்கு முழு ஒத்தழைப்புக் கொடுத்தா உயிரோடு இருப்பே. இல்லைன்னா இந்தக் காட்டுப் பகுதியிலயே ஏதாவது ஒரு இடத்துல ஆழமாக் குழி தோண்டி உன்னைப் புதைச்சிடுவோம்.."

நந்தா கோபத்தில் மூச்சிரைத்துக் கொண்டு அவனைப் பார்த்தாள்.

மணிக்குமார் சிரித்தான்.

"இப்படியெல்லாம் பார்த்தா நான் பயந்துட மாட்டேன். உனக்கு இன்னொரு விஷயம் தெரியுமா..? நந்தா நீ கொண்டு வந்த எய்ட்ஸ் மருந்து இண்டிகோனாவை ஒரு எய்ட்ஸ் நோயாளிக்குப் போட்டு டெஸ்ட் பண்ணிப் பார்த்ததில் நல்ல ரிசல்ட் கிடைச்சிருக்கு. அதாவது இந்த மூணு நாள்லயே அந்த நோயாளியின் இரத்தத்தில் இருந்த எய்ட்ஸ் நோய்க் கிருமிகளான எச்.ஐ.வி.யோட எண்ணிக்கை கணிசமான அளவில் குறைஞ்சிருக்கு. இதுவரைக்கும் மருத்துவத் துறையில் காணாத அற்புதம் இது. இந்த அற்புதத்தைக் கை நழுவிப் போக நாம விடலாமா?"

நந்தா அவனைப் பார்த்து இரைந்தாள்.

"என்னோட அப்பா கஷ்டப்பட்டுக் கண்டுபிடிச்ச மருந்து இது. இது முறைப்படி அரசாங்கத்துக்குப் போய்ச் சேரணும். உன்னை மாதிரியான ஆளுங்க கையில் கிடைச்சா அது ஒரு வியாபாரப் பொருளா மாறிடும். இதுக்கு நான் விட மாட்டேன்."



"என்னது? விட மாட்டியா..?"

"ஆமா.."

"உன்னால என்ன பண்ண முடியும்? நான் நினைச்சா இந்த நிமிஷமே கூட உன்னைச் சுட்டுக் கொன்னு பெட்ரோலை ஊத்தி எரிச்சு சாம்பலாக்க முடியும். உன்னோட வீராப்புப் பேச்சையெல்லாம் மூட்டை கட்டி ஓரமா வெச்சிட்டு போய் குளிச்சிட்டு வா.. டிபனும், காபியும் சூடா இருக்கு.."

"நான் குளிக்கலை.. எனக்கு வேண்டாம்.."

"இப்ப நீ குளிச்சிட்டு வரப்போறியா இல்லையா..?"

"மாட்டேன்.."

"நீ இப்படி அடம் பிடிச்சியானா அதுக்கப்புறம் நானே உன்னை குளியலறைக்குத் தூக்கிட்டுப் போய்க் குளிக்க வைக்க வேண்டி வரும். நீயே போய் குளிக்கறியா..? இல்லை.. நானே குளிப்பாட்டி விடட்டுமா..?"

மணிக்குமார் கண்ணைச் சிமிட்டிக் கொண்டே கேட்க, நந்தா ஒரு பயப்பார்வையோடு எழுந்து குளியலறையை நோக்கிப் போனாள்.

## 12

அந்தமான் அந்த விடிகாலை வேளையின் ஆரஞ்சு வெளிச்சத்தில் அழகாய் இருந்தது. சமுத்திரக் காற்று எல்லாத் திசைகளிலும் தீவை அலம்பிக் கொண்டிருந்தது.

ஹோட்டல் ஸ்வீட் ஃப்ரீஸ் கட்டிடத்தின் நான்காவது மாடி. 404 எண் அறை.

உள்ளே சியாமளாதேவியும், காமோத்தும் ஜன்னலுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கைகளில் ஏந்திய கப் அண்ட் சாஸர்களோடு பேசிக் கொண்டிருந்தார்கள்.

சியாமளாதேவி கேட்டாள். "காமோத்.. நாம ப்ளைட்ல வரும்போது சொன்ன யோசனையைப்

பத்தி நீ என்ன நினைக்கறே...?"

காமோத் ஒரு வாய்க் காபியை விழுங்கிவிட்டுச் சொன்னான். "இன்னும் யோசனை பண்ணிட்டே தான் இருக்கேன்."

அவள் சிரித்தாள்.

"ராத்திரி முழுக்க யோசனை பண்ணியுமா ஒரு முடிவுக்கு வர முடியலை..."

"சியாமளா.. இந்த இண்டிகோனா எய்ட்ஸ் மருந்துக்கான ஃபார்முலா இன்னும் முழு வடிவமா நமக்குக் கிடைக்கலை. இந்த அரைகுறை ஃபார்முலாவைக் கையில் வெச்சிட்டு மணிக்குமாரையும், நந்தாவையும் தீர்த்துக் கட்றது அவ்வளவு சரியா படலை. ரெண்டு உயிர்களைப் பறிக்கற விஷயம். நிதானமா யோசனை பண்ணிச் செயல்படணும்.. இல்லேன்னா மாட்டிக்குவோம்.."

சியாமளாதேவி புன்னகைத்தாள். "அது எனக்குத் தெரியாதா என்ன..? நான் இந்த விஷயத்துல இவ்வளவு அவசரப்படறதுக்கு காரணம் இருக்கு காமோத்.."

"என்ன காரணம்..?"

"மணிக்குமாரை நாம நம்பமுடியாது. டாக்டராக இருந்தாக்கூட அவன் பக்கா கிரிமினல் மைண்ட். எந்த நேரத்துல அவன் புத்தி எப்படி மாறும்னு சொல்ல முடியாது."

"நீ சொல்றதும் சரிதான் சியாமளா. உன்னை காட்டிலும் எனக்கு அந்த மணிக்குமாரைப் பத்தி நல்லாவே தெரியும். பட். அவனோட கதையை முடிக்கறது அவ்வளவு சுலபமில்லை. அப்படியே அவனோட கதை முடிக்கப் பட்டாலும் போலீசுக்கு நம்ம மேல சந்தேகம் வராம இருக்கணும்.."

"நம்ம மேல போலீசுக்கு சந்தேகம் வர என்ன காரணம் இருக்கு காமோத்..?"

"சியாமளா. நீ ஒரு விஷயத்தை மறந்துட்டே. மணிக்குமார்கிட்ட ரொம்பவும் நெருக்கமாகப்



பழகறது நீயும் நானும்தான். வேற யாரும் அவனுக்கு ப்ரெண்ட்ஸ் கிடையாது. இந்த நிலைமைல அவனைத் தீர்த்துக் கட்டினா போலீசுக்கு கண்டிப்பா நம்ம மேலதான் சந்தேகம் திரும்பும்.."

"சந்தேகம் வராம இருக்க என்ன பண்ணலாம்?"

"நிறைய யோசிக்கணும். அவசரப்பட்டு எந்தக் காரியத்தையும் பண்ணக்கூடாது. மொதல்ல இங்கே என்ன காரியத்துக்காக வந்தோமோ அதை சக்சஸ்ஃபுல்லா பண்ணி முடிப்போம். ஊர் போய்ச் சேர்ந்ததும் பேசுவோம். மணிக்குமாரோட மரணம் ஒரு ஆக்சிடெண்ட் மாதிரி இருக்கணும்.."

காமோத் சொல்லிக் கொண்டிருக்கும்போதே பக்கத்தில் இருந்த இண்டர்காம் சிணுங்கியது.

சியாமளாதேவி ரிசீவரை எடுத்துக் காதுக்குக் கொடுத்தாள்.

"எஸ்.."

ஹோட்டல் ரிசப்ஷனிலிருந்து பேசினார்கள்.

"மேடம். லிட்டில் அந்தமானிலிருந்து வயலெட் ஐலேண்ட் போக படகு வேண்டுமென்று கேட்டிருந்தீர்கள் இல்லையா..?"

"ஆமாம்.."

"படகு உங்களுக்காக ரிசர்வ் செய்யப்பட்டு விட்டது."

"ரொம்பவும் நன்றி.."

"படகு எண்ணையும், அது புறப்படும் நேரத்தையும் குறித்துக் கொள்கிறீர்களா..?"

"சொல்லுங்கள்..?"

"படகின் எண் 257. படகின் பெயர் ஸீ க்வின். படகு புறப்படும் நேரம் ஏழு மணி."

"நன்றி.."

"படகை எத்தனை நாளைக்கு உபயோகப் படுத்தப் போகிறீர்கள்..?"

"இரண்டு நாள்.."

"முன் தொகையாக ரூ.10000 வேண்டும்.."

"கட்டி விடலாம்.."

"சரியாய் ஏழு மணிக்கு படகு தயாராக இருக்கும் டெர்மினல் பாயிண்டுக்கு போங்கள்.."

சியாமளாதேவி ரிசீவரை வைத்துவிட்டு விஷயத்தைச் சொல்ல, காமோத் எழுந்தான். மணிக்கட்டில் இருந்த வாட்ச்சைப் பார்த்துக் கொண்டே சொன்னான்.

"இப்போ மணி அஞ்சே முக்கால். குளிச்சு ரெடியாக எப்படியும் ஒரு மணி நேரமாகும். மொதல்ல நீ போய் குளிச்சு ரெடியாகு. நான் ஹோட்டல் மொட்டை மாடி வரைக்கும் போய் ஒரு பத்து நிமிஷம் வாக் பண்ணிட்டு வர்றேன்.."

சிகரெட் ஒன்றை பற்ற வைத்துக் கொண்டு காமோத் அறையினின்றும் வெளியேறினான்.

விடியற்காலை வெளிச்சத்தில் ஹோட்டலின் க்ரானைட் தள வராந்தா நீளமாய் மினுமினுப்பாய் தெரிய.. அதில் மெதுவாய் நடைபோட்டு - வராந்தாவின் வளைவில் உற்பத்தியாகியிருந்த மாடிப்படிகளில் ஏறி மொட்டை மாடிக்குப் போனான்.

ஓஸோன் நிரம்பிய கடல் காற்று வேகமாய் காமோத்தை அலம்பியது.

நான்கு பக்கமும் கடல், சூரியனின் பொன்னிற வெளிச்சத்தில் அசைந்து கொண்டிருந்தது.

ஆங்காங்கே கூட்டம் கூட்டமாய் தென்னை மரங்கள். அம்மரங்களுக்கு மேலே பறக்கும் கடற்பறவைகள்.

காமோத் அந்த பரந்த மொட்டை மாடியில் யாரும் இல்லை என்பதை உறுதி செய்து கொண்டு தன் மார்புப் பகுதியில் மறைத்து வைத்திருந்த குளோபல் இணைப்புக் கொண்ட செல்போனை எடுத்து அதற்கு உயிர் கொடுத்து எண்களைத் தட்டினான்.

நிமிஷ நேர அவகாசத்துக்குப் பின் -



சென்னைக்குரிய இணைப்பு கிடைத்து லைனில் மணிக்குமார் வந்தான்.

"மணிக்குமார்.."

"ம்.."

"நான் காமோத்.."

"சொல்லு.. உன்னோட போனுக்காகத்தான் வெயிட் பண்ணிட்டிருக்கேன்.."

"ஹோட்டலோட மொட்டை மாடியில் நின்னு இப்போ பேசிட்டிருக்கேன். சியாமளா ரூம்ல குளிச்சிட்டு இருக்கா. காலையில ஏழு மணிக்கு லிட்டில் அந்தமானிலிருந்து வயலெட் ஐலேண்டுக்கு கிளம்பிடுவோம். போட்டுக்கு ரிசர்வ் பண்ணியாச்சு. ரெண்டு நாள் வயலெட் ஐலேண்ட்ல தங்கி இண்டிகாக்கஸ் பூக்களை சேகரம் பண்ணிட்டு வர்றோம்.."

"சரி. வயலெட் ஐலேண்டுக்குப் போய்ச் சேர்ந்ததும் செல்போன்ல காண்டாக்ட் பண்ணு. வேற ஏதாவது விஷயம் இருக்கா..?"

காமோத் சிரித்தான்.

"ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்றதுக்காகத்தான் இந்தப் போனே.."

"என்ன விஷயம்..?"

"நீயும் நானும் நினைச்சிட்டிருக்கற மாதிரி சியாமளா தேவி இல்லை."

"பின்னே..?"

"உன்னை இந்த விஷயத்துல தீர்த்துக்கட்ட என்கிட்ட யோசனை கேட்கறா.."

"எ..என்னது..?"

"பதட்டப்படாதே.. அவளோட கதையை முடிக்கறதுக்கு நீயும், நானும் போட்டு வெச்சிருக்கற திட்டம் தெரியாம அவளோட சுயரூபத்தைக் காட்டிட்டா. அவளை ஒரு தண்ணிப் பாம்புன்னு நினைச்சது நம்ம தப்பு. விஷம் கக்கற பாம்புன்னு இப்பத்தானே தெரியுது.."

"காமோத்.."

"என்ன..?"

"அந்த விஷப்பாம்பை சமயம் கிடைச்சா..?"

"கிடைச்சா..?"

"வயலெட் தீவிலயே அடிச்சுக் கொன்னுடேன்.."

"அவசரப்படாதே மணி. இங்கே வெச்சு அந்தக் காரியம் வேண்டாம். சென்னைக்கு வந்ததும் பார்த்துக்குவோம். அவளை இன்னமும் பேச விட்டு பல்ஸ் பார்க்கறேன்."

"ஜாக்கிரதை. பார்த்து அவளை ஹேண்டில் பண்ணு.."

"எனக்குத் தெரியாதா என்ன..? அங்கே நந்தா எப்படி இருக்கா..?"

"அதே நந்தாதான். கொஞ்சம் அப்செட் மூட். இவளையும் இங்கே ரொம்ப நாளைக்கு வெச்சிட்டிருக்க முடியாது. நீ சென்னை வந்ததும் ரெண்டு பொட்டச்சிகளுக்கும் நாள் குறிச்சிடலாம்.."

"சரி., வயலெட் ஐலேண்டுக்குப் போனதும் போன் பண்றேன்.."

செல்போனை அணைத்தான் காமோத்.

## 13

வீட்டில் அந்தமானின் படகுத் துறைக்கு சியாமளாதேவியும், காமோத்தும் போய்ச் சேர்ந்தபோது ஏழு மணி.

படகு எண் 257 புதுப் பெயிண்டின் பூச்சோடு காத்திருந்தது. படகின் பக்கவாட்டு உடம்பில் ஸீ குயின் என்ற எழுத்துக்கள் அலைகளின் அசைவோடு தெரிந்தது.

படகை நெருங்கினார்கள். இரண்டு பேர் மட்டுமே அமரக்கூடிய மோட்டார் படகு அது. படகின் முன்பக்கம் உட்கார்ந்து சிகரெட் பிடித்துக்



கொண்டிருந்த இளைஞன் காமோத்தையும், சியாமளாதேவியையும் பார்வையால் வாங்கியதும் மரியாதையைக் காட்டுவதற்காக அதை வீசி எறிந்துவிட்டு ஓடி வந்தான். தூக்கிக் கட்டியிருந்த லுங்கியிக் கீழே இறக்கிவிட்டு விஷ் செய்தான்.

காமோத் அந்த இளைஞனின் முகத்தைப் பார்த்து விட்டுக் கேட்டான்.

"நீ தமிழ் ஆளா..?"

"ஆமா சார்.."

"பேர் என்ன..?"

"சுப்ரமணி சார்."

காமோத் சியாமளாதேவியைப் பார்த்துச் சிரித்தான்.

"நல்லதாப் போச்சு. ஏதாவது விபரம் வேணும்னா சுப்ரமணிகிட்டக் கேட்டுத் தெரிஞ்சிக்கலாம்."

படகில் ஏறினார்கள்.

"எத்தனை வருஷமா இங்கே இருக்கே..?"

"அது ஆச்சு சார் பத்து பதினைந்து வருஷம்.." சொல்லிக் கொண்டே படகின் மோட்டாரை ஸ்டார்ட் செய்தான் சுப்ரமணி.

படகு நீரைக் கிழித்துக் கொண்டு செல்ல ஆரம்பித்தது. "சார்.. கொஞ்சம் நல்ல வேகத்துல போகலாமா.. இல்லை மெதுவாகப் போகலாமா?"

"மிதமான வேகமே போதும்.."

"இப்பதான் பர்ஸ்ட் டைம் வர்றீங்களா..?"

"ஆமா.."

போட் வேகம் எடுத்து நீரைக் கிழித்துக் கொண்டு போனபோது சியாமளாதேவி கேட்டாள்.

"போட் வயலெட் ஐலேண்ட் போய்ச் சேர எவ்வளவு நேரமாகும்..?"

"ரெண்டே கால் மணி நேரத்துல போய்டலாம்.."

"இப்போ டூரிஸ்ட் கூட்டம் அதிகமாக இருக்குமா..?"

"இருக்காது சார்.. நீங்க அந்தத் தீவுல ரெண்டு நாள் தங்கப் போறீங்களா சார்..?"

"ஆமா.."

"அந்தத் தீவுல பார்க்கறதுக்கு ஒண்ணுமே இல்ல சார். எங்கே பார்த்தாலும் ஒரே ஊதாப்பூ மயம். ஒரு மணி நேரத்துக்கும் மேல பார்த்தா அலுத்துப் போகும் சார்.. அந்தப் பூ எதுக்குமே உபயோகப் படாத பூ சார்.. பறிச்ச அடுத்த நிமிஷமே வாடிப் போயிடும். செடியில இருக்கற வரைக்கும்தான் சார் அழகு. இங்கே இருக்கற ஜனங்க அந்தப் பூவுக்கு வெச்சிருக்கற பேரு உதாவாத பூ.."

காமோத்தும், சியாமளாதேவியும் ஒருவரை யொருவர் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டார்கள்.

படகு இப்போது கடலின் மையத்துக்கு வந்திருக்க, படகோட்டி சுப்ரமணி கேட்டான்,

"உங்ககிட்ட பைனாகுலர் இருக்கா சார்..?"

"இருக்கு.."

"அதை எடுத்து வலது பக்கமாப் பாருங்க.."

காமோத் தன் தோளில் தொங்கிக் கொண்டிருந்த பைக்குள் கையை நுழைத்து அந்த இட்டாலி மேக் பைனாகுலரை எடுத்துக் கண்களில் பொருத்தி வலது பக்கமாய்ப் பார்த்தான்.

கடலின் நீர்ப்பரப்பைத் தாண்டி மிகத் தொலைவில் மண்ணால் போட்ட கோடு மாதிரி எதுவோ தெரிந்தது.

"ஏதோ ப்ரவுன் கலர் கோடு மாதிரி தெரியுது.."

"அதான் சார் வயலெட் ஐலேண்ட். படகு இதே வேகத்துல போனா இன்னும் ரெண்டு மணி நேரத்துல அந்த ஸ்பாட்டுக்குப் போயிடலாம்.."

காமோத் பைனாகுலர் வழியாக ஒரு மண் தீற்றல் மாதிரி தெரியும் அந்த் வயலெட் ஐலேண்டையே இமைக்காமல் பார்த்தான்.

அது மில்லி மீட்டர் மில்லி மீட்டராய் பெரிதாகிக் கொண்டே வந்தது.



# 14

சென்னை. காலை ஒன்பது மணி.

மணிக்குமார் நந்தாவைப் பார்ப்பதற்காக கிளம்பி போர்டிகோவில் இருந்த கார்க்கு வந்தபோது, காம்பவுண்ட் கேட்டுக்குள் அந்த டாக்சி நுழைந்து ஓரமாய் ஒதுங்கி நின்றது.

டாக்சியின் கதவைத் திறந்து கொண்டு செல்வபாண்டியன் இறங்க மணிக்குமார் ஆவலாய் அவர் பக்கத்தில் போனான்.

"என்னப்பா.. திடீர்னு டெல்லியிலிருந்து புறப்பட்டு வந்திருக்கீங்க..? ஏர்போர்ட்டிலிருந்து போன் பண்ணியிருந்தா நான் காரைக் கொண்டு வந்திருப்பேனே..?"

"போன் பண்ண ஏர்போர்ட் பூத்துக்குப் போனேன். ஒரு சின்ன க்யூ அங்கே வெயிட் பண்ணிட்டிருந்தது. அங்கே காத்திருந்து போன் பண்றதைவிட டாக்சி பிடிச்சுட்டு வந்துடறது பெட்டர்னு தோணிச்சு.."

டாக்சிக்கு பணத்தைக் கொடுத்துவிட்டு சூட்கேஸோடு உள்ளே போனார் செல்வ பாண்டியன். மணிக்குமார் பின்தொடர்ந்தான்.

"டெல்லிக்குப் போன காரியம் என்னப்பா ஆச்சு..?"

"வேஸ்ட்.."

"வேஸ்ட்டா..?"

"ஆமா.. அந்தப் பொண்ணு நந்தா கொடுத்த எய்ட்ஸ் நோய்க்கான மருந்துல எந்த மெடிக்கல் இம்பார்ட்ஸும் இல்லை. அது சாதாரண வெள்ளி நைட்ரேட் கரைசல்.."

"அப்படியா..? ஆச்சர்யமாயிருக்கே.. எதுக்காக அந்தப் பொண்ணு ஒரு சாதாரண வெள்ளி நைட்ரேட் கரைசலைக் கொண்டு வந்து கொடுத்து

எய்ட்ஸ் மருந்துன்னு சொல்லணும்..?"

செல்வபாண்டியன் உள்ளே நுழைந்த சோபாவுக்குப் போய்ச் சாய்ந்தார்.

"அந்தப் பொண்ணோட அப்பா ஒரு பாடனிஸ்ட்.. அவர் தயார் பண்ணினாராம் எய்ட்ஸ் மருந்தை. இவ்வளவு தூரம் ஒரு பொண்ணு வந்து நம்பிக்கையோடு மருந்தைக் கொடுத்துட்டுப் போனாளே.. இந்த மருந்தில் ஏதாவது இல்லாம இருக்காதுங்கற நம்பிக்கையில் டெல்லி போய் ரெண்டு நாள் தங்கியிருந்து மருந்தை டெஸ்ட் பண்ணிப் பார்த்தா வெள்ளி நைட்ரேட் கரைசல். அங்கேயிருக்கற எல்லோரும் சிரிச்சாங்க.."

மணிக்குமார் புன்னகைத்தான்.

"நீங்க டெல்லி புறப்பட்டுப் போகும்போதே சொன்னேன். நீங்க கேட்கலை.."

"அப்படியில்லை மணி. நாம எதையுமே யாரையுமே அலட்சியம் பண்ணக்கூடாது. இன்னிக்கு எய்ட்ஸ் நோய்க்கான மருந்தைக் கண்டுபிடிக்கற முயற்சியில எல்லா நாடுகளுமே மும்முரமாக ஈடுபட்டிருக்கு. ஏதாவது ஒரு மார்க்கம் கிடைக்காதான்னு எல்லா மெடிக்கல் சயன்டிஸ்ட்டும் ராத்திரியும், பகலும் கண் விழிச்சு உழைப்பைக் கொட்டிகிட்டு இருக்காங்க."

"என்ன உழைப்பைக் கொட்டினாலும் எய்ட்ஸ் நோய்க்கான மருந்தைக் கண்டுபிடிக்க இந்த நூற்றாண்டு விஞ்ஞானிகளால் முடியாது. எச்.ஐ.வி. எய்ட்ஸ் கிருமிகளை ஆண்டவன் படைச்சதுக்குக் காரணம் இந்த உலகத்தில உள்ள பாவிகளைத் தண்டிக்கத்தான்.."

செல்வபாண்டியன் சிரித்தார்.

"அப்படிச் சொல்லாதே மணி. வறண்ட பாலைவனத்தை ஆயிரக்கணக்கான சதுர மைல் பரப்புக்குப் படைச்ச கடவுள் அந்தப் பாலைவனத்தைக் கடக்கறதுக்காக ஒட்டகத்தைப் படைச்ச மாதிரி இந்தக் கொடுமையான எய்ட்ஸ்



நோய்க்கும் ஒரு மருந்து இந்த உலகத்துல ஏதோ ஒரு மூலைல இருக்கு. சமயம் வரும்போது அது ஏதாவது ஒரு விஞ்ஞானி மூலமா வெளிப்படும். அதுவரைக்கும் நாம வெயிட் பண்ணித்தான் ஆகணும்.."

"அந்த நாள் என்னிக்கோ..?" தோள்களைக் குலுக்கிய மணிக்குமார் தன் கையில் இருந்த வாட்ச்சைப் பார்த்தான்.

"அப்பா நான் கிளம்பறேன். க்ளினிக்குக்கு நேரமாச்சு. நீங்க குளிச்சு ரெஸ்ட் எடுங்க. மத்தியானம் இல்லேன்னா சாயந்திரம் பார்ப்போம்.."

மணிக்குமார் வெளியே வந்தான். போர்டிகோவில் நின்ற காரில் ஏறி காம்பவுண்ட் கேட்டைத் தாண்டியபோது பாக்கெட்டில் வைத்திருந்த செல்போன் கூப்பிட்டது.

எடுத்துக் காதுக்குக் கொடுத்தான்,

"எஸ்.."

மறுமுனையில் காமோத்தின் குரல் கேட்டது.

"மணிக்குமார் நானும், சியாமளாவும் வயலெட் ஐலேண்ட்டுக்கு வந்து சேர்ந்துட்டோம்."

"ப்ளேஸ் எப்படி..?"

"வெரி பைன். கண்ணுக்கெட்டிய தூரம் வரைக்கும் ஒரே ஊதா நிறம்தான்.."

"அங்க கூட்டம் இருக்கா..?"

"ரொம்பக் குறைச்சல்.."

"அங்கே ஓட்டல்ல ரூம் எடுத்தாச்சா..?"

"எடுத்தாச்சு.. இப்போ ஓட்டல் ரிசப்ஷன்ல உட்கார்ந்துதான் பேசிட்டிருக்கேன். ஓட்டல் பேரே இண்டிகாக்கஸ்தான். அவ்வளவு பெரிய ஓட்டல் கிடையாது. சுமாரானதுதான், மீறிப் போனா பத்து ரூம் வரைக்கும்தான் இருக்கும்.."

"சரி. சியாமளா பக்கத்துல இருக்காளா..?"

"இருக்கா..."

"போனை அவகிட்டக் கொடு.."

சில விநாடிகள் மவுனத்துக்குப் பிறகு சியாமளாவின் குரல் கேட்டது.

"ஹலோ மணி.."

"சியாமளா.. அந்தக் காரியத்தை ரெண்டு நாளைக்குள்ளே சக்சஸ்புல்லா முடிச்சிட்டு ஊ வந்து சேருங்க.."

சியாமளாதேவி சிரித்தாள்.

"இந்த நிமிஷத்திலேருந்து வேலையை ஆரம்பிச்சிட்டோம். இண்டிகாக்கஸ் பூக்கள்ல பெண் பூக்களைத் தேடி எடுக்கறது ரொம்பவும் கஷ்டமா இருக்கும் போலிருக்கே.. வழியில வரும்போதே சில பூக்களைப் பார்த்தோம். பெண் பூக்களே கிடைக்கலை.."

"கொஞ்சம் இண்டீரியராப் போய்த் தேடினா கிடைக்கும். மத்தியானத்துக்கு மேல உங்களுக்குப் போன் பண்றேன்."

செல்போனை அணைத்துவிட்டு காரை விரட்டினான் மணிக்குமார்.

அரை மணி நேரப் பயணத்துக்குப் பின் கார் நந்தாவை அடைத்து வைத்திருந்த இடத்துக்குப் போக -

அறைக்கு வெளியே காவல் இருந்த ஆள் பவ்யமாய் எழுந்து நின்றான்.

"என்ன முத்தைய்யா.. ராத்திரியில ஏதாவது பிரச்சனை பண்ணினாளா..?"

"இல்லீங்கய்யா..."

"இந்தா சாவி. கதவைத்திற.. ரெண்டு நாளா நீ வேலைக்கு வராமே நான் இவளைக் கவனிக்கப்பட்ட பாடு இருக்கே.. அது எனக்குத்தான் தெரியும்.."

"உடம்பு சொகமில்லீங்கய்யா.. இல்லேன்னா நான் லீவு போடுவேனா..?"

"சரிசரி.. உனக்கு முக்கியமான நேரத்துலதான் உடம்பு சரியில்லாமப் போகும். கதவைத் திற.."



முத்தைய்யா மணிக்குமார் நீட்டிய சாவியை வாங்கிக் கதவில் தொங்கிய பூட்டுக்கு விடுதலை கொடுத்தான்.

கதவைத் தள்ள - அது கிறிச்சிட்டுக் கொண்டு உள்ளே போயிற்று. மணிக்குமார் நுழைந்தான்.

நந்தா படுத்திருந்த கட்டில் காலியாக இருந்தது.

பதட்டமாகி வேகவேகமாய்ப் போய் குளியலறைக் கதவைத் தள்ளிப் பார்த்தான்.

உள்ளே நந்தா இல்லை.

முத்தைய்யா அதிர்ச்சியாய்க் குரல் கொடுத்தான்.

"அய்யா.. அங்க பாருங்க.."

பார்த்தான்.

குளியலறைக்கு மேலயிருந்த ஜன்னல் கம்பிகள் பெயர்த்து எடுக்கப்பட்டு ஒரு ஆள் உள்ளே நுழையக் கூடிய அளவுக்கு வழி திறந்திருந்தது.

மணிக்குமாரின் கண்களில் அதிர்ச்சியும், கோபமும் மின்னியது.

"முத்தைய்யா.." கத்தினான். "கம்பியைப் பெயர்த்து எடுத்துட்டுத் தப்பிச்சுப் போயிருக்கா.. சத்தம் உன்னோட காதுக்குக் கேட்கலையா..?"

"கேட்கலைங்கய்யா.."

"பொய் சொல்லாதே.. உனக்குத் தெரியாம அவ தப்பிச்சுப் போயிருக்க முடியாது.."

"அய்யா.. சத்தியமாச் சொல்றேன்.. எனக்குத் தெரியாதுங்க.." அவன் கைகூப்பிக் கெஞ்சிய கெஞ்சலில் உண்மை தெரிந்தது.

## 15

இண்டிகாக்கஸ் பூக்களுக்கு மத்தியில் காமோத்தும், சியாமளாதேவியும் நடந்து கொண்டிருந்தார்கள். மார்பளவுக்கு வளர்ந்த அடர்த்தியான செடிகள்.

இரண்டு பேர்களின் கைகளிலும் ப்ளாஸ்டிக் கேரி பேக்குகள்.

கடல் காற்று வேகமாய் வீசிக் கொண்டிருக்க பார்வைக்கு எட்டிய தூரம் வரைக்கும் ஊதா நிறப் பூக்கள்.

"சியாமளா.."

"ம்.."

"இதுவரைம்கும் எத்தன்ன பெண் பூக்கள் கிடைச்சிருக்கு..?"

"59.."

"கிட்டத்தட்ட ஆறு மணி நேரம். பத்து கிலோ மீட்டர் பரப்பளவு அலைஞ்சும் இவ்வளவுதானா..?"

"பார்க்கலாம். ரெண்டு நாளைக்குள்ள எவ்வளவு கிடைக்குதோ அதை மொதல்ல கொண்டு போயிடலாம்." சொன்ன சியாமளாதேவி சுற்று முற்றும் பார்த்துவிட்டு மென்குரலில் கேட்டாள்.

"என்ன காமோத். நான் சொன்னதை மறுபடியும் யோசிச்சுப் பார்த்தியா..?"

"எதை..?"

"மணிக்குமார் விஷயத்தை.."

"அவனைத் தீர்த்துக் கட்டிற விஷயத்தைத் தானே..?"

"ஆமா.."

"அதை சென்னைக்குப் போய் யோசனை பண்ணிக்கலாமே.."

"பயப்படறியா காமோத்..?"

"எதுக்குப் பயம்..?"

"போலீஸ் நம்மளை ஸ்மெல் பண்ணிடும்னு பயம்."

"அது நியாயமான பயம்தானே..?"

"மணிக்குமாரை நாம் தீர்த்துக்கட்ற விஷயத்துல என் கைவசம் இப்போ மாஸ்டர் ப்ளான் ஒண்ணு இருக்கு.."



"என்ன ப்ளான்..? சொல்லு பார்க்கலாம்.."

காமோத் கேட்டுக் கொண்டிருக்கும்போதே - சட்டைப் பைக்குள் இருந்த செல்போன் முனகிக் கூப்பிட்டது.

எடுத்து காதுக்கு அப்பினான்.

"எஸ்.."

"காமோத்..?"

"என்ன மணிக்குமார் சொல்லு..?"

"நந்தாவை அடைச்சு வெச்ச ரூமிலிருந்து அவ தப்பிச்சுப் போயிட்டா.."

"எ..என்னது.. தப்..தப்பிச்சிட்டாளா...?"

"ஆமா.."

"எ..எப்படி..?"

"குளியலறைக்கு மேல ஒரு ஜன்னல் இருந்ததே அந்தக் கம்பிகளை பேர்த்தெடுத்து வழி பண்ணிட்டு தப்பிச்சுப் போயிருக்கா..."

"எ..எப்போ..?"

"நேத்து ராத்திரியே சம்பவம் நடந்திருக்கும் போல. வெளியே காவலுக்கு முத்தையா இருந்திருக்கான்."

"அவளால எப்படி ஜன்னல் கம்பிகளை பேர்த்து எடுக்க முடிஞ்சது..?"

"அதுதான் புரியாத புதிராக இருக்கு.."

"முத்தைய்யா உதவி பண்ணியிருப்பானோ..?"

"இல்லைன்னு சொல்லி அழறானே.."

"சரி. இப்ப என்ன முடிவு பண்ணப்போறே...?"

"இந்தக் காட்டுக்குள்ள அவ எங்கேயாவது ஒளிஞ்சு இருக்காளான்னு நானும் முத்தையாவும் தேடிப் பார்த்துட்டு இருக்கோம்.."

"என்ன மணிக்குமார் இப்படி கோட்டை விட்டுட்டே..? நந்தா தப்பிச்சது எவ்வளவு பெரிய ஆபத்துன்னு தெரியுமா..?"

"எனக்குத் தெரியாதா என்ன..?"

"அவ இந்நோத்துக்குப் போலீசுக்குப் போயிருப்பா.."

"அப்படி அவ போயிருந்தா இந்நேரம் போலீஸ் என்னைத் தேடிட்டு வந்திருக்கணுமே.."

"நந்தா ஏன் போலீசுக்குப் போகலை..?"

"அதுதான் எனக்குக் குழப்பமாயிருக்கு.."

"காட்டுப்பகுதிக்குள்ளே நல்லாத் தேடிப்பாரு மணிக்குமார். அவ ஏதாவது ஒரு புதருக்குள்ள மறைஞ்சிட்டிருக்கலாம்."

"நானும் முத்தையாவும் ஏறக்குறைய காட்டின் எல்லாப் பகுதிகளையும் நல்லா அலசிப் பார்த்துட்டோம்."

"இன்னும் கொஞ்சம் டீப்பாத் தேடிப்பாரு. அவ எங்கேயும் போயிருக்க மாட்டா. காட்டுக்குள்ளே வழி தெரியாமச் சுத்திட்டு இருக்கலாம்.."

"சரி. இன்னொரு தடவை காட்டுக்குள்ளே போய்ப் பார்த்துடறேன்.."

"அரை மணி நேரம் கழிச்சு எனக்கு மறுபடியும் போன் பண்ணு மணிக்குமார்..."

செல்போனை அணைத்து விட்டு காமோத் கலவர முகமாய் நிமிர சியாமளா கேட்டாள்.

"என்ன காமோத். நந்தா தப்பிச்சிட்டாளா..?"

"ஆமா.. பட் அவ இன்னும் போலீசுக்குப் போகலை.. எங்கேயோ தலைமறைவா இருக்கா.."

"எனக்கு அந்த வேலைக்காரன் முத்தைய்யா மேலதான் சந்தேகமாயிருக்கு.."

"இல்லை சியாமளா.. முத்தைய்யா ரொம்பவும் லாயல் பெர்சன். பல வருஷமா மணிக்குமார்கிட்ட வேலைக்கு இருக்கான். அவன் நந்தாவுக்கு உதவியிருக்க மாட்டான். நந்தா நாம நினைக்கற மாதிரி சாதாரண பாமரப் பெண்ணில்லை. படிச்ச பெண். அவளை அடைச்சு வெச்சிருந்த அந்த பழைய ரூம் ஜன்னல் கம்பிகள் மோசமான நிலைமையிலதான் இருந்தது. நந்தா அவ்வளவு



உயரத்துல ஏறித் தப்பிக்க முடியாதுன்னு நினைச்சேன். இப்பத் தப்பிச்சிட்டா....."

"இனிமே நம்ம அடுத்த மூவ் என்ன காமோத்..?"

"புரியலை. நந்தா கைக்கு கிடைக்கலைன்னா நமக்கு ஆபத்து. அரை மணி நேரம் கழிச்சு மணிக்குமார் போன் பண்றதா சொல்லியிருக்கான். பார்ப்போம்.."

"பூக்களைத் தேடற வேலையைப் பார்ப்போமா.. இல்ல.. ஓட்டல் அறைக்குப் போயிடலாமா..?"

"ஓட்டலுக்குப் போயிடலாம்.. மனசுக்குள்ளே ஒரு பயம் இருக்கறப்ப எந்தக் காரியத்தையும் நம்மால ஒழுங்கா கவனிக்க முடியாது.."

காமோத் சொல்லிக் கொண்டிருக்கும்போதே -

விஷ்ஷ்ஷ்க்கென்று ஒரு கீறல் சத்தம் கேட்டது.

அது என்ன சத்தம் என்று தீர்மானிப்பதற்குள் -

சியாமளாதேவி கண்கள் சொருகி ஒரு பக்கமாய்ச் சரிந்தாள்.

## 16

கண்கள் செருகி வாய் பிளந்து சரிந்த - சியாமளாதேவியைத் தாங்கிப் பிடித்தான் காமோத்.

சியாமளாதேவியின் முதுகில் ஒரு தோட்டா பாய்ந்து இரத்தத்தைக் கசிய விட்டுக் கொண்டிருந்தது.

"சியாமளா..?" கத்திய காமோத் அவளிடமிருந்து எந்தச் சலனமும் இல்லாமல் போகவே பதட்டமாய் நிமிர்ந்து சுற்றுமுற்றும் பார்த்தான்.

கொஞ்சம் தள்ளி இண்டிகாக்கஸ் செடிகள் அசைவில் யாரோ குனிந்த வாக்கில் ஓடுவது தெரிந்தது.

காமோத் "ஏய்...ய்..ய்.." என்று குரல் கொடுத்துக் கொண்டே துரத்த ஆரம்பித்தான்.

உருவம் இப்போது வேகத்தை அதிகப்படுத்தி

செடிகளுக்குப் பின்னே ஓட ஆரம்பித்தது.

காமோத் துரத்தினான்.

செடிகளை விலக்கிக் கொண்டு பத்து நிமிஷம் ஓடுவதற்குள் களைத்துப் போய் மூச்சிரைத்தான்.

உருவம் இப்போது பார்வைக்குப் படவில்லை. கிட்டத்தட்ட இரண்டு கிலோ மீட்டர் தூரம் ஓடி வந்ததில் இப்போது நின்று கொண்டிருக்கிற பகுதி எந்த இடம்..? சியாமளாதேவி விழுந்து கிடக்கிற இடம் எந்த இடம்? என்பது தெரியாமல் பார்வையைச் சுழல விட்டான் காமோத்.

எந்தத் திசையைப் பார்த்தாலும் ஊதாப் பூக்களைச் சுமந்து கொண்டு ஆள் உயரத்துக்கு இண்டிகாக்கஸ் செடிகள் தெரிந்தன.

வியர்த்து வழிந்தான் காமோத்.

'சியாமளாதேவியின் உடல் இப்போது எந்தப் பகுதியில் விழுந்து கிடக்கிறது..?'

ஓடி வந்த வழியை ஓரளவு ஞாபகப்படுத்திக் கொண்டு திரும்பி நடந்தான்.

வழி இடறியது. கடல் மணல் கால்களை கீழே இழுத்தது. சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டே வேகமாய் நடையைப் போட்டான் காமோத்.

சில நிமிட இடைவெளிக்குள்ளேயே புரிந்து போயிற்று.

'இது வேற வழி..' நின்றான்.

'இப்போது என்ன செய்யலாம்..?'

'சியாமளாதேவியின் உடம்பை இங்கேயே விட்டுவிட்டுப் போய்விடலாமா?'

'இல்லை. போலீசுக்கு தகவல் கொடுக்கலாமா?'

'எதற்கும் மணிக்குமாரிடம் பேசிப் பார்த்து ஒரு முடிவுக்கு வரலாம்..'

பாக்கெட்டில் இருந்த செல்போனை எடுத்து வியர்வை பிசுபிசுத்த விரல்களால் பற்றிக் கொண்டு எண்களைத் தட்டினான். இணைப்பு கிடைக்க மணிக்குமார் லைனில் வந்தான்.



"மணிக்குமார். நான் காமோத்.."

"சொல்லு.."

"இங்கே ஒரு விபரீதம்.."

"என்ன...?"

"சியாமளாதேவி இப்போ உயிரோடு இல்லை.."

"நீ.. நீ.. என்ன சொல்றே.. காமோத்..?"

"யாரோ சுட்டுட்டு ஓடிட்டாங்க.."

"எ..எப்போ...?"

"ஒரு பத்து நிமிஷத்துக்கு முன்னாடிதான். பூக்களை சேகரம் பண்ணிட்டிருந்தபோது சம்பவம் நடந்தது.."

"சுட்டது யாரு..?"

"தெரியலை.. ஆள் உயிரத்துக்கு வளர்ந்து இருக்கற செடிகளுக்கு மத்தியில் அந்த உருவத்தைத் துரத்திப் பிடிக்க முயற்சி பண்ணினேன். முடியலை.."

மணிக்குமார் மறுமுனையில் கனமான கவலையோடு பெருமூச்சை வெளியிட்டான்.

"காமோத்.. இங்கேயும் சரி. அங்கேயும் சரி. நடந்துட்டிருக்கற விஷயங்கள் எதுவுமே சரியில்லை. நந்தா இங்கே தப்பிச்சிட்டா.. சியாமளாதேவி கதை அங்கே முடிஞ்சிருக்கு.."

"இபபோ எனக்கு ஒரு புதிய சிக்கல் மணிக்குமார்.."

"என்ன..?"

"சியாமளாவை சுட்டுட்டு ஓடினவனை துரத்திப் பிடிக்கற முயற்சியில் வழி மாறிட்டேன். சியாமளாவோட உடல் இப்போது எங்கே விழுந்து கிடக்குன்னு தெரியலை. ஆள் உயரத்துக்கு வளர்ந்திருக்கற செடிகளுக்கு மத்தியில் உடம்பைத் தேடறதும் அவ்வளவு சுலபமில்லை. இங்கே இருக்கற போலீசுக்குத் தகவல் தரலாமா? இல்லை நான் பாட்டுக்குப் புறப்பட்டு மெட்ராஸ் வந்துடட்டுமா..?"

"அப்படி வந்துடாதே.. பெரிய விவகாரமா போயிரும். போலீசுக்கு உடனடியாப் போய் இன்பார்ம் பண்ணிடு.."

"என்ன மணிக்குமார் புரியாமப் பேசறே..? போலீசுக்குப் போனா குடைஞ்சு குடைஞ்சு கேள்வி கேட்டு கொல்லுவாங்களே.. அவங்க கேட்கற கேள்விகளுக்கு எல்லாம் உண்மையான பதில்களைச் சொல்லிட்டிருக்க முடியுமா?"

"சரி. அப்படீன்னா ஒரு காரியம் பண்ணு.."

"என்ன..?"

"கொஞ்சம் சிரமப்பட்டுத் தேடி சியாமளா தேவியோட பாடியைக் கண்டுபிடிச்சு அங்கேயே யார்க்கும் தெரியாம டிஸ்போஸ் பண்ணிட்டு வந்துடு. சியாமளாவுக்குத்தான் மெட்ராஸ்ல குடும்பம்னு எதுவும் கிடையாதே.."

"அங்கே நந்தா கிடைச்சாளா..?"

"இன்னும் இல்லை. பட். ஒரு ஆறுதலான தகவல் கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி கிடைச்சது.."

"என்ன தகவல்..?"

"நந்தாவைத் தேடிக்கிட்டு காட்டுப் பகுதியோட நாலாபக்கமும் தேடிப் பார்த்தபோது காட்டுப்பகுயில் குடியிருக்கிற ஒரு குடும்பம் அந்தத் தகவலைச் சொன்னாங்க. நேத்து ராத்திரி அவங்க வேட்டைக்கு போனபோது ஒரு புலி ஒரு பெண்ணை அடிச்சு இழுத்துட்டுப் போயிருக்கறதாம். அது அநேகமாய் நந்தாவாக இருக்கலாம்ங்கறது என்னோட எண்ணம். இல்லேன்னா அவ உயிரோடு இந்நேரம் இருந்திருந்தா போலீசுக்குப் போயிருப்பா.."

"சரி. மணிக்குமார்.. புலியடிச்சுட்டுப் போனது நந்தாவாக இருக்கட்டும். இங்கே சியாமளாவுக்கு இப்படியொரு விபரீதம் நடந்திருக்கே..? இதுக்கு என்ன காரணம்..?"

"தேர்ட் பார்ட்டி யாரோ உன்னையும், சியாமளாவையும் ஸ்மெல் பண்ணி அங்கே



வந்திருக்காங்க."

"மணிக்குமார். நீ சொல்றதைப் பார்த்தா எனக்குப் பயமாயிருக்கு.. நான் உடனடியா சென்னை புறப்பட்டு வந்துடட்டுமா...?"

"சியாமளாவோட பாடியைக் கண்டுபிடிச்சு டிஸ்போஸ் பண்ணிட்டு வந்திடு.."

"சரி.."

செல்போனை அணைத்துப் பத்திரப்படுத்திக் கொண்ட காமோத், மறுபடியும் செடிகளை விலக்கிக் கொண்டு மெல்ல நடந்தபடி சியாமளாதேவியின் உடலைத் தேட ஆரம்பித்தான்.

இரண்டு நிமிஷ நேரம் நடந்திருப்பான்.

பின்னால் -

செடியின் இலைகள் சலசலக்கும் சத்தம் கேட்டது.

## 17

செல்வபாண்டியன் தன்னுடைய அலுவலக அறைக்குள் நுழைந்து எக்ஸ்க்யூட்டிவ் நாற்காலியில் சாய்ந்து கொண்டு அழைப்பு மணியைத் தட்டப்யூன் எட்டிப் பார்த்தான்.

"சார்.."

"ஸ்டெனோவைக் கூப்பிடு.."

அவன் தலைமறைந்த அடுத்த நிமிஷம்..

"கூப்பிட்டீங்களா சார்.."

"நாலைஞ்சு நாளைக்கு முன்னாடி நந்தான்னு ஒருத்தி கோயமுத்தூரிலிருந்து வந்திருந்தாளே..?"

"ஆமா சார்.."

"அவ கொடுத்த போன் நெம்பரை டயரியில நோட் பண்ணி வெச்சிருக்கியா..?"

"வெச்சிருக்கேன் சார்.."

"அந்த நெம்பரை ஒரு துண்டு பேப்பர்ல நோட் பண்ணிக் கொடு.."

அவள் தன் கையில் வைத்திருந்த டயரியைப் பார்த்து வைத்துக் கொண்டு ஒரு துண்டு பேப்பரில் எண்களை எழுதிக் கொடுக்க, செல்வபாண்டியன் அதை வாங்கிக் கொண்டு டெலிபோனை தனக்குப் பக்கத்தில் இழுத்து வைத்துக் கொண்டார்.

ரிசீவரை காதுக்குக் கொடுத்து டயலில் கோவை எண்களைத் தட்ட மறுமுனையில் ரிங் போயிற்று.

நீண்ட நேரம் போன பிறகு - ரிசீவர் எடுக்கப்பட்டு ஒரு வயதான பெண்குரல் கேட்டது.

"யா..யாரு..?"

"இது நந்தா வீடுதானே..?"

"ஆமா.."

"நந்தாகூடக் கொஞ்சம் பேசணும்.. கூப்பிட முடியுமா?"

"நந்தா குளிச்சிட்டிருக்கா.. ஒரு அஞ்சு நிமிஷம் கழிச்சுப் போன் பண்றீங்களா..?"

"நீங்க யாரு..?"

"நா நந்தாவுக்குப் பாட்டி.."

"சரி. அஞ்சு நிமிஷம் கழிச்சுப் போன் பண்றேன்.."

"நீங்க யாருன்னு சொல்லலையே..?"

"என் பேரு செல்வபாண்டியன். சென்னையில் இருந்து பேசறேன். என் பேரைச் சொன்னாலே நந்தாவுக்குத் தெரியும்.."

சொல்லிவிட்டு ரிசீவரை வைத்த செல்வ பாண்டியன் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்து புகையாக்கிக் காற்றுக்குக் கொடுத்து விட்டு மறுபடியும் டயல் செய்தார்.

முதல் ரிங் போனதுமே ரிசீவர் எடுக்கப்பட்டு ஒரு பெண்ணின் குரல் இனிமையாகக் கேட்டது.

"ஹலோ. நந்தா ஹியர்.."

"நந்தா.. நான் செல்வபாண்டியன்.."

"எந்த செல்வபாண்டியன்..?"



"என்ன.. கோயமுத்தூர் போய்ச் சேர்ந்ததுமே என்னையே மறந்துட்டியா..?"

"இதோ பாருங்க சார்.. நீங்க இப்போ பண்ணிப் பேசிட்டிருக்கறது ராங் நெம்பர்னு நினைக்கறேன். எனக்கு செல்வபாண்டியன்ங்கற பேர்ல யாரையும் தெரியாது.."

லேசாய்க் கோபப்பட்டார் செல்வபாண்டியன். "நீ என்னோட ஆபீசுக்கு வந்து கெடுத்துட்டுப் போன டெலிபோன் நம்பருக்குத்தான் போன் பண்ணிப் பேசிட்டிருக்கேன். நீ பாட்னி ப்ரொபசர் ஹரிச்சந்தரோட பொண்ணு நந்தாதானே..?"

"ஆமா.."

"நாலு நாளைக்கு முன்னாடி நீ மெட்ராஸ் வந்த என்னைப் பார்த்து எய்ட்ஸ் நோய்க்கான மருந்தை கொடுத்துட்டுப் போகலை..?"

"என்னது..? நான் எய்ட்ஸ் நோய்க்கான மருந்தைக் கொண்டு வந்து கொடுத்தேனா..? பத்து நாளா கோயமுத்தூரை விட்டுப் போகலை.."

"மைகுட்னஸ்.. அப்படீன்னா நந்தாங்கற பேர்ல இங்கே சென்னைக்கு வந்து எய்ட்ஸ் நோயைக் குணப்படுத்தற மருந்துன்னு சொல்லி ஒரு சாம்பிள் பாட்டில் கொடுத்துட்டுப் போன பெண் யாரு..?"

மறுமுனையில் நந்தா குறுக்கிட்டாள்.

"ஒரு நிமிஷம் சார். அந்தப் பொண்ணு எப்படி இருப்பாள்னு அடையாளம் சொல்ல முடியுமா..?"

செல்வபாண்டியன் யோசித்து யோசித்து அடையாளம் சொல்ல, நந்தா சிரித்தாள்.

"சார். அவ பேரு தாரிணி. என்னோட அப்பாகிட்ட அசிஸ்டெண்ட்டா இருந்தா. அப்பாவோட ஆராய்ச்சி சம்பந்தப்பட்ட எல்லா விபரங்களும் அவளுக்குத் தெரியும்.."

"தாரிணி எதுக்காக உன்னோட பேரைச் சொல்லிட்டு என்கிட்ட வரணும்..? உன்னோட அப்பா எய்ட்ஸ் நோயைக் குணப்படுத்தற

மருந்தைக் கண்டுபிடிச்சது உண்மைதானா..?"

"உண்மைதான் சார். அந்த மருந்தால ஒருத்தர் குணமாகிட்டதா அப்பா சொல்லியிருக்கார். எனக்கு அப்ப சந்தோஷமாயிருந்தது. ஆனா அந்த சந்தோஷமெல்லாம் அப்பா உயிரோடு இருக்கற வரைக்கும்தான். அப்பாவும் அம்மாவும் சிறுவாணி பாரஸ்ட்டுக்குள்ள போய் சில மூலிகை மருந்துச் செடிகளைத் தேடிட்டு இருக்கும்போது மதம் பிடிச்ச ஒரு யானைக்கு பலியான அந்த அதிர்ச்சி சம்பந்தப்பட்ட அறைக்குள்ளேயே நான் நுழையலை. அப்படி அந்த அறைக்குள்ளே நுழைய வேண்டிய வேளை வரும்போது என்னால அழுகையைக் கட்டுப்படுத்திக்க முடியாமப் போயிடுது. பட். அம்மாவும் அப்பாவும் இறந்த பின்னாடியும் தாரிணி என் வீட்டுக்கு வந்து அப்பா விட்டுட்டுப் போன ஆராய்ச்சி சம்பந்தப்பட்ட விஷயங்களை கன்டினியூ பண்ணிட்டு இருந்தா. ஒருநாள் என்கிட்ட வந்து எய்ட்ஸ் நோயைக் குணப்படுத்தற மருந்தைப் பற்றி எய்ட்ஸ் கண்ட்ரோல் ஆபீசுக்குத் தெரியப்படுத்தட்டுமான்னு கேட்டா. நான் அப்பாவையும், அம்மாவையும் இழந்திருந்ததால கோபத்துல ஆராய்ச்சி சம்பந்தப்பட்ட ஒரு மண்ணும் வெளியே போக வேண்டாம்னு சத்தம் போட்டுட்டேன். ஆனா இப்பத்தான் தெரியுது. தாரிணி என்னோட கோபத்தையும் மீறி செயல்பட்டிருக்கான்னு அவ பேரை உபயோகப்படுத்தினா உங்க டிபார்ட்மென்ட்ல இருந்து சரியான ரெஸ்பான்ஸ் கிடைக்காதுங்கற காரணத்துக்காக என்னோட பேரை யூஸ் பண்ணியிருக்கா."

"அந்தத் தாரிணி இப்ப வீட்ல இருக்காளா..?"

"நாலைஞ்சு நாளாகவே அவ இங்கே வரலை. ஏன் சார்.. அவளால ஏதாவது பிரச்னையா..?"

"ப்ராப்ளம் இல்லை. பட். சீட் பண்ணிட்டா."

"என்னது? சீட் பண்ணிட்டாளா..?"



"ஆமா. எய்ட்ஸ் நோயைக் குணமாக்கற மருந்துன்னு சொல்லி வெள்ளி நைட்ரேட் கரைசலைக் கொடுத்துட்டுப் போயிட்டா. நானும் அதை மெனக்கெட்டு டெல்லி வரைக்கும் கொண்டு போய் மருத்துவ விஞ்ஞானக் கழகத்துல டெஸ்ட் பண்ணி மூஞ்சியில கரியைப் பூசிட்டு வந்தேன். அந்த தாரிணி ஏன் அப்படிப் பண்ணினான்னு தெரியலை. அந்த தாரிணியோட வீட்டு அட்ரஸ் தெரியுமா?"

"அவ வீடு கோயமுத்தூர் சிட்டிக்குள்ளே இருக்கு. அவளுக்கு போனும் கிடையாது. நான் இன்னும் கொஞ்ச நேரத்துல சிட்டிக்குப் போவேன். வேணும்னா அவளைப் பார்த்துட்டு வர்றேன்.."

"என்னோட போன் நெம்பரை நோட் பண்ணிக்கோம்மா. த்ரீ எய்ட் டபுள் செவன் பைவ் சிக்ஸ் த்ரீ..ஒன் போர்.."

"இன்னும் ரெண்டு மணி நேரத்துல உங்களுக்குப் போன் பண்றேன் சாரர்.. தாரிணி ஏதோ ஆர்வக் கோளாறுல இப்படியொரு முட்டாள்தனமான காரியத்தைப் பண்ணிட்டா. அவளையே உங்ககிட்ட மன்னிப்புக் கேட்க வைக்கறேன் சார்.."

"மன்னிப்பெல்லாம் கேட்க வேண்டாம்மா. அந்தத் தாரிணியைப் போன்ல பேசச் சொல்லும்மா. போதும்.."

செல்வபாண்டியன் ரிசீவரைக் கவிழ்த்தார்.

## 18

இலைகளின் சலசலப்பு சத்தம் கேட்டு சட்டென்று திரும்பிப் பார்த்தான் காமோத்.

இருபதடி தொலைவில் இலைகள் அசைந்து கொண்டிருந்தன.

காமோத் ஜாக்கிரதையாகி மெதுவாய் நடந்து கொண்டிருக்கும்போதே --

அந்தச் சீறல் சத்தம் கேட்டது.

"விஷ்ஷ்ஷ்க்க்க்...."

செடிகளின் மறைவிலிருந்து வாயைத் திறந்த பிஸ்டல், தோட்டா ஒன்றை வேகமாய் அனுப்ப, அதை உடனே வாங்கிக் கொண்ட காமோத் அலறக்கூட அவகாசம் இல்லாமல் சரிந்தான்.

இரத்தம் சூடாக வெளியேறிக் கொண்டிருக்க, காமோத்தின் கண்களுக்குள் இருட்டு பாய்ந்தது.

யாரோ சிரிப்போடு பக்கத்தில் வரும் நடைச்சத்தம் கேட்டது. உயிர் பிரிவது போன்ற வலியில் கண்களை வலுக்கட்டாயமாகத் திறந்து பார்க்க முயன்றான்.

உருவம் பக்கத்தில் வந்து நின்றது.

'ஆணா.. பெண்ணா..?'

பார்க்க முடியவில்லை.

உடம்பின் எல்லாத் துடிப்புகளும் கொஞ்சம் கொஞ்சமாக அடங்க ஆரம்பிக்க, கண்கள் தானாய் ஷட்டர் போட்டுக் கொண்டன.

பக்கத்தில் வந்து நின்ற உருவம் காமோத்தின் உடலை காலால் அலட்சியமாய் எத்தித் தள்ளியது.

## 19

**கா**ரை போர்டிகோவில் செருகிவிட்டு களைப்போடு கீழே இறங்கிய மணிக்குமார் வராந்தாவிலேயே நாற்காலியைப் போட்டு உட்கார்ந்திருந்த அப்பா செல்வபாண்டியனைப் பார்த்ததும் முகத்தில் வியப்பைக் காட்டினான்.

"என்னப்பா.. இன்னிக்கு இவ்வளவு சீக்கிரத்துலயே ஆபீசிலிருந்து வீட்டுக்கு வந்துட்டீங்க. உடம்புக்கு ஏதாவது முடியலையா..?"

செல்வபாண்டியன் ஒரு பெருமூச்சோடு நிமிர்ந்தார். "உடம்புக்கு ஒண்ணுமில்லை மணி. மனசுக்குத்தான் கொஞ்சம் கஷ்டம்.."



"மனசுக்குக் கஷ்டமா..?"

"ஆமா. அந்தப் பொண்ணு நந்தா விவகாரம் இப்போ பெரிய குழப்பமாயிடுச்சு.."

"அவ கொடுத்த எய்ட்ஸ் நோய்க்கான மருந்தைத்தானே சொல்றீங்க..?"

"அது முடிஞ்சு போன விஷயம்.. இப்போ புதுசா ஒரு பிரச்னை.."

மணிக்குமார் உஷாரானான்.

"புதுப் பிரச்னையா...?"

"ஆமா. என்னைப் பார்க்க வந்த அந்தப் பொண்ணு நந்தா கிடையாது.."

"பின்னே..?"

"தாரிணி.."

"தாரிணியா..? என்னப்பா சொல்றீங்க..?"

"புரபெஸர் பாடனிஸ்ட் ஹரிச்சந்தரின் பொண்ணு நந்தா பேரை உபயோகப்படுத்திட்டு தாரிணிங்கற பெண், புரபெஸரோட அசிஸ்டெண்ட் என்னைப் பார்க்க வந்திருக்கா.." என்று ஆரம்பித்தவர் எல்லா விபரத்தையும் சொல்லி முடிக்க, மணிக்குமார் வியப்பின் விளிம்புக்குப் போய் உட்கார்ந்தான்.

"அப்படீன்னா நந்தா இப்போ ஊர்லதான் இருக்கா.."

"ஆமா. ஆனா நந்தான்னு பேர் சொல்லிட்டு வந்த தாரிணி இப்போ எங்கே இருக்காள்னு தெரியலையே. மூணு நாளைக்கு முன்னாடியே கோயமுத்தூர் போயிச் சேர்ந்திருக்க வேண்டியவ இன்னும் சேரலை. அவ சென்னையில தங்கியிருந்தபோது ஓட்டல் சுபாஷினியில தங்கியிருந்தா. அந்த ஓட்டலுக்குப் போன் பண்ணிக் கேட்டப்ப ரூமைக் காலி பண்ணிட்டதாச் சொல்றாங்க. சென்னையிலிருந்து புறப்பட்ட அந்தப் பெண் தாரிணி கோவை போகாம வேற எங்க போனாளோ. இதுதான் புதுப் பிரச்னை. ரெண்டு

நாள் பார்த்துட்டு தாரிணி வரலைன்னா போலீசுக்குப் போய் ஒரு கம்ப்ளைண்ட் கொடுத்துட்டு வரலாம்னு இருக்கேன்.."

மணிக்குமார் கலக்கத்தைக் காட்டிக் கொள்ளாமல் புன்னகைத்தான்.

"அந்தத் தாரிணியும் போலி. அவ கொண்டு வந்த மருந்தும் போலி. ஒரு கிரிமினல் லேடிக்காகப் போய் நீங்க இவ்வளவு கவலைப்பட வேண்டியதே இல்லை."

"நோ மணி. அவ கிரிமினல்னு மனசுக்கு படலை"

"எப்படிச் சொல்றீங்க..?"

"புரபெஸர் ஹரிச்சந்தரோட பொண்ணு நந்தா என்கூடப் பேசும்போது தாரிணியைப் பத்தி ரொம்ப நல்லாவே சொன்னா. ஹரிச்சந்தரோட எய்ட்ஸ் ஒழிப்பு ஆராய்ச்சிக்கு தாரிணி ரொம்பவும் உதவியா இருந்திருக்கா. வாழ்க்கையில புதுசா எதையாவது சாதிக்கணும்ங்கற வெறி அவகிட்ட நிறையவே இருந்ததாம். என்னோட மனசுக்கு என்ன படுதுன்னா அந்தத் தாரிணி உண்மையாகவே ஹரிச்சந்தர் கண்டுபிடிச்ச எய்ட்ஸ் நோய் ஒழிப்பு சாம்பிளைக் கொண்டு வந்திருக்கலாம். வழியில ஏதோ அசம்பாவிதம் நடந்து மருந்து சாம்பிள் மாறியிருக்கலாம். அதேபோல சென்னையிலிருந்து கோவைக்குத் திரும்பிப் போகும்போது அவளை யாராவது கடத்திட்டுப் போயிருக்கலாம்.."

மணிக்குமார் வரவழைத்துக் கொண்ட சிரிப்போடு சொன்னான்.

"உங்க கற்பனை நல்லாவே இருக்குப்பா.."

"இது கற்பனையில்லை மணி. ஒரு நிமிஷம் நீ யோசனை பண்ணிப் பாரு. புரபெஸர் ஹரிச்சந்தர் ஒரு திறமையான பாடனிஸ்ட். அவர்கிட்ட உதவியா இருந்த பெண் சில்வர் நைட்ரேட் கரைசலைக் கொண்டு வந்து கொடுப்பா.. யாரோ பர்ப்பஸா மாத்தியிருக்காங்க.." செல்வபாண்டியன் அழுத்தமாய்ச் சொல்லிக் கொண்டிருக்கும்போதே..



த்தட்.. த்தட்.. சத்தத்தோடு காம்பவுண்ட் கேட்டுக்குள் அந்த பைக் நுழைந்து போர்டிகோவுக்கு வந்தது. பைக்கில் இன்ஸ்பெக்டர்.

மணிக்குமாரின் கண்களில் இப்போது புதிதாய் கலக்கம் வந்து ஒட்டிக் கொண்டது.

இன்ஸ்பெக்டர் பைக்கை ஸ்டாண்டிட்டு நிறுத்திவிட்டு விஷ் செய்தபடியே போர்டிகோ படியேறினார். கேட்டார்.

"இங்கே டாக்டர் மணிக்குமார்..?"

"மைசெல்ஃப்.."

மணிக்குமார் முன்னால் வர, இன்ஸ்பெக்டர் அவனை ஏறிட்டார். "உங்களுக்கு டாக்டர் சியாமளாதேவியையும், மிஸ்டர் காமோத்தையும் தெரியுமா..?"

"ந...ந...ல்லாவே தெரியும்.. தே ஆர் மை பெஸ்ட் ப்ரெண்ட்ஸ்.. ஏன் என்ன விஷயம்..?"

"அவங்க ரெண்டு பேரும் அந்தமானுக்குப் பக்கத்தில் இருக்கற வயலெட் ஐலேண்டுக்கு போயிருக்கற விஷயம் உங்களுக்குத் தெரியுமா..?"

"தெரியும். போகும்போது என்கிட்டச் சொல்லிட்டுதான் போனாங்க.. வாட்ஸ் த மேட்டர் இன்ஸ்பெக்டர்..?"

இன்ஸ்பெக்டர் தயங்கிவிட்டுச் சொன்னார். "சாரி.. டு ஸே திஸ். கொஞ்ச நேரத்துக்கு முந்திதான் அங்கிருந்த சென்னைக்கு தகவல் வந்தது.."

"என்ன தகவல்..?"

"டாக்டர் சியாமளாதேவியும், மிஸ்டர் காமோத்தும் மர்மமான முறையில் அங்கே கொலை செய்யப்பட்டு இருக்காங்க. அவங்க வெச்சிருந்த டயரியில உங்க போன் நம்பரும், அட்ரஸும் இருந்தது. அதனாலதான் உங்களுக்குத் தகவல் கொடுக்க முடிஞ்சது.. ரெண்டு பாடியும் நாளைக்கு போஸ்ட் மார்ட்டம் முடிஞ்சு ப்ளைட்ல வரும்.."

மணிக்குமார் வீறிட்டான்.

"இன்ஸ்பெக்டர்.. ஐ காண்ட் பிலீவ்.. அவங்க கொலையானதுக்கு என்ன காரணம்..?"

"சாரி. காரணம் எதுவும் சொல்லப் படலை. வீ ஆர் அவெய்ட்டிங் பார் பர்தர் டீடெய்ல்ஸ்.."

இன்ஸ்பெக்டர் மறுபடியும் விஷ் செய்துவிட்டு பைக்கை உதைத்துக் கொண்டு கிளம்ப, செல்வபாண்டியன் அதிர்ச்சி நிரம்பிய முகத்தோடு மணிக்குமாரை ஏறிட்டபடியே கேட்டார்.

"மணி.. சியாமளாதேவியும், காமோத்தும் எதுக்காக வயலெட் ஐலேண்ட் போனாங்க..?"

"எனக்குத் தெரியாதப்பா.."

"போகும்போது நீ கேட்கலையா..?"

"கேட்டேன்.."

"என்ன சொன்னாங்க..?"

"சும்மா ஜாலி ட்ரிப்னு சொன்னாங்க.."

"என்னமோ தெரியலை. இன்னிக்கு கேள்விப் படற நியூஸெல்லாமே ரொம்பவும் ஷாக்கிங் நியூஸாகவே இருக்கு மணி.."

கனமான கவலைக்குரலில் சொல்லிவிட்டு மோவாயில் கை பதித்து பெருமூச்சோடு நாற்காலிக்குச் சாய்ந்தார் செல்வபாண்டியன்.

## 20

**வா**யில் ஒட்டப்பட்ட ப்ளாஸ்டரோடு கைகால் கட்டப்பட்ட நிலையில் கட்டிலில் ஒருக்களித்து விழுந்து கிடந்த தாரிணி கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டு கண்களை மலர்த்தினாள்.

இருட்டுக்குள் இருந்த அந்தச் சிறிய அறை இப்போது வெளிச்சத்தில் நிரம்பியது.

உள்ளே நுழைந்த மணிக்குமார் பூட்ஸ் சத்தம் ஒலிக்க அவளுக்குப் பக்கத்தில் வந்து உட்கார்ந்தான்.

அவள் தடுமாற்றமாய் எழுந்து உட்கார்ந்தாள்.



மணிக்குமார் அவள் வாயில் ஒட்டப்பட்டிருந்த ப்ளாஸ்டரை அகற்றிவிட்டு மெல்லிய குரலில் புன்னகையோடு கேட்டான்.

"உன்னோட பேர் என்னான்னு சொன்னே..?"

"நந்தா.."

மணிக்குமாரின் புன்னகை பெரிதாயிற்று.

"நிஜமாகவே உன்னோட பேரு நந்தாவா..?"

"ஆ..ஆமா.."

"சரி. இந்த நிமிஷத்திலிருந்து உனக்கு அந்தப் பேரு வேண்டாம். ஏன்னா எனக்கு அந்தப் பேரு பிடிக்கலை. உனக்கு இப்போ வேற பேர் வைக்கறேன். இனிமே உன்னோட பேரு தாரிணி.. சரியா..?"

அவள் திக்கென்று பார்க்க, மணிக்குமார் அவளுடைய கன்னத்தை மெல்லத் தட்டினான்.

"என்ன தாரிணி அப்படிப் பார்க்கறே..? உன்னைப் பத்தின எல்லா உண்மைகளும் இப்போ வெளிச்சத்துக்கு வந்திடுச்சு.. இனிமே நீ வேஷம் போட்டுப் பிரயோஜனமில்லை. எதுக்காக புரபெஸர் ஹரிச்சந்தரோட டாட்டர் நந்தான்னு பொய் சொன்னே..?"

"................"

தாரிணி மௌனம் சாதித்தாள்.

"நீ வாயைத் திறக்கலைன்னா எனக்கு இதைத் தவிர வேற வழியில்லை.." சொன்ன மணிக்குமார் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு அவளுடைய உடம்பின் மேல் இருந்த சேலையைத் தொட்டான்.

"உன் உடம்புல எனக்கு எது அழகாகத் தோணுதோ. அங்கெல்லாம் இந்த சிகரெட்டால ஒரு மார்க் போடுவேன். அப்படி மார்க் போடும்போதாவது நீ வாயைத் திறந்து கத்தியே ஆகணும்.."

"வே..வே..வேண்டாம்.."

"என்ன வேண்டாம்..?"

"இ..இந்த சிகரெட்.."

"வேண்டாமா...? சரி. எறிஞ்சுடறேன். இதோ பார்.. நீ நேத்து வரைக்கும் நீ நந்தா. இன்னிக்கு தாரிணி. உன்கிட்ட இன்னும் என்னென்ன விஷயம் இருக்குன்னு எனக்குத் தெரியாது. ஆனா எனக்கு வேண்டியது எய்ட்ஸ் நோயைக் குணப்படுத்தற அந்த மருந்தைப் பற்றிய சரியான ஃபார்முலா.. அந்த ஃபார்முலா எனக்கு மட்டுமே கிடைக்கணும்ங்கற ஒரே காரணத்துக்காகத்தான் இதுக்கு முன்னாடி காட்டுப் பகுதியிலிருந்த வீட்டிலிருந்து நீயே தப்பிச்சுப் போயிட்ட மாதிரி செட் அப் பண்ணி சியாமளாதேவிக்கும், காமோத்துக்கும்கூடத் தெரியாத என்னோட இந்த இரகசிய இடத்துக்கு உன்னைக் கொண்டு அடைச்சு வெச்சிருக்கேன். எதுக்காக இவ்வளவு கஷ்டப்படறேன். எல்லாம் உனக்காகத்தான்.. உனக்கு இன்னொரு விஷயம் தெரியுமா.. அதையும் இப்பவே சொல்லிடறேன். வயலெட் ஐலேண்ட் தீவுக்கு இண்டிகாக்கஸ் பூக்களைப் பறிக்கப் போன சியாமளாதேவியும், காமோத்தும் இப்போ உயிரோட இல்லை.."

தாரிணி அதிர்ச்சியோடு மணிக்குமாரைப் பார்க்க அவன் சிரித்தான். "என்ன நீ பார்க்கற பார்வையைப் பார்த்தா நான்தான் வயலெட் ஐலேண்ட்டுக்கு ஆள் அனுப்பி அவங்களைத் தீர்த்துக் கட்டிட்ட மாதிரி தெரியுது. உன்னோட அந்த நினைப்பு சரிதான். அவங்க ரெண்டு பேரும் எந்த ப்ளைட்ல அந்தமானுக்குப் புறப்பட்டுப் போனாங்களோ.. அதே ப்ளைட்லதான் எனக்கு வேண்டிய ஒரு கூலிப்படை ஆளை அனுப்பி வெச்சேன். எதுக்காக..? சியாமளாதேவியும் சரி. காமோத்தும் சரி. உயிரோடு திரும்பி வரக்கூடாது. போட்ட திட்டம் எல்லாம் ஓ.கே. நாளைக்குக் காலைல ஃப்ளைட்ல சியாமளா, காமோத் ரெண்டு பேரோட டெட் பாடிகளும் சென்னைக்கு வருது. மலர் வளையங்களுக்கு நேத்து ராத்திரியே ஆர்டர்



பண்ணிட்டேன். தாரிணி.. ஒரு உயிரை எடுக்கறதுல எனக்கு உடன்பாடில்லைதான். ஆனா எனக்கு இடைஞ்சலா யாரும் இருக்கக் கூடாதுன்னு நினைக்கறவன் நான். அதேபோல் என்னை யாரும் ஏமாத்தவும் கூடாது.."

தாரிணி தன் பெரிய விழிகளை பயமாய் விரித்துப் பார்த்துக் கொண்டிருந்தபோதே மணிக்குமார் அவளுடைய மோவாயை தன் இடது ஆட்காட்டி விரலால் தூக்கினான்.

"இப்போ எனக்கு உன்கிட்டேயிருந்து ரெண்டு முக்கியமான விஷயங்கள் தெரியணும். பதில் சொல்லுவியா...? இல்ல. இன்னொரு சிகரெட்டைப் பற்ற வைக்கணுமா..?"

"சொல்றேன்.."

"என்னோட முதல் கேள்வி இதுதான். நந்தாவோட பேரை எதுக்காக இந்த விஷயத்துக்கு யூஸ் பண்ணினே..?"

"எய்ட்ஸ் நோய் ஒழிப்பு டிபார்ட்மெண்ட்டுக்கு தாரிணிங்கற பேர்ல தனிப்பட்ட முறையில் லெட்டர் போட்டுப் பார்த்தேன். எந்த ரெஸ்பான்ஸும் கிடைக்கலை. புரபெஸரோட பொண்ணுங்கற கோதாவில் இறங்கி அப்ளை பண்ணினா.. வரவழைச்சுப் பேசுவாங்கன்னு நினைச்சு நந்தாங்கற பேர்ல லெட்டர் எழுதிப் போட்டேன்.."

"இதுதான் உண்மையான காரணமா..?"

"சத்தியமா இதுதான் உண்மையான காரணம்.."

"சரி. இப்போ இரண்டாவது கேள்விக்கு வர்றேன். சியாமளாதேவி உன்னை ஒரு ஊசி மருந்து மூலமா சப்-கான்ஷியஸ் மைண்ட்டுக்குக் கொண்டு போய் பேச வெச்சு எய்ட்ஸ் நோய் மருந்து பற்றிய உண்மைகளை உன் வாய் வழியாகவே வரவழைச்சா. நீ உண்மையிலேயே நந்தா கிடையாது. தாரிணிதான். அப்படி இருக்கும்போது சியாமளா உன்னை சப்-கான்ஷியஸ் மைண்ட்டுக்குக் கொண்டு போயிட்டா அவங்களால

பொய் பேச முடியாது. எப்படியும் உண்மையைத் தான் சொல்லியாகணும். உதாரணத்துக்கு உன் பேர் என்னன்னு சியாமளா கேட்ட சமயம் நீ தாரிணின்னு சொல்லியிருக்கணும். ஆனா நீ நந்தான்னு சொன்னே.. அது எப்படி..?"

தாரிணி நெற்றி வியர்வையோடு பேசத் திணறினாள்.

"அது.. வந்து.. அது.. வந்து.."

"பொய் சொல்லக்கூடாது. எனக்கு வேண்டியது உண்மை. பொய் கொஞ்சமும் கலக்காத உண்மை. இல்லேன்னா.." சிகரெட் பாக்கெட்டைத் தொட்டுக் காட்டினான் மணிக்குமார்.

"சொ.. சொல்லிடறேன்.."

"சொல்லு.."

"டாக்டர் ஊசிபோட்ட அன்னிக்கு நான் சப்-கான்ஷியஸ் மைண்ட்டுக்குப் போகலை.."

"என்னது..? நீ சப்-கான்ஷியஸ் மைண்டுக்கே போகலையா..?"

"போகலை.."

"எப்படி..?"

"எனக்கு யோகாவில் எல்லா வகை யோகாவும் தெரியும். அதுல முக்கியமான ஒரு யோகா ப்ரணவ்ய ராஜ யோகா. இந்த யோகாவை கண்மூடிப் படுத்த நிலையிலேயே செய்யலாம். இந்த யோகா முழுக்க முழுக்க மூளை சம்பந்தப்பட்டது. மூச்சை இழுத்துப் பிடித்து பிரகாபித மந்திரங்களை மனசுக்குள்ளேயே உச்சாடனம் பண்ணினா நம்ம மூளையை வெளியே இருந்து யார் ஃபோர்ஸ் பண்ணினாலும் அது சப்-கான்ஷியஸ் மைண்ட்டுக்குப் போகாது. இன்னும் சொல்லப் போனா சப்-கான்ஷியஸுக்குப் போயிட்ட மாதிரி மூளை நடிக்கும்.."

"அப்படீன்னா சியாமளா உன்னைக் கேள்வி கேட்கும்போது உனக்கு சுயநினைவு இருந்தது..?"

"ஆமா. அப்படி சுயநினைவு இருக்கப்



போய்த்தான் தாரிணிங்கற என்னோட பேரை மாத்தி நந்தான்னு சொல்ல முடிஞ்சது.."

மணிக்குமார் அவளை பிரமிப்பாய்.. கோபமாய்ப் பார்த்துவிட்டுக் கேட்டான்.

"அப்படீன்னா நீ சொன்ன அந்த இண்டிகோனா, இண்டிகாக்கஸ் பூக்கள், வயலெட் ஐலேண்ட் விஷயமெல்லாம்..?"

"பொய். அந்த இண்டிகாக்கஸ் பூக்களைப் பற்றியும், வயலெட் ஐலேண்ட்டைப் பற்றியும் ஒரு டூரிஸம் புத்தகத்துல படிச்சேன். அதை வெச்சு சரடு திரித்து, கற்பனை கலந்து சொல்லிட்டேன்.."

மணிக்குமாருக்கு கண்களும், முகமும் ஜிவுஜிவு என்று சிவந்து போக, "யூ.. ஷிட்.." என்றபடி தாரிணியின் கழுத்தை இரண்டு கைகளாலும் இறுக்கிப் பிடித்தான்.

## 21

தாரிணி சிறிதும் பதட்டப்படாமல் தன் வறண்ட உதடுகளில் ஒரு புன்னகையை நிற்க வைத்துக் கொண்டு சொன்னாள்.

"என்னைக் கொல்லப் போறியா..? தாராளமாய்க் கொன்னுடு. எய்ட்ஸ் நோயைக் குணப்படுத்தக் கூடிய உண்மையான மருந்தோட ஃபார்முலா யாருக்குமே தெரியாமப் போகப் போகுது.."

அவள் கழுத்தில் பதித்திருந்த தன் கைகளை மணிக்குமார் கோபமாய் உருவிக் கொண்டு கேட்டான்.

"எய்ட்ஸ் நோயைக் குணப்படுத்தக் கூடிய உண்மையான மருந்து ஃபார்முலா என்ன..?"

தாரிணி சிரித்தாள்.

"நீ நினைக்கற மாதிரி அதை ஒரு வரியில சொல்லிட முடியாது. அந்த ஃபார்முலா சம்பந்தப்பட்ட டயரி என் வீட்டு பீரோவில் இருக்கு. அந்த டயரி கைக்கு வந்தாத்தான் ஃபார்முலாவைப்

பத்தின ஃபுல் டீடெய்ல்ஸ் கொடுக்க முடியும்.."

"இது பொய்யில்லையே..?"

"இல்லை. உண்மை. புரொபஸர் ஹரிச்சந்தர் கண்டுபிடிச்ச எய்ட்ஸ் நோய்க்கான மருந்து யாராவது ஒருத்தர் மூலமா இந்த உலகத்துக்குப் பயன்படட்டும். இனிமே அது உன் மூலமாகவே இருந்தாலும் சரி.."

"உன் வீடு கோயமுத்தூர்ல எங்கேயிருக்கு..?"

"நெம்பர் ஃபைவ். மகாராணி நகர், எம்.டி.ரோடு, கோயமுத்தூர்.."

"வீட்ல யார் இருப்பாங்க..?"

"என்னோட அண்ணன். பட் அவர் ஒரு சேல்ஸ்ரெப். மாசத்துல பல நாட்கள் ஊர்ல இருக்க மாட்டார். அவர் இப்போ ஊர்ல இருப்பாரா.. மாட்டாரான்னு என்னால சொல்ல முடியாது."

"வீட்டு சாவி..?"

"எங்கிட்ட ஒண்ணு அவர்கிட்ட ஒண்ணு இருக்கு."

"உன்னோட சாவி எங்கே..?"

"என் சூட்கேஸ்ல.. அந்த சூட்கேஸ்தான் இப்பே உன்கிட்ட இருக்கே."

"நாளைக்குக் காலைல அந்த சூட்கேஸைக் கொண்டு வர்றேன். வீட்டு சாவியை எடுத்துக் கொடு. ரெண்டே நாள்ல உன் வீட்டு பீரோவில் இருக்கற டயரி என் கையில இருக்கும்.."

சொன்ன மணிக்குமார் ப்ளாஸ்டரை எடுத்து தாரிணியின் வாயில் ஒட்டிவிட்டு - அறையை விட்டு வெளியே வந்தான். கதவைப் பூட்டிக் கொண்டு இருட்டில் நின்றிருந்த கார்க்கு வந்து ட்ரைவிங் சீட்டுக்குச் சாய்ந்தபடி மணிக்கட்டில் இருந்த வாட்ச்சைப் பார்த்தான்.

பதினொரு மணி.

சுற்றுப் புறம் இருட்டில் இருக்க - காரின் ஹெட்லைட்டுகளை உயிர்ப்பித்துக் கொண்டு வேகம் பிடித்தான்.



குறுகலான அந்த மண் பாதையில் சில நிமிடங்கள் பயணித்த பின் ஹைவே ரோடு வந்தது.

மௌனமான அந்த ஹைவேஸ் ரோட்டில் எழுபதில் சீறிய கார் இருபது நிமிஷங்களுக்குப் பிறகு சிட்டிக்குள் நுழைந்து - சோடியம் வேப்பர் விளக்குகளின் வெளிச்சத்தில் நனைந்து மணிக்குமாரின் வீட்டைத் தொட்டபோது -

நேரம் 11.30.

போர்டிகோவில் காரை நிறுத்திவிட்டு -

அழைப்பு மணிக்கு வேலை கொடுத்தான்.

கதவு திறந்தது.

நைட் கவுனில் செல்வபாண்டியன் தெரிந்தார்.

"என்னப்பா.. நீங்க வந்து கதவைத் திறக்கறீங்க...? வேலைக்காரன் எங்கே போனான்..?"

"அவன் இன்னிக்கு லீவு சொல்லிட்டுப் போயிட்டான். ஆமா. நீ எங்கே போயிட்டு வர்றே..?"

"ஒரு ஹார்ட் பேஷண்ட். ரொம்பவும் க்ரிட்டிகல் ஸ்டேஜ். அட்டெண்ட் பண்ணிட்டு வர லேட்டாயிடுச்சு.."

சொல்லிக் கொண்டே தன் அறையை நோக்கி நடக்க முயன்ற மணிக்குமாரை தோளைத் தொட்டு நிறுத்தினார் செல்வபாண்டியன்.

"ஒரு நிமிஷம்.."

"என்னப்பா..?"

"உன்னை அவசரமாப் பார்த்துட்டுப் போறதுக்காக யாரோ ஒரு ஆள் வந்து ஹால்ல வெயிட் பண்ணிட்டிருக்காங்க.. வா.. வந்து பாரு.."

"இந்த நேரத்துல யார்..?"

"வந்துதான் பாரேன்.."

சொல்லிவிட்டு செல்வபாண்டியன் நடக்க ஆரம்பித்துவிட மணிக்குமார் தொடர்ந்தான்.

ஹால் வந்தது.

அரையிருட்டான ஹால் சோபாவில்

உட்கார்ந்திருந்த அந்த நபரைப் பார்த்ததும் முகம் மாறினான் மணிக்குமார்.

வயலெட் ஐலேண்டுக்கு மணிக்குமார் அனுப்பி வைத்த கூலிப்படை ஆள்.

செல்வபாண்டியன் கேட்டார்.

"என்ன மணி.. இவன் யார்னு தெரியுதா..?"

மணிக்குமார் சுவாசிக்க சில விநாடிகள் திணறிவிட்டு தலையாட்டினான்.

"தெ..தெ... தெரியலையே.."

சோபாவில் உட்கார்ந்திருந்த ஆள் கதறிக் கொண்டே எழுந்து வந்தான்.

"அப்படிச் சொல்லிடாதீங்க சார்.. போலீஸ் அடியை என்னால தாங்க முடியலை.. நீங்க சொல்லித்தானே அந்தமானுக்குப் போனேன். உண்மையைச் சொல்லிடுங்க சார்.. காமோத்தையும், சியாமளாவையும் கொலை செய்யச் சொல்லி நீங்கதானே என்னை அனுப்பி வெச்சீங்க..?"

மணிக்குமாரின் மனசுக்குள் ஒரு சைரன் அலறியது.

'விஷயம் எங்கேயோ கசிந்துவிட்டது.'

'சமாளித்தாக வேண்டும்..'

மணிக்குமார் செயற்கையான கோபத்தோடு அவன் மேல் பாய்ந்தான்.

"டே..டேய்.. யார்ரா.. நீ..? யார் சொல்லிக் கொடுத்து இப்படியெல்லாம் பேசிட்டிருக்கே..?"

கூலிப்படை ஆள் மணிக்குமாரின் கோபத்தில் சிக்கிக் கொண்டு நசுங்க, பின்பக்கம் அந்தக் குரல் கேட்டது.

"மணிக்குமார் அவனை விட்டுடு.. உண்மையை சொல்லிட்டிருக்கற அவனை எதுவும் பண்ணிடாதே.."

கேட்டது பழக்கமான குரலாக இருக்கவே திரும்பிப் பார்த்தான் மணிக்குமார்.



காமோத் நின்றிருந்தான்.

அவனுக்குப் பக்கத்தில் சியாமளாதேவி.

## 22

உச்சந்தலையில் இடி விழுந்தமாதிரியான ஒரு அதிர்ச்சியில் மணிக்குமார் உறைந்து போய் நிற்க -

காமோத் மெல்ல நடை போட்டு மணிக்குமார்க்குப் பக்கத்தில் வந்து நின்றான்.

"இதை நீ எதிர்பார்த்து இருக்க மாட்டே இல்லையா மணி..? நானும் சாகலை.. சியாமளாவும் சாகலை.. எங்களுக்கு உயிர் கொடுத்தது யார் தெரியுமா..? அதோ அவர்தான்.."

காமோத் கையை நீட்ட - மணிக்குமாரின் அதிர்ச்சியான முகம் அவன் காட்டிய பக்கம் போனது.

ஹாலின் தூண் மறைவிலிருந்து ஒரு நபர் வெளிப்பட்டு புன்னகையோடு வந்தார்.

"மிஸ்டர். மணிக்குமார்.. நான் யார்னு உங்களுக்குத் தெரியாது.. என் பேர் சுப்பிரமணியன். கடந்த ஆறு மாச காலமா லிட்டில் அந்தமானில் மோட்டார் போட்டை ஓட்டுகிற வேலை பார்த்துகிட்டு இருக்கேன். உண்மையிலேயே நான் படகை ஓட்டுகிற ஆசாமி கிடையாது. போலீஸ் க்யூ ப்ராஞ்சில் ஒரு ஆபீஸர். சமீபகாலமா வயலட் ஐலேண்டுக்கு தீவிரவாதிகள் வந்துட்டுப் போறதா எங்க டிபார்ட்மெண்ட்டுக்கு தகவல் கிடைச்சது. அந்த வேலையை கண்காணிக்கத்தான் போட் ட்ரைவரா மாறியிருந்தேன். சியாமளாதேவியும், காமோத்தும் என் படகில் ஏறியபோது அவங்க ரெண்டு பேரும் லவ்வர்ஸ்னு நினைச்சேன். படகு லிட்டில் அந்தமானிலிருந்து வயலெட் ஐலேண்டுக்குப் புறப்பட்ட கொஞ்ச நேரத்துலயே வேற ஒரு போட்ல ஒரு ஆள் ஃபாலோவ் பண்ணிட்டு வந்தான். என்னோட போலீஸ் பார்வைக்கு அவன் தப்பான ஆசாமின்னு பட்டது.

படகு வயலெட் ஐலேண்ட் போய்ச் சேர்ந்ததும் காமோத்தும் சியாமளாதேவியும் ஹோட்டல்ல ரூம் எடுக்கப் போனாங்க. படகுல அவங்களை ஃபாலோவ் பண்ணிட்டு வந்த ஆளும் ஹோட்டலுக்குள்ள போனான். எனக்கு சந்தேகம் அதிகமாயிடுச்சு. இனிமே அவனை விடக் கூடாதுன்னு நினைச்சு ஒரு இடத்துல அவனை கார்னர் பண்ணி மடக்கி போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போய் லாக்கப்ல வெச்சு தட்டி எடுத்தேன். உண்மை வெளியே வந்தது. அவன் ஒரு கூலிப்படை ஆள். அவன் சொன்ன ஸ்டேட்மெண்ட் இதுதான், சென்னையில் இருக்கற டாக்டர் மணிக்குமார் சொல்லித்தான் இந்த காமோத்தையும், சியாமளாதேவியையும் கொலை பண்ண வந்தேன். எதுக்காக இந்தக் கொலைன்னு கேட்டபோது அது பற்றித் தனக்குத் தெரியாதுன்னு சொல்லிட்டான். நீங்க அமர்த்தியிருக்கற இந்தக் கூலிப்படை ஆளோட ஸ்டேட்மெண்ட்டை வெச்சே உங்களை என்கொய்ரி பண்ணியிருக்கலாம். அப்படி என்கொயர் பண்ணும்போது நீங்க இல்லவே இல்லைன்னு சாதிச்சு தப்பிச்சுப் போகவும் வாய்ப்பு இருக்கு. ஸோ.. ஒரு நாடகத்தை அரங்கேற்ற போலீஸ் டிபார்ட்மெண்ட்ல முடிவு பண்ணினோம்.."

மணிக்குமார் வியர்த்து திகைத்துக் கொண்டிருக்க, சுப்பிரமணியன் தொடர்ந்தார்.

"சியாமளாதேவியும் காமோத்தும் கொலையாகும் செய்திகளைக் கேட்டா மணிக்குமாரோட ரியாக்ஷன் என்ன என்பதை அப்சர்வ் செய்யும்படி சென்னை போலீஸைக் கேட்டுகிட்டோம். அதன்படி உயிர்க்கு ஆபத்து இல்லாத ஸேடடேட்டீவ் காப்ஸ்யூல் புல்லட்களை உபயோகப் படுத்தி மொதல்ல சியாமளாதேவியை சுட்டோம். காமோத் அதிர்ச்சியாகி செல்போன்ல மணிக்குமார்கிட்டப் பேசினார். அதுக்கப்புறம் காமோத்தை கொஞ்சம் அலைக்கழிக்க வெச்சு அவரையும் ஸேடடேட்டீவ் காப்ஸ்யூல் மூலமா வீழ்த்தினோம். இந்த வகையான புல்லட்கள் மனித உடலின் தோல் பரப்பை மட்டும் தாக்கி ஒரு காயத்தை உண்டாக்கி இரத்தத்தோடு கலந்து காப்ஸ்யூல் மருந்து அதுல கரைந்து உடம்பை உடனே உணர்விழக்கச் செய்யும்.. கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் வரைக்கும் அந்த மயக்கநிலை நீடிக்கும். அதுக்குப் பிறகு அவங்க நார்மலுக்கு வந்துட முடியும். இப்படி எங்களால மயக்கத்துக்கு உள்ளான சியாமளாதேவியும், காமோத்தும் எங்களோட இடத்துக்கு கொண்டு வரப்பட்டு மயக்கம் தெளிஞ்சதும் விசாரிக்கப் பட்டாங்க. அவங்களும் டாக்டர் மணிக்குமார் க்ரிமினல் மைண்ட் உள்ளவர். அவர் இப்படியெல்லாம் செய்யக்கூடிய கிரிமினல்தான்னு சொன்னாங்க. எதுக்காக இந்தக் கொலை முயற்சின்னு கேட்டோம். நந்தா விவகாரம் வெளியே வந்தது. சென்னை போலீஸை அப்பப்ப காண்டாக்ட் பண்ணி தகவல் கொடுத்துட்டே இருந்தோம். உங்க ஃபேசியல் எக்ஸ்ப்ரஷனை க்ளியரா அப்சர்வ் பண்றதுக்காக நாளைக்குக் காலைல காமோத், சியாமளாதேவியோட டெட் பாடிகள் போஸ்ட் மார்ட்டம் முடிஞ்சு ப்ளைட்ல வரப்போறதா இன்ஸ்பெக்டர் ஒருத்தர் இன்னிக்கு சாயந்திரம் வந்து உங்ககிட்ட சொல்லிட்டுப் போனார். அதுக்குப் பிறகு உங்க நடவடிக்கைகளை போலீஸ் உன்னிப்பா கவனிக்க ஆரம்பிச்சது. நீங்க போன இடத்தையெல்லாம் நோட் பண்ணினாங்க. கடைசியா போய்ட்டு வந்த வீட்டையும் போலீஸ் ரவுண்ட்அப் பண்ணி கதவோட லாக்கரை உடைச்சு தாரிணியை மீட்டுட்டாங்க. உங்களை உங்க வீட்டிலேயே உங்க அப்பாவுக்கு முன்னாடியே இப்படி ட்ராப் பண்ண நான் ஆசைப்பட்டேன். ட்ராப் பண்ணிட்டேன்."

செல்வபாண்டியன் மகனை ஏறிட்டுக் குரல் தழுதழுத்தார்.

"டாக்டர்க்குப் படிச்ச நீ இப்படி ஈனத்தனமான காரியங்களைச் செய்யலாமா? எய்ட்ஸ் நோயைக் குணப்படுத்தற மருந்து இந்தியாவில் இருக்கற யார் கண்டுபிடிச்சாலும் சரி. அது இந்தியனாய் இருக்கற ஒவ்வொருத்தருக்கும் பெருமை. ஆனா. நீ அதை ஒரு வியாபாரப் பொருளா நினைச்சு பணம் சம்பாதிக்க முயற்சிப்பேன்னு நான் கொஞ்சம் கூட நினைச்சுப் பார்க்கலை. ஒரு பொண்ணைக் கடத்தறதும், உயிருக்கு உயிராய்ப் பழகின ஆட்களையே கொல்ல நினைக்கறதும் எவ்வளவு ஈனத்தனமான காரியம்னு தெரியுமா..?"

மணிக்குமார் கண்களில் நீரோடு அப்பாவை ஏறிட்டு பார்த்துவிட்டுத் தலைகுனிந்தான்.

"அ... அப்பா.. என்னோட தண்டனைக்காலம் முடிஞ்சு வரும்போது நான் ஒரு நல்ல மனுஷனா மாறியிருப்பேன். புரொபஸர் ஹரிச்சந்தர் கண்டு பிடிச்ச எய்ட்ஸ் நோய்க்கான மருந்து உண்மையிலேயே அற்புதமான மருந்து. நான் ஒரு எய்ட்ஸ் நோயாளிக்கு *அதைக் கொடுத்துப் பார்த்ததுல நல்ல சக்சஸ் ரேட் தெரிஞ்சது. நீங்க அதைக் கன்டினியூ பண்ணணும். எய்ட்ஸ் நோயை இந்த உலகத்துலயே இல்லாமப் பண்ணணும்."

செல்வபாண்டியன் மகனின் தோளைத் தட்டிக் கொடுத்து விட்டு கண்ணீரைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் மெல்ல நகர்ந்தார்.

## 23

இந்த இருபத்தி மூன்றாம் அத்தியாயம் முழுவதும் தாரிணி சிரித்தபடியே பத்திரிகை நிருபர்களுக்கும், டி.வி. நிருபர்களுக்கும் பேட்டி கொடுத்துக் கொண்டிருந்தாள்.

வீடியோ காமிராக்கள் வெளிச்ச மழை பொழிந்து கொண்டேயிருந்தன.

(முற்றும்)



# நீயிருக்கும் நெஞ்சமடி...



6

திரு. கிருபாகரன்

மாற்றங்கள் எல்லோர் வாழ்க்கையிலும் நிகழக் கூடிய ஒன்றுதான். எந்த ஒரு மாற்றமும் எல்லோருக்கும் நன்மையாகவே அமையும் என்பதில் எனக்கு நிறையவே ஈடுபாடு உண்டு. மாற்றங்கள் இல்லையேல் மனிதன் இல்லை. எந்த மாற்றத்தையும் மனிதன் சந்தித்துத்தான் ஆக வேண்டும். அது இயற்கையின் நியதி. அப்படியொரு மாற்றம்தான் எனக்கும் ஏற்பட்டது.

நான் வேலை பார்க்கும் அலுவலகத்தில் நாவல்களைக் கணிப்பொறியில் டைப்பிங் செய்வதற்காக சுகன்யா புதியதாகச் சேர்க்கப் பட்டாள். சுகன்யா பார்ப்பதற்கு எளிதாகவும், அமைதியாகவும், அழகாகவும் இருப்பாள். யார் எதைக் கேட்டாலும், எது பேசினாலும் சிரிப்பு ஒன்றுதான் அவள் பதிலாக இருக்கும். ஒரே ஒரு காரணம் என்னை அவள் பக்கம் மிகவும் ஈர்த்தது. அது என்னவென்றால், அவள் தன் துப்பட்டாவை எப்போதும் இருபுறமும் சுடிதாருடன் சேர்த்து, கொஞ்சமும் விலகாதபடி இணைத்திருப்பாள். இது சாதாரண விஷயம் தான் என்றாலும் என்னை அது மிகவும் கவர்ந்தது. ஆனால் இது நிச்சயமாகக் காதல் இல்லை. ஏதோ ஒரு நேசம்... நட்பு... அவ்வளவுதான்...

மற்ற எல்லோரையும்விட என்னிடம் அவள் கொஞ்சம் அதிகமாகவே பேச ஆரம்பித்தாள். பொதுவாக கம்ப்யூட்டரைப் பற்றித்தான் எங்கள்